Vol.6, Issue 5 | Annual Subscription ₹ 480

@NewsRotary


/RotaryNewsIndia

அக்டோபர் 2023

# ரோட்டரி நியூஸ்

இந்தியா

www.rotarynewsonline.org



Rotary

Wrapper Front and Front Inside - Tamil - October 2023.indd 1 9/27/2023 12:09:04 PM

ADVT.

A Project by
Rotary Club of Virudhunagar
RI Dist-3212




RYLA
Be an Entrepreneur
Certification in Entrepreneurship




Rotary

Who Can Participate in RYLA?
Rotaractors | Third & Fourth Year UG Students
First & Second Year PG Students
Graduates & Post Graduates between ages 20 and 28

A Comprehensive
**ENTREPRENEURSHIP DEVELOPMENT WORKSHOP**
in 3500 Minutes



To build and groom young Entrepreneurs

Stop searching jobs
Start producing jobs

- Formula to Choose the Right Business
- Procuring Investments at Ease
- Productive People Management
- Digital & Organic Marketing Strategies
- Profit Making Techniques
- Showstopper Business Plans

Only **32** Participants Per Batch

On Board **876** Through 28 Editions

The Top 2 Performers of Each Batch FLY TO SINGAPORE* (Industrial Visit) Free of Cost.

- No. of Participants, Who have Started their own Enterprises-146
- Fly to Singapore Winners-56

BUSINESS PLAN | POWER SPEAKERS | CONTINUOUS HANDHOLDING | INVESTORS MEET | LOT MORE SURPRISES

**UPCOMING BATCH DATES**
**Batch 30 : 20th, 21st & 22nd OCT, 2023**
Batch 31 : 17th, 18th & 19th NOV, 2023
Batch 32 : 15th, 16th & 17th DEC, 2023

**INVESTMENT** - Rs.2500 Only
(Incl. Accommodation / Food / T-Shirt / Certification / E-Book / CREA Programs)

**VENUE**
Hotel St. Antony's Residency
Sipcot Industrial Growth Center
Gangaikondan, Tamilnadu

**CONTACT FOR REGISTRATION: 94431 66650 / 94433 67248**

LEKHA ads/Oct 23/ Rotary/1

PG | IDHAYAM PROMISE OF HEALTH AND HAPPINESS | Srinidhi Building Sustainable Relationship | K.V. Ramaswamy MEMORIAL TRUST



Wrapper Front and Front Inside - Tamil - October 2023.indd 2 9/27/2023 12:09:03 PM

# உள்ளே


**12**
திறந்தவெளி கல்வியின் மாயம்

**22**
அஸ்ஸாமில் தேயிலை பறிப்பவர்களின் கண் பரிசோதனை

**24**
குறைபாடுகள் உள்ள குழந்தைகளுக்கு சிறப்புக் கல்வி

**30**
ஒரு நகரத்தை உருமாற்றிய கதை

**38**
காதல், கடிதங்கள் மற்றும் நெகிழ்ச்சி

**42**
கிராமப்புற பெண்களின் கல்விக்கு உதவும் திட்டம்

**48**
இருளர் குடும்பங்களுக்கான மாதிரி நகரியம்

**52**
மனித கடத்தலுக்கு எதிராக குரல் எழுப்பும் ரோட்டராக்டர்கள்

**60**
“ஃபிட் இந்தியா”வுக்காக குட்டநாட்டிலிருந்து லடாக் வரை

**62**
கொஞ்சம் துணிகரம், கொஞ்சம் தூய்மை

**68**
லக்ஷ்மிகாந்த்-பியாரேலால்: வசூல் ராஜாக்கள்

**74**
அன்பு இல்லாத ஆசிரியர்

**76**
உடற்தகுதியைக் கண்டறிதல்








Inside - Tamil - October 2023.indd 3 9/27/2023 2:58:29 PM

## மிகச் சிறந்த திட்டங்களின் விவரிப்பு

*RC நீல்கிரீஸின் மிகச் சிறந்த முயற்சிகளைப்பற்றிப் படித்து நாங்கள் பெருமைப்படுகிறோம். இந்தச் சங்கம் ஒரு பள்ளியையும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளையும் புதுப்பித்திருப்பது பாராட்டவேண்டிய முயற்சி. இதுபோன்ற திட்டங்கள் மற்ற ரோட்டரி சங்கங்களுக்கு முன்னோடியாக, எடுத்துக்காட்டாக அமைகின்றன, அவர்களையும் இதுபோன்ற முன்னெடுப்புகளை நடத்தத் தூண்டுகின்றன. 1967ல் இந்தப் பள்ளி அமைக்கப்பட்ட நிலம் ஒரு ரோட்டரியனால் கொடையளிக்கப்பட்டது என்பது குறிப்பிடவேண்டிய செய்தி. குழந்தைகளுக்கு ரோட்டரி சக்கரத்துடன் சீருடைகள், காலணிகள் வழங்கப்பட்டுள்ளது ரோட்டரியின் தோற்றத்தை மேலும் உயர்த்தியுள்ளது. ஏர் கம்மொடோர் சஞ்சய் கன்னா, அர்ப்பணிப்புள்ள சங்கக் குழுவின் முன்னெடுப்பை நாங்கள் பாராட்டுகிறோம்.*

*கர்னல் விஜயகுமார், RC ஆலப்பி கிரேட்டர் — D 3211*




*பெட்டடி பள்ளியில், கிராமப்புற மாணவர்களுக்கு உதவுகிற ஒரு சிறந்த திட்டத்தை நிறைவேற்றியுள்ளது RC நீல்கிரீஸ். ஆனால், இந்தப் பள்ளியின் மாணவர் எண்ணிக்கை மிகக் குறைவு. நம் ரோட்டரி நண்பர்கள் இன்னும் நிறைய மாணவர்களை இங்கு சேர்க்க முயலவேண்டும்.*

*S மோகன், RC மதுரை வெஸ்ட் — D 3000*

*மாதிரிப் பள்ளி ஒன்றை உருவாக்கியுள்ள RC நீல்கிரீஸுக்குப் பாராட்டுகள். RI தலைவர் கார்டன் மெக்கினல்லி இந்திய, பாகிஸ்தான் ரோட்டரியன்களை எடுத்துக்காட்டாகக் காண்பித்து அமைதி உருவாக்கம்பற்றி எழுதியுள்ளார். ஆசிரியர் குறிப்பு சிறப்பானது, ஊக்கம் தருவது, எழுத்தறிவு மாதத்துக்குப் பொருத்தமானது.*

*RID அனிருதா ராய்சௌத்ரியின் செய்தி, மாற்றத்தைக் கொண்டுவருவதில் கல்வியின் முக்கியத்துவத்தைச் சுட்டிக் காண்பிக்கிறது.*

*பெண் கைதிகளுக்கு மகிழ்ச்சியைக் கொண்டுவந்த RC பிலாஸ்பூர், தொண்டுப் பயணம், ரோட்டரி தபால்தலைகளை ஆர்வத்துடன் திரட்டுபவர், உள்ளிட்ட மற்ற கட்டுரைகள் அனைத்தும் ஆர்வத்தைத் தூண்டின.*

*ஃபிலிப் முலப்பொனெ M T*
*RC திருவனந்தபுரம் சப்அர்பன் — D 3211*

மறைந்த பினோடா பானர்ஜி, வாபி-யில் உள்ள தங்கள் வீட்டில், ரோட்டரி பொருட்கள், புத்தகங்கள், சிற்பங்கள் போன்றவற்றைக் காட்சிப்படுத்தும் அருங்காட்சியகம் ஒன்றைத் தொடங்கவேண்டும் என்று கண்ட கனவை PRIP கல்யாண் பானர்ஜி உண்மையாக்கியுள்ளார். எழுத்தறிவுக் காட்சிக்கூடம் ஒன்றை அமைக்கும்படி நாங்கள் PRIP பானர்ஜி அவர்களைக் கேட்டுக் கொள்கிறோம். 1993–94ல், நான் RID 3000ன் விருதுக் குழுத் தலைவராக இருந்தபோது, RC வாபி-யைச் சேர்ந்த, மென்மையாகப் பேசும் இந்த மனிதரைச் சந்தித்தேன். அவர் விருதுகளை வழங்கிப் பேசினார், பின்னர் RI தலைவர் ஆனார்.

V R T துரைராஜா
RC திருச்சிராப்பள்ளி — D 3000

பெங்களூரு சங்கம் ஒன்று ரூ.4 கோடி செலவில் 214 அங்கன்வாடிகளைப் புதுப்பித்திருப்பது, ரோட்டரியின் பணிக்கான சிறந்த எடுத்துக் காட்டாகவும் அவர்களுடைய உறுதிப்பாட்டைக் காண்பிக்கும் வகையிலும் அமைகிறது. அர்ப்பணிப்புள்ள தனி நபர்கள் குழுவாகச் சேர்ந்தால் அவர்கள் தங்களுடைய சமூகத்தில் எப்படிப்பட்ட தாக்கத்தை உண்டாக்க முடியும் என்று இது காண்பிக்கிறது.

அஜய் ஜெயின்
RC அகமத்கர் — D 3090

இளைஞர்களுடன் உரையாடி அவர்களுடைய எதிர்காலத்தைப் பாதுகாக்க வேண்டும் என்று PRIP பானர்ஜி அழைப்பு விடுத்துள்ளது வெறும் சிந்தனை இல்லை, செயலாகக்கூடிய பணி. ரோட்டரி தன்னுடைய சமூகத் திட்டங்களின் மூலம் இளம் தலைவர்களுக்கு ஆற்றல் அளிக்கிறது, வருங்காலத்தை வடிவமைக்கிறது.

டாக்டர் ரவி சர்மா
RC அகமத்கர் — D 3090

ரோட்டரி செய்திகள் ஆகஸ்ட் இதழில் 80% பக்கங்கள் சேவைத் திட்டங்களுக்கு வழங்கப் பட்டிருந்தன. இப்படிப் பல மிகப் பெரிய சேவைத் திட்டங்களை ஒரே இடத்தில் காண்பது வியப்புதான். அங்கன்வாடி கட்டுரையில், இது போன்ற பணிகளில் அரசியல் வாதிகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டாம் என MLA ரோட்டரியன் களுக்கு அறிவுரை சொல்வது சரி.

கோபாலகிருஷ்ண
நடராஜன் DRFC — D 3212

மன நலம்பற்றிய RI தலைவருடைய செய்தி பொருளுள்ளது. 200க்கும் மேற்பட்ட அங்கன்வாடிகளைப் புதுப்பித்துள்ள RC பெங்களூர் இந்திராநகர்-க்குப் பாராட்டுகள். PRIP சேகர் மேத்தா எழுதிய ஒரு சிறு மாரத்தானை வெல்லுதல் மற்றும் மூளையில் நஞ்சு நீக்குதல் ஆகியவை மிகவும் ஊக்கம் அளித்தன.

ஜேக்கப் மாத்யூ கவலம்
RC எருமேலி — D 3211



Letters to the Editor - Tamil - October 2023.indd 4 9/27/2023 12:24:51 PM

ஆகஸ்ட் இதழில், ரோட்டரியன்கள் இளைஞர்களுடன் உரையாட வேண்டும் என PRIP பானர்ஜி வலியுறுத்துகிறார், ஆளுநராக வெற்றி பெறுவதற்கு “அமைதியும் புன்னகையும்” தேவை என்கிறார் RID A S வெங்கடேஷ். சங்கத் தலைவர்கள் பல சவால்களைச் சந்திக்கிறார்கள், அவர்களுக்கும் இந்த அறிவுரை பொருந்தும்.

முனியப்பா D P
RC KGF பிரைம் — D 3191

## சிந்தனையைத் தூண்டும் ஆசிரியர் பக்கம்

ஆகஸ்ட் இதழில் ஆசிரியர் ரஷீதா-வின் ஆசிரியர் குறிப்பு, இந்த ஆண்டு நம் பகுதிகளில் ஏழு பெண் ஆளுநர்கள் பொறுப்பேற்றிருக்கும் மகிழ்ச்சி செய்தியைத் தெரிவிக்கிறது. அவர்களுக்கு என் மனமார்ந்த வாழ்த்துகள்.

R ஸ்ரீனிவாசன்
RC பெங்களூர் J P நகர் — D 3191

ஆக்ஸ்ட் இதழின் அட்டைப் படம் மிக அழகாக இருந்தது. அந்த இதழில் ஆசிரியர் இவ்வாறு எழுதியிருப்பது மிகச் சரி: “ஓர் ஆறு எப்போதும் மறப்பதில்லை. பல பத்தாண்டுகள், நூற்றாண்டுகளுக்குப்பிறகும், ஆறு திரும்பி வந்து எல்லைகளை மீண்டும் கைப்பற்றுகிறது.”

படிக்கும் பழக்கம் குறைந்துவரும் சூழ்நிலையில், RCகள் ஹைதராபாத் ஸ்மார்ட் சிட்டி, ஜெய்சல்மேர் சுவர்ண நகரி ஆகியோர், ஜெய்சல்மேர் பள்ளி ஒன்றில், நலிந்த பின்னணியிலிருந்து வரும் மாணவர்களுக்கென ஒரு நூலகத்தை வழங்கியிருப்பது மிகச் சிறப்பு. பிளாஸ்டிக்கை மறுப்பது எப்படி மற்றும் மூளையில் நஞ்சு நீக்குதல் ஆகியவை பொருளுள்ள கட்டுரைகள். ஏழு பெண் கவர்னர்களை வரவேற்போம், வாழ்த்துவோம்.

ராஜ் குமார் கபூர்
RC ரூப்நகர் — D 3080

ஆசிரியர் பக்கத்தில் ஆறுகளுக்கும் அவற்றின் எல்லைகளுக்கும் இடையிலான சுழல் உறவை நீங்கள் விவரித்திருந்தது நெஞ்சைத் தொட்டது. ஏனெனில், இயற்கையின் மீள்திறன், மனித குலத்தின் பேராசைக்கு இடையிலான சிக்கலான சமநிலையை அது பிரதிபலித்தது. சமீபத்தில் யமுனை ஆற்றில் ஏற்பட்ட வெள்ளம், அது உண்டாக்கிய தாக்கம், அதைத் தொடர்ந்த குற்றச்சாட்டு ஆகியவற்றைப்பற்றிய உங்கள் கட்டுரை, ரோட்டரியின் ஏழாவது கவனப் பகுதியான சுற்றுச்சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியது.

ஏழு பெண் ஆளுநர்கள் பொறுப் பேற்றிருப்பது வரவேற்கவேண்டியது. பெண்களை ‘இரண்டாம் பாலினமாக’ப் பார்ப்பது பற்றிய சைமோனெ டி பியுவொய்ரின் பார்வைபற்றிய உங்கள் குறிப்பு ஆழமான தாக்கத்தை உண்டாக்கியது, நம் முன்னேற்றத்துக்குத் தொடர்ந்து சவால் விடுகிற சமூகச் சமநிலையின்மைகளைச் சுட்டிக்காண்பித்தது.

சுனில் குமார் அரோரா
RC ஷில்லாங் — D 3240

தங்கள் இடத்தைத் திரும்பப் பெறுதல் என்ற தலைப்பிலான ஆசிரியர் பக்கக் கட்டுரை மிகச் சிறப்பாக இருந்தது. அத்துடன், ரஷீதாவின் இன்னொரு கட்டுரையான ஜெய்ப்பூர் கை, கால்கள் வழியாக நம்பிக்கை அளித்தல் மிகச் சிறப்பாக அமைந்திருந்தது. RI கிரேட் பிரிட்டன் மற்றும் அயர்லாந்துக்குப் பாராட்டுகள். திருப்பூரில் ரோட்டரி அமைத்த மிகப் பெரிய மருத்துவமனை என்ற கட்டுரை மிகச் சிறப்பாக இருந்தது.

டேனியல் சிட்டிலப்பிள்ளி
RC கலூர் — D 3201

சுசீலா, தென்னிந்தியக் குயில் கட்டுரையை எழுதிய S R மது அவர்களுக்குப் பாராட்டுகள். புகழ் பெற்ற இந்தப் பாடகி கின்னஸ் உலகச் சாதனைப் புத்தகத்தில் இடம்பெற்றிருப்பதால், ஒரு ரோட்டரி சங்கம் அல்லது RI மாவட்டம் அவருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கிப் பெருமைப்படுத்தியிருக்கவேண்டும்.

சங்கர் மன்காடு
RC மெட்ராஸ் — D 3232

P சுசீலாபற்றிய கட்டுரை ஆர்வத்தைத் தூண்டியது. இந்தச் சாதனைப் பாடகி 40,000க்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளதாகவும், அவருடைய மிகச் சிறந்த ரசிகர்கள்கூட அவருடைய பாடல்களில் 35%க்கு மேல் கேட்டிருக்கமாட்டார்கள் என்றும் இசை விமர்சகர் ஸ்ரீராம் லக்ஷ்மண் தெரிவிக்கிறார். இது மிக உண்மை.

S முனியாண்டி, RC திண்டுக்கல் ஃபோர்ட் — D 3000

ரோட்டரியின் இந்த ஆண்டிற்கான கருப்பொருள் — உலகில் நம்பிக்கையை உருவாக்குவோம் — நம் சமூகங்களை மேம்படுத்த ஊக்குவிப்பதாக உள்ளது.

ஆத்மராம் குப்தா
RC மகாராஜ்கன்ஞ் — D 3120

**அட்டையில்:** RC *இந்துார் ஆதர்ஷ்,* RID 3040, *தலைவர் லலிதா ஷர்மா அனந்த் பூங்கா ஒன்றில் நடத்தும் பள்ளிக்கூடத்தில் மாணவியர்.*

தங்கள் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. மேலும் உங்கள் சங்கத்தின் நல திட்டங்கள் புகைப்படங்களுடன் rushbhagat@gmail.com அல்லது rotarynewsmagazine@gmail.com என்ற மின்னஞ்சலிற்கு அனுப்பலாம். WHATSAPP செய்திகள் ஏற்றுக்கொள்ளபடமாட்டாது. மேலும் ரோட்டரி செய்திகளை எங்கள் www.rotarynewsonline.org என்னும் இணைய தளத்தில் Rotary News Plus என்னும் இதழில் காணலாம்.



Letters to the Editor - Tamil - October 2023.indd 5 9/27/2023 12:24:51 PM

RI தலைவரிடமிருந்து...



# மனநலமும் உங்கள் சங்கமும்

உலக சுகாதார நிறுவனம் (WHO) அக்டோபர் 10 ஆம் தேதியை உலக மனநல தினமாக அறிவித்துள்ளது. மேலும் இந்த ஆண்டு மனநலத்தில் ரோட்டரி சிறப்பு கவனம் செலுத்தி வருவதால், உறுப்பினர்களை சந்திக்கும் போது என்னிடம் கேட்கப்படும் கேள்விகளுக்குப் பதிலளிக்க நான் விரும்புகிறேன். எனது சங்கத்தை எப்படித் தொடங்குவது?

ரோட்டரி உறுப்பினர்கள் ஏற்கெனவே நடவடிக்கை எடுத்துள்ளதற்கு சில அற்புதமான உதாரணங்கள் உள்ளன. பிலிப்பின்ஸில் உள்ள தியாங்-ஹியாஸ் ரோட்டரி சங்கம், சமூகத்தில் தாய்மார்களுக்கு சில அடிப்படை சுகாதார பரிசோதனைகள் மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறை பற்றிய பயிற்சியை ஊக்குவிப்பதற்காக 12 வாரகால சவாலான பயிற்சியை நடத்தியது.

சவாலின் முடிவில் தாய்மார்கள் ஒரு சிறப்பு பிணைப்பைக் கொண்டிருந்தனர். சுகாதாரக் கல்வி மற்றும் ஆரோக்கியத்துக்கான ஆதரவில் அதிகமான தாய்மார்களை ஈடுபடுத்தும் நோக்கில் இல்லாங் தஹனன் (வீட்டை ஒளிரச் செய்வோம்) என்னும் ரோட்டரி சமூகப் படையை நிறுவ முடிவு செய்தனர். பின்னர் இளைஞர் சேவை, இளம் வயதில் கர்ப்பிணிகளாவதை தடுத்தல், ஆரோக்கியமற்ற பொருள்களை பயன்படுத்தாமல் இருக்க உதவுவது என்ற நோக்கத்துடன் செயல்பட்டனர். ஓராண்டுக்குப் பிறகு ரோட்டரி சமூகப் படை சொந்த சுகாதார மையத்தை திறக்கத் தயாராகி வருகிறது. அதில் தாய்மார்கள் நேரடியாக பங்கு கொண்டு தங்கள் ஆதரவை தெரிவிக்கலாம்.

மற்றொரு வலுவான உதாரணம் கொலராடோவில் உள்ளது. 2021 இலையுதிர் காலத்தில், ஹைலேண்டஸ் ராஞ்ச் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த சிறு குழுவினர், குழந்தைகள் மனநல ஆரோக்கியத் துக்கான கொலராடோ ரோட்டரி சங்கம் சார்பில் எண்டௌமென்ட் பெல்லோஷிப்பை உருவாக்கினர். இது கொலராடோ குழந்தைகள் மருத்துவ மனை, குழந்தைகளுக்கு மனநல சிகிச்சை வழங்குவதற்கான நபர்களைத் தேர்ந்தெடுத்து பயிற்சி அளித்தது. இதன் மூலம் மனநல மருத்துவர்களின் பற்றாக்குறையை குறைத்து அதிக பேருக்கு மனநல சிகிச்சை வழங்க முடிந்தது.

அப்போதிலிருந்து இந்த திட்டம் புதிய ஆதரவாளர்களைக் கொண்டுள்ளது. இப்போது 500,000 டாலர் நிதியுடன் அறக்கட்டளை செயல்பட்டு வருகிறது. இந்த நிதியிலிருந்து கிடைக்கும் முதலீட்டு வருமானம் குழந்தைகள் மருத்துவமனையில் உள்ள உளவியலாளர் அல்லது மனநல மருத்துவருக்கு ஆதரவு அளிக்கும். 2024 வசந்தகாலம் முதல் ஒன்று முதல் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு புதிய நபர் அறிவிக்கப்படுவார். காலப்போக்கில் இது மனநல மருத்துவப் பணியாளர்கள் எண்ணிக்கையை வலுப்படுத்தும். கொலராடோ மற்றும் பக்கத்து மாநிலங்களைச் சேர்ந்த குழந்தை களுக்கு இதன் மூலம் சிகிச்சை அளிக்க முடியும்.

ரோட்டரியிடம் இன்னும் பல சிறந்த மனநலத் திட்டக் கதைகள் உள்ளன. மேலும் உங்கள் சொந்த திட்டங்களை தொடங்கும்போது உங்கள் அனுபவங்களை பகிர்ந்துகொள்ள உங்களை அழைக்கிறோம். மேலும் ரோட்டரி உலகில் மனநலம் பற்றி நீங்கள் பகிர்ந்து கொள்ள விரும்பும் எண்ணங்கள் அல்லது யோசனைகளை *mindhealth@rotary.org* என்ற இணையமுகவரியில் தெரிவிக்கலாம்.

அக்டோபர் 10-ம் தேதி உலக மனநல தினத்தை அங்கீகரிக்கும் வகையில் முகநூல் நிகழ்ச்சியை நடத்த முடிவு செய்துள்ளேன். மேலும் ரோட்டரி உறுப்பினர்கள் இதற்கான பயணத்தை எப்படி தொடரலாம் என்பது குறித்தும் விவாதிக்கப்படும்.

நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்? என்று மட்டும் கேட்காமல் நீங்கள் உண்மையில் எவ்வாறு இருக்கிறீர்கள் என்று கேட்க வேண்டும். இப்படிச் செய்வதன் மூலம் ரோட்டரி தொடர்ந்து உலகில் நம்பிக்கையை உருவாக்க முடியும்.

**கோர்டன் மெக்கினலி**
தலைவர், ரோட்டரி இன்டர்நேஷனல்.



RI President Message - Tamil - October 2023.indd 6 9/28/2023 12:11:31 PM



# வானமே எல்லை

இந்த ஆண்டு ரோட்டரி தலைவரின் குறிக்கோள் உலகில் நம்பிக்கையை ஏற்படுத்துவது. நான் அதை ஆரம்பத்திலிருந்தே விரும்பினேன். ஏனெனில் நம்பிக்கையும், கனவுகளும் இல்லாமல் எந்த வாழ்க்கைதான் தகுதியானது. மேலும் உடல்நலம், சுகாதாரம், அமைதியை மேம்படுத்துவது, வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது, நம் பூமியைப் பாதுகாப்பது, குழந்தைகளுக்கு கல்வி வழங்குவது என ரோட்டரி கவனம் செலுத்தும் அனைத்து பகுதிகளுக்கும் சரியாகப் பொருந்துகிறது.

உங்களில் ஒவ்வொருவருக்கும் பிடித்தமான, ரோட்டரி கவனம் செலுத்தும் பகுதி இருக்கும். என்னுடையது எழுத்தறிவு மற்றும் கல்வி. கல்வி அர்த்தமுள்ள ஒன்று-லட்சக்கணக்கானவர்களை வறுமையிலிருந்து மீட்கும் சக்தி அதற்கு உள்ளது. மனிதர்களின் மனம் தனித்துவமானது, அதன் ஆற்றல் எல்லையில்லாதது. ஆனால், அவற்றில் முத்தாய்ப்பாக உள்ளது கல்விதான். நம்மில் பெரும்பாலானவர்கள் நமது பள்ளி, கல்லூரி நாட்களை திரும்பிப் பார்க்கலாம். நமக்கு பிடித்தமான ஆசிரியர் நம்மிடம் திறமை இருப்பதை அறிந்து ஆர்வத்தை தூண்டலாம் அல்லது ஒரு குறிப்பிட்ட ஆற்றலை மேம்படுத்த ஊக்குவிக்கலாம். நம்மிடம் ஒருவகையான உந்துதலை ஏற்படுத்தலாம். அந்த சக்தி தான், அந்த உந்துதல்தான் நாம் இன்றுள்ள நிலைக்கு காரணமாகும்.

கடந்த மாதம் தமிழகத்தில் நீலகிரி மாவட்டத்தில் உள்ள சாதாரண பஞ்சாயத்து நடுநிலைப் பள்ளியை நீலகிரி ரோட்டரி சங்கத்தினர் கணினி பயிற்சி, அறிவியல் ஆய்வகம், நூலகம் என நவீன வசதிகளுடன் ஒரு மாதிரிப் பள்ளியாக உருவாக்கியதைப் பார்த்தோம். இந்த முறை எங்கள் அட்டைப்பட கட்டுரை தனி ரோட்டேரியனான லலிதா சர்மா, கணவரின் ஆதரவுடன்,-இவரும் ரோட்டேரியன் - (இருவரும் இந்தூர் ஆதர்ஷ் ரோட்டரி சங்க உறுப்பினர்கள் - மாவட்டம் 3040) பள்ளியோ அல்லது கட்டடமோ இல்லாமல் நூற்றுக்கணக்கான ஏழைக் குழந்தைகளின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தி வருகிறார். திறந்த வானத்தின்கீழ் தனது வீட்டிற்கு எதிரே உள்ள பூங்காவில் 250 ஏழைக் குழந்தைகளுக்கு எந்த நேரத்திலும் கல்விகற்பித்து வருகிறார். பின்னர் அவர்களை ஒருங்கிணைக்கிறார். தனியார் மற்றும் அரசு பள்ளிகளில், மற்றும் பல கல்லூரிகளில் படிக்கும் ஏழை மாணவர்களுக்கு தேவைப்பட்டால் கல்விக் கட்டணம் செலுத்தி வருகிறார். வளர் இளம் பெண்கள் அல்லது பள்ளிப்படிப்பை இடைநிறுத்தியவர்கள் தங்கள் தாயுடன் சேர்ந்து வீட்டுவேலை மற்றும் பாத்திரம் கழுவும் வேலையில் இருந்த நிலையில் அவர்களை ஒரு செவிலியராகவும், சிப்லா, பிளிப்கார்ட் போன்ற நிறுவனங்களில் பணியாற்றச் செய்துள்ளார். அவரிடம் கல்வி கற்றவர்களில் வெற்றியாளராக இருக்கும் மயங்க் கட்டாரா, பாலக்காடு ஐ.ஐ.டி.யில் பயின்று பட்டம் பெற்று பெங்களூருவில் ஒரு நிறுவனத்தில் ஆண்டுக்கு ரூ.18 லட்சம் ஊதியம் தரும் நிறுவனத்தில் பணிபுரிகிறார். அவரிடம் படித்து வாழ்க்கையில் முன்னேறி ஆசிரியர், ஆசிரியையாக இருக்கும் சிலர் இன்று, நேரம் கிடைக்கும்போதெல்லாம் திறந்தவெளிப் பள்ளியில் மற்ற குழந்தைகளுக்கு கல்வி கற்பிக்கிறார்கள்.

ரோட்டரி திட்டமாக இல்லாவிட்டாலும் 14 ஆண்டு களாக நீடித்துவரும் இந்த திட்டம், ஒரு தனி நபரின் ஆர்வமும் விடாமுயற்சியும் பல இளைஞர்களுக்கு எப்படி நம்பிக்கையையும், எதிர்காலத்தையும் தருகிறது என்பதைக் காட்டுகிறது. தங்கள் குழந்தைகளை பள்ளியில் படிக்க வைக்குமாறு பெற்றோர்களை சமாதானப்படுத்துவதுதான் கடினமான வேலை. துரதிருஷ்டவசமாக வறுமையுடன் போராடும் பல பெற்றோர்கள் கல்விகற்றலின் மதிப்பை பற்றி சிந்திப்பதில்லை. பசியும் வறுமையும் அவர்களது கனவுகளைக் கொன்று விடுகின்றன.

மற்ற இடங்களில்கூட ரோட்டேரியன்கள் மக்களிடம் நம்பிக்கையை ஏற்படுத்துகிறார்கள். கல்விகற்பதன் அவசியத்தை வலியுறுத்துகிறார்கள். சென்னையில் மெட்ராஸ் சௌத் ரோட்டரி சங்கம், பிரதான பள்ளிகளில் சிறப்புக் குழந்தைகள் கல்வி கற்க ஏற்பாடு செய்து ஒரு அற்புதமான திட்டத்தை செயல்படுத்தி வருகின்றனர். தர்மசாலாவில், தர்மசாலா ரோட்டரி சங்கத்தினர் வளர் இளம் பெண்களுக்கு மீண்டும் பயன்படுத்தக்கூடிய சானிடரி நாப்கின்களை இலவசமாக வழங்கி அவர்களின் கல்விக்கு உதவி வருகின்றனர். மாதவிடாய் காலத்தில் சானிடரி நாப்கின்கள் கிடைக்காததால் சமாளிக்க முடியாத நிலையில் பல வளர் இளம் பெண்கள் வகுப்புகளைத் தவறவிடுகிறார்கள்.

நம்பிக்கையற்ற ஏழை மக்களிடம் நாம் நம்பிக்கை என்னும் தீப்பொறியை பற்றவைத்தால். வானமே எல்லை.

ரஷீதா பகத்



Editor Note - Under the open sky… - Tamil - October 2023.indd 7 9/25/2023 3:03:20 PM

# அழுத்தமில்லாத, மகிழ்ச்சியான ஓய்விடம்



RI மாநாட்டுக்கென சிங்கப்பூர் வருகிறவர்கள் அதை எளிதில் மகிழ்ச்சியான விடுமுறைப் பயணமாக ஆக்கிக்கொள்ளலாம். மாநாடு நடைபெறும் இரண்டு இடங்களிலிருந்தும் இந்தத் தீவில் மிகவும் விரும்பப்படுகிற பூங்காக்கள், பொழுதுபோக்குத் தலங்கள், உணவு, பார்க்கவேண்டிய இடங்களுக்கு MRT ரயில் அமைப்பின் உதவியுடன் எளிதாகச் சென்று திரும்பலாம்.

இடைநிலை நிகழ்ச்சிகள் நடைபெறவிருக்கும் மரீனா பே சான்ட்ஸ் வளாகமே பெரிய சுற்றுலாத் தலம்தான். இங்கிருந்து சிறிது நடந்தால், உயரமான உருக்கு “சூப்பர்ட்ரீ” கலைப் பூங்கா, உலகப் பூக்கள் நிறைந்த பெரிய பசுமைக்குடிலைக் கொண்ட ‘கார்டன்ஸ் பை தி பே’ உள்ளது.

முறுக்கப்பட்ட உருக்கால் ஆன ஹெலிக்ஸ் பாலத்தைக் கடந்து 20 நிமிடம் நடந்தால், சிங்கப்பூர் ஃப்ளையர் ஃபெர்ரிஸ் வீலில் நகரை அழகாகப் பார்க்கலாம். இங்குள்ள திறந்த வெளி உணவுக் கடைகள் பல பண்பாடுகளை வெளிப்படுத்தும், உணவு விலையும் நியாயமாக இருக்கும்.

தேசிய ஸ்டேடியத்தில் நடைபெறும் பொது நிகழ்வுகளில் கலந்துகொள்கிறவர்கள் சிங்கப்பூர் விளையாட்டு மையத்தின் நடுவில் இருப்பார்கள். நீங்களோ உங்கள் விருந்தினர்களோ செயற்கை அலையில் அலைச்சறுக்கு விளையாடலாம், கயாக் வாடகைக்கு எடுத்துச் சுற்றலாம், ஷிமானோ மிதிவண்டி உலகத்துக்குச் சென்று மிதிவண்டி வரலாற்றை அறியலாம், இப்படி இன்னும் பல செயல்பாடுகள்!

சிங்கப்பூரில் பேரங்காடிகள் நிறைந்துள்ளன. மாநாட்டு வளாகங்களில் இரண்டு பேரங்காடிகள் உள்ளன: மரீனா பே சான்ட்ஸ்’ ஆடம்பரக் கடைகள் மற்றும் விளையாட்டு மையத்தில் விளையாட்டுக் கடைகள், செயற்கை கால்ஃப் கருவிகள், மெய்நிகர் எதார்த்த விளையாட்டு அரங்கம், பேரங்காடித் தளங்களைத் தாண்டிச் செல்லும் பாறை ஏறும் சுவர் உள்ளிட்டவற்றைக் கொண்ட கல்லாங் வேவ் மால்.

மே 25 முதல் 29வரை எங்களுடன் இணைந்து உலகுடன் நம்பிக்கையைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

**மேலும் தெரிந்துகொள்ள பதிவு செய்ய:**
convention.rotary.org



**ஆளுநர் குழு**

2981 செங்குட்டுவன் G
2982 ராகவன் S
3000 ஆனந்த ஜோதி R
3011 ஜீதேந்தர் குப்தா
3012 ப்ரியதோஷ் குப்தா
3020 சுப்பாராவ் ராவுரி
3030 ஆஷா வேணுகோபால்
3040 ரீத்து க்ரோவர்
3053 பவன் கண்டேல்வால்
3055 மேஹுல் ரத்தோட்
3056 நிர்மல் ஜெயின் குனாவத்
3060 நிஹிர் தாவே
3070 விப்பன் பாசின்
3080 அருண் குமார் மோங்கியா
3090 கன்ஷியாம் கன்சல்
3100 அஷோக்குமார் குப்தா
3120 சுனில் பன்சல்
3131 மஞ்சு ஃபாட்கே
3132 ஸ்வாதி ஹெர்கல்
3141 அருண் பார்கவா
3142 மிலிந்த் குல்கர்னி
3150 சங்கர் ரெட்டி
3160 மணிக் பவார்
3170 நாசிர் போசத்வாலா
3181 கேஷவ் H R
3182 கீதா B C
3191 உதயகுமார் பார்கவா
3192 ஸ்ரீனிவாச மூர்த்தி V
3201 விஜய்குமார் T R
3203 Dr S சுந்தர்ராஜன்
3204 Dr சேது ஷிவ்ஷங்கர்
3211 Dr G சுமித்ரன்
3212 முத்தையா பிள்ளை R
3231 பரணிதரன் P
3232 ரவி ராமன்
3240 நிலேஷ் குமார் அகர்வால்
3250 பகாரியா S P
3261 மஞ்சித் சிங் அரோரா
3262 ஜெயஸ்ரீ மோஹன்டி
3291 ஹீராலால் யாதவ்

அச்சு மற்றும் பதிப்பாளர் **P T பிரபாகர்** (முகவரி: 15 சிவசாமி சாலை, மைலாப்பூர் சென்னை-4). துகார் டவர்ஸ், 3-வது தளம், 34, மார்ஷல்ஸ் ரோடு, எழும்பூர், சென்னை-600 008-யில் இயங்கும் ரோட்டரி நியூஸ் ட்ரஸ்ட் சார்பில் ராசி கிராபிக்ஸ் பி லிட், 40, பீட்டர்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை- 14 என்ற முகவரியில் அச்சிடப்படுகிறது.
ஆசிரியர்: **ரஷீதா பகத்.**

ரோட்டரி மாத இதழில், பங்களிப்பாளர்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் ஆசிரியர் அல்லது ரோட்டரி நியூஸ் டிரஸ்டின் (RNT) அறங்காவலர்கள், RI ஆகியோரின் கருத்துக்கள் அல்ல. தலையங்கம்/விளம் பரத்தில் வெளியிடப்படும் கருத்துக்களினால் ஏற்படும் இழப்புகளுக்கு எந்த பொறுப்பும் ஏற்க முடியாது. கட்டுரைகளை திருத்தவோ / சுருக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. இதழில் வெளியாகும் கட்டுரைகளை RNT அனுமதியுடன் மட்டும் மறுபதிப்பு செய்யலாம்.

இணையதளம்

RI Director Message + Convention - Tamil - October 2023.indd 8 9/25/2023 6:07:24 PM

**அறங்காவலர் குழுவினர்**

அனிருதா ராய்சௌத்ரி RID 3291
RI இயக்குனர் மற்றும்
RNT தலைவர்

T N சுப்ரமணியன் RID 3141
RI இயக்குனர்

Dr பரத் பாண்ட்யா RID 3141
TRF அறங்காவலர்
துணை தலைவர்

ராஜேந்திர K சாபூ RID 3080

கல்யாண் பானர்ஜி RID 3060

சேகர் மேத்தா RID 3291

அசோக் மஹாஜன் RID 3141

P T பிரபாகர் RID 3232

Dr மனோஜ் D தேசாய் RID 3060

C பாஸ்கர் RID 3000

கமல் சங்வி RID 3250

Dr மகேஷ் கோட்பாகி RID 3131

A S வெங்கடேஷ் RID 3232

குலாம் A வஹன்வதி RID 3141

**செயற்குழு**
**உறுப்பினர்கள்** (2023–24)

ஸ்வாதி ஹெர்கல் RID 3132
தலைவர், ஆளுநர் குழு

ஹீராலால் யாதவ் RID 3291
செயலாளர், ஆளுநர் குழு

முத்தையா பிள்ளை R RID 3212
பொருளாளர், ஆளுநர் குழு

மிலிந்த் குல்கர்னி RID 3142
ஆலோசகர், ஆளுநர் குழு

**ஆசிரியர்**
ரஷீதா பகத்

**துணை ஆசிரியர்**
ஜெய்ஸ்ரீ பத்மநாபன்

**நிர்வாகம் மற்றும்**
**விளம்பர மேலாளர்**
K விஸ்வநாதன்

ரோட்டரி நியூஸ், துகார் டவர்ஸ்,
3-வது தளம், 34, மார்ஷல் சாலை,
எழும்பூர், சென்னை-8, இந்தியா
தொலைபேசி: 044 42145666
*rotarynews@rosaonline.org*
*www.rotarynewsonline.org*

**இதழ்**





# ரோட்டரி மூலம் கனவுகளை வடிவமைத்தல்

அக்டோபர் மாதம் நெருங்கும்போது நமது எண்ணங்கள் ரோட்டரி கவனம் செலுத்தும் முக்கிய பகுதியான பொருளாதாரம் மற்றும் சமூக வளர்ச்சி பக்கம் திரும்புகிறது. இந்த பயணத்தில்தான் நாம் இந்தியாவில் மட்டுமல்ல, உலகத்தில் உள்ள மக்களின் வாழ்க்கையை மாற்றுவதற்கான வழிகளை ஆராய்கிறோம்.

சக குடிமக்களில் கணிசமான பகுதியினர் ஒரு நாளைக்கு 3 டாலருக்கும் குறைவான ஊதியத்திலேயே வாழ்கிறார்கள். இந்த புள்ளிவிவரம், வார்த்தைகளுக்கு அப்பாற்பட்ட ஒரு பதிலைத் தருகிறது. ஆனாலும், இந்த சவால்களுக்குள், நம்பிக்கை ஒளி பிரகாசிக்கிறது. அதுதான் மக்களின் நெகிழ்ச்சி.

லட்சக்கணக்கானோர் தினந்தோறும் துன்பங்களை எதிர்கொள்கிறார்கள். ஆனாலும் மனவலிமையை இழந்துவிடாமல் இருக்கிறார்கள். இந்த அசைக்க முடியாத மன உறுதியானது நமது சமூகங்களின் உள்ளார்ந்த வலிமையைப் பற்றி பேசுகிறது. அங்கு ரோட்டரியின் சேவை அதன் உண்மையான அழைப்பைக் காண்கிறது.

பரந்துவிரிந்த மனித குலத்தின் மற்றொரு உண்மை உயர்ந்து நிற்கிறது. 600 மில்லியன் தனிநபர்கள், மக்கள் தொகையில் பாதிப்பேர் 25 வயதுக்கு உட்பட்டவர்கள். அவர்கள்தான் நமது எதிர்காலத்தை நிர்ணயிப்பவர்கள். அவர்களின் கனவுகள் இன்னும் திறக்கப் படவில்லை. ரோட்டேரியன்களாகிய நாம் இந்த கனவுகளுக்கு வடிவமைக்கும் சக்தியைக் கொண்டுள்ளோம். பொருளாதார வளர்ச்சிக்கு மட்டுமல்ல, ஒவ்வொரு இளைஞர்களின் இதயத்திலும் உள்ள ஆற்றலை வளர்ப்பதற்கும் வழிகாட்டிகளாக இருக்கிறோம்.

நமது திட்டங்கள் தாக்கத்தை ஏற்படுத்துபவை. இந்தியாவில் உள்ள தொழிற்பயிற்சி மையங்கள் இளைஞர்களுக்கு எலெக்ட்ரானிக்ஸ், தையல், தச்சுவேலை மற்றும் பல்வேறு திறன்களை அளித்து, வேலைவாய்ப்பை கண்டறிய அல்லது தொழில் தொடங்கவும் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்கவும் உதவுகின்றன.

கானாவில் சுத்தமான நீர் மற்றும் சுகாதாரத் திட்டங்கள் ஆரோக்கியத்தை மேம்படுத்துவது மட்டுமல்லாமல், பொருளாதார வளர்ச்சிக்கு வழி வகுத்துள்ளன. குவாதமாலாவில் சிறுகடனுதவி கூட்டாண்மைகள் தொழில்களை பெருக்கியுள்ளன. கென்யாவில் கிராமப்பகுதிகளில் உள்ள மருத்துவ கிளினிக்குகள் சுகாதாரச் சேவைகளை மேம்படுத்துகின்றன. இவை மறைமுகமாக பொருளாதார வளர்ச்சிக்கு உதவுகின்றன.


ரோட்டரியின் அர்ப்பணிப்பால் ஈர்க்கப்பட்ட இந்த வெற்றிகள் மாற்றத்தின் கதைகள். நமது செயல்கள் தலைப்புச் செய்திகளாக இல்லா விட்டாலும் நாம் தொடும் வாழ்க்கையில் அழியாத அடையாளங் களை பொறித்து நமக்கு நினை வூட்டுகின்றன. இந்த அக்டோபரில், ஒவ்வொரு சவாலிலும் மாற்றத்திற்கான வாய்ப்புள்ளது என்பதை உணர்ந்து உலகளாவிய சமூகத்தின் விரிவான வளர்ச்சியைக் கொண்டாடுவோம். நாம் சேவை செய்ய முற்படும்போது நமது இதயங்கள் திறந்திருக்கட்டும். கைகள் விரிந்திருக்கட்டும். ஏனென்றால் இந்த சைகைகளின் மூலம்தான் உலகில் நம்பிக்கையை உருவாக்கமுடியும்.

**ராஜு சுப்ரமணியன்**
RI இயக்குனர் 2023–25



RI Director Message + Convention - Tamil - October 2023.indd 9 9/25/2023 6:07:24 PM

# கண்ணுக்கெட்டும் தொலைவில் நம் இலக்கு



24 அக்டோபர் அன்று, உலக இளம்பிள்ளைவாத நாளை முன்னிட்டு, நம்முடைய மிக உயர்ந்த மனிதத்தன்மை இலக்குக்கு நாம் மீண்டும் உறுதியளிப்போம்.

இந்த ஆண்டு, பாகிஸ்தானைச் சேர்ந்த பீபி மர்ஜானா என்ற இளம் நலப் பணியாளரை நாம் நினைவுகூர்வோம். மலைப்பகுதிகளில் உள்ள பனியையும் குளிரையும் பொருட்படுத்தாமல் இவர் 84 குழந்தைகளுக்குத் தடுப்பு மருந்து அளித்தார். இந்தக் குழந்தைகளின் வீடுகள் பல மைல் இடைவெளியில் இருந்தபோதும், இவர் ஒவ்வொரு வீட்டுக்கும் சென்று தடுப்பு மருந்தை வழங்கினார்.

ஆஃப்கானிஸ்தானில், பாகிஸ்தானில் இளம்பிள்ளை வாதம் பரவியுள்ள மற்ற இடங்களில் மர்ஜானாவைப்போல் ஆயிரக்கணக்கான களப் பணியாளர்கள் உள்ளார்கள். இளம்பிள்ளைவாதத்தை முடித்துவைக்கும் கடைசி முயற்சியின் நாயகர்களாக நான் இவர்களைக் கருதுகிறேன்.

பன்னாட்டு இளம்பிள்ளைவாத அகற்றல் முன்னெடுப்பானது ரோட்டரியுடன் இணைந்து தன்னுடைய 2022–26 வியூகத்தின் இரண்டு முதன்மையான இலக்குகளைத் தீவிரமாகப் பின் தொடர்கிறது. முதலில், நாம் வைல்ட் போலியோவைரஸ் வகை 1 பரவலைத் தடுக்க இலக்கு அமைத்துள்ளோம். இந்த ஆண்டு, இதுவரை வெறும் ஆறு பேர்தான் இதனால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். நாம் இந்த வைரஸைக் காணும் கடைசி ஆண்டாக இது அமையுமா?

இரண்டாவதாக, தடுப்பு மருந்தால் பெறப்பட்ட போலியோவைரஸ் வகை 2 அல்லது cVDPV2 எந்தெந்த நாடுகளில் பரவியுள்ளதோ அங்கெல்லாம் அதை முடித்துவைக்க நாம் இலக்கு அமைத்துள்ளோம். சென்ற ஆண்டின் cVDPV2 பதிவுகளில் சுமார் 80% காங்கோ மக்களாட்சிக் குடியரசு, நைஜீரியா மற்றும் யேமனின் குறிப்பிட்ட பகுதிகளில் பதிவாகியுள்ளன. இந்தப் பகுதிகளில் இந்த வைரஸைத் தடுப்பதற்குக் குறிப்பிட்ட வியூகங்களை நாம் செயல்படுத்தவேண்டும்.

உலகெங்கும் உள்ள குழந்தைகளை இளம்பிள்ளை வாதத்தால் ஏற்படக்கூடிய ஊனம் அல்லது மரணத் திலிருந்து பாதுகாக்கும் முயற்சியைத் துணிவோடு ஏற்றுக்கொண்ட அமைப்பு ரோட்டரி. அதை முழுமையாக முடித்து வைக்கும் உறுதித்தன்மை நமக்கு இருக்கவேண்டும்.

உங்கள் சங்கம் அல்லது மாவட்டத்தில் உள்ள போலியோப்ளஸ் சமூகத்தில் இணையுங்கள். அனைத்து உறுப்பினர்களும் இந்த வரலாற்று முயற்சியில் ஈடுபடச் செய்யுங்கள். இளம்பிள்ளைவாதத்தை அகற்றுவதற்கு ரோட்டரி வழங்கும் நன்கொடையை பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை 2-க்கு-1 என்ற விகிதத் தில் தொடர்ந்து பெருக்குகிறது.

நம் இலக்கு கண்ணுக்கெட்டிவிட்டது. மலையில் மர்ஜானா நடந்ததுபோல், நாம் தொடர்ந்து நடப்போம், இலக்கை எட்டுவோம்.

**பாரி ரசின்**
TRF அறங்காவலர் தலைவர்


**ROTARY NEWS PLUS**

படித்தீர்களா?
அல்லது உங்கள் e-mailல் உள்ள Junk folder-க்கு செல்கிறதா?




ஒவ்வொரு மாதமும் நாங்கள் **Rotary News Plus** என்னும் ஆங்கில ஆன்லைன் வெளியீட்டினை ஒவ்வொரு Rotary News சந்தாதாரர்க்கும் e-mail மூலம் அனுப்புகிறோம்.

உங்கள் பெயர், ரோட்டரி சங்கம், மாவட்டம் மற்றும் ஈமெயில் முகவரி ஆகியவற்றை எங்களுக்கு rotarynews@rosaonline.org என்ற முகவரிக்கு பகிரவும்.

**Rotary News Plus** இதழை எங்கள் வளைத்தளமான *www.rotarynewsonline.org*-யிலும் காணலாம்.




Trustee Chair Message + Advt - Tamil - October 2023.indd 10 9/27/2023 11:14:05 AM

# Rotarians!

Visiting Chennai
for business?

Looking for a
compact meeting hall?



Use our air-conditioned Board Room with a seating capacity of 16 persons at the office of the Rotary News Trust.

**Tariff:**

₹2,500 for 2 hours
₹5,000 for 4 hours
₹1,000 for every additional hour

Phone: 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org


## உலக ரோட்டரி எண்ணிக்கை

| | | |
|---|---|---|
| ரோட்டரி சங்கங்கள் | : | 37,010 |
| ரோட்டராக்ட் சங்கங்கள் | : | 11,205 |
| இன்டராக்ட் சங்கங்கள் | : | 14,282 |
| ரோட்டரி கம்யூனிட்டி கார்ப்ஸ் (RCC) | : | 13,117 |
| ரோட்டரியினர் | : | 1,181,334 |
| ரோட்டராக்டர்கள் | : | 166,236 |
| இன்டராக்டர்கள் | : | 328,486 |

*As on September 14, 2023*

## ரோட்டரி உறுப்பினர் எண்ணிக்கை

As on September 1, 2023

| RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians (%) | Rotaract Clubs | Rotaract Members | Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|---|
| 2981 | 138 | 6,070 | 6.29 | 73 | 492 | 33 | 254 |
| 2982 | 84 | 3,750 | 6.40 | 35 | 839 | 87 | 149 |
| 3000 | 136 | 5,940 | 11.78 | 104 | 1,601 | 186 | 215 |
| 3011 | 135 | 5,010 | 28.86 | 84 | 2,401 | 128 | 37 |
| 3012 | 152 | 3,784 | 23.15 | 75 | 792 | 91 | 61 |
| 3020 | 86 | 5,038 | 7.60 | 45 | 984 | 117 | 351 |
| 3030 | 101 | 5,672 | 15.74 | 126 | 1,947 | 475 | 384 |
| 3040 | 112 | 2,474 | 14.71 | 63 | 863 | 77 | 213 |
| 3053 | 74 | 2,934 | 16.16 | 36 | 593 | 42 | 129 |
| 3055 | 80 | 2,930 | 11.98 | 67 | 1,095 | 69 | 376 |
| 3056 | 89 | 3,869 | 25.79 | 48 | 535 | 100 | 202 |
| 3060 | 105 | 4,993 | 15.92 | 68 | 2,213 | 57 | 142 |
| 3070 | 125 | 3,338 | 16.21 | 49 | 536 | 51 | 62 |
| 3080 | 108 | 4,180 | 12.49 | 124 | 1,610 | 155 | 122 |
| 3090 | 110 | 2,421 | 5.87 | 48 | 609 | 191 | 164 |
| 3100 | 114 | 2,292 | 12.17 | 15 | 137 | 33 | 151 |
| 3110 | 146 | 3,901 | 11.18 | 17 | 110 | 38 | 106 |
| 3120 | 88 | 3,643 | 16.00 | 42 | 473 | 27 | 55 |
| 3131 | 142 | 5,735 | 26.31 | 145 | 2,599 | 217 | 145 |
| 3132 | 87 | 3,626 | 13.76 | 39 | 552 | 109 | 176 |
| 3141 | 112 | 5,990 | 27.05 | 153 | 5,052 | 164 | 214 |
| 3142 | 107 | 3,979 | 21.44 | 95 | 2,048 | 90 | 91 |
| 3150 | 110 | 4,323 | 12.79 | 154 | 1,815 | 104 | 130 |
| 3160 | 84 | 2,738 | 8.77 | 32 | 228 | 95 | 82 |
| 3170 | 148 | 6,585 | 15.35 | 118 | 1,751 | 169 | 179 |
| 3181 | 87 | 3,586 | 10.65 | 39 | 462 | 81 | 118 |
| 3182 | 87 | 3,612 | 10.27 | 46 | 241 | 104 | 103 |
| 3191 | 90 | 3,510 | 18.40 | 107 | 2,753 | 121 | 35 |
| 3192 | 81 | 3,518 | 20.98 | 119 | 2,450 | 91 | 40 |
| 3201 | 173 | 6,709 | 9.76 | 134 | 2,037 | 91 | 93 |
| 3203 | 95 | 4,988 | 7.60 | 87 | 1,147 | 133 | 39 |
| 3204 | 75 | 2,478 | 7.26 | 24 | 226 | 17 | 13 |
| 3211 | 159 | 5,091 | 7.99 | 10 | 152 | 19 | 133 |
| 3212 | 127 | 4,676 | 11.14 | 90 | 3,604 | 143 | 153 |
| 3231 | 96 | 3,438 | 7.30 | 39 | 436 | 39 | 417 |
| 3232 | 186 | 6,556 | 19.78 | 127 | 7,279 | 144 | 100 |
| 3240 | 105 | 3,574 | 16.62 | 71 | 1,107 | 64 | 227 |
| 3250 | 108 | 4,142 | 21.49 | 68 | 956 | 64 | 191 |
| 3261 | 105 | 3,505 | 22.62 | 23 | 242 | 21 | 45 |
| 3262 | 113 | 3,798 | 15.88 | 76 | 716 | 642 | 284 |
| 3291 | 143 | 3,793 | 25.65 | | | 60 | 729 |
| **India Total** | **4,603** | **172,189** | | **2,915** | **55,683** | **4,739** | **6,910** |
| 3220 | 70 | 2,013 | 16.44 | 98 | 4,417 | 84 | 77 |
| 3271 | 177 | 3,083 | 17.97 | 192 | 3,340 | 332 | 28 |
| 3272 | 161 | 2,277 | 14.67 | 90 | 1,273 | 25 | 49 |
| 3281 | 328 | 8,162 | 18.15 | 281 | 1,983 | 144 | 211 |
| 3282 | 182 | 3,614 | 9.85 | 203 | 1,389 | 30 | 47 |
| 3292 | 154 | 5,624 | 18.46 | 181 | 5,236 | 90 | 134 |
| **S Asia Total** | **5,675** | **196,962** | **15.47** | **3,960** | **73,321** | **5,444** | **7,456** |

Source: RI South Asia Office

Rotary PEOPLE OF ACTION

# திறந்தவெளி கல்வியின் மாயம்

ரஷீதா பகத்

சிறு-நேர பிளம்பர் மகனான மாயங்க் கட்டாரா தனது படிப்பில் சிரமப்பட்டபோது, அவர் இந்தூர் ஆதர்ஷ் ரோட்டரி சங்கம், RI மாவட்டம் 3040-ன் தலைவரும், பொது நிர்வாகம் மற்றும் சர்வதேச உறவுகளில் முனைவர் பட்டம் பெற்ற அனுபவமிக்க பேராசிரியருமான லலிதா ஷர்மா ஆனந்திடம் பரிந்துரைக்கப்பட்டார். அவர், நல்ல உதியம் கொண்டிருந்த தன் வேலையை விட்டுவிட்டு இந்தூரில் வசதி குறைந்த குழந்தைகளுக்கு வகுப்புகள் நடத்திவருகிறார்.

“அவன் என் வகுப்புகளுக்கு வந்துக்கொண்டிருந்தான், ஆனால் தொடர்ந்து வருவது அவனுக்கு வழக்கமில்லை. அவன் மிகவும் பிரகாசமான மாணவன் என்பதால், நான் அவனை அவனது வீட்டிற்கு அருகிலுள்ள ஒரு சிறிய தனியார் பள்ளிக்கு மாற்றினேன். எனக்கு அதன் உரிமையாளர்/முதல்வரை நன்கு தெரிந்ததால், அவனுடைய கட்டணத்தைத் தள்ளுபடி செய்யமுடிந்தது என்று நினைவுகூர்ந்தார் லலிதா.

அவன் சிறப்பாகச் செயல்பட்டு, பாலக்காடு ஐஐடியில் சேரத் தகுதி பெற்றான். மீண்டும் ஒருமுறை, அவனது கட்டணத்தைச் செலுத்த வங்கிக் கடனைப் பெறுவதற்கான சிக்கலான செயல்முறையில் அவனது ஆசிரியர் அவனுக்கு வழிகாட்டினார். மாயங்க் ஐஐடியில் பட்டம் பெற்று எட்டு மாதங்கள் ஆகிறது, மேலும் ரூ.18 லட்சம் வருடாந்திர சம்பளம் ஈட்டும் வேலை பெங்களூருவில் கிடைத்துள்ளது. ‘‘அவன் இந்தூரில் இருக்கும்போதெல்லாம், என்னிடம் வந்து மற்ற குழந்தைகளுக்கு வகுப்புகள் எடுப்பதில் உதவுகிறான்.’’

இந்தூரில் உள்ள DAVV HRDC அஹில்யா பல்கலைக்கழகம் மற்றும் பால் இன்ஸ்டிடியூட் ஆப் புரொபஷனல் ஸ்டடீஸில் உள்ள சட்ட மாணவர்களுக்கு பொது நிர்வாகம் மற்றும் சர்வதேச உறவுகளை கற்பிப்பதில் 18 வருட அனுபவமுள்ள இந்த அற்புதமான கல்வியாளர், இதுபோன்ற பல வெற்றிக் கதைகளை நினைவுகூறுகிறார் (பெட்டியைப் பார்க்கவும்). ஆனால் பாதுகாப்பான ஆசிரியர் பணியை விட்டுவிட்டு பின்தங்கிய குழந்தைகளுக்கு (எந்த நேரத்திலும் இந்த எண்ணிக்கை 200 மேலாகவே இருக்கும்!) ஏன் பாடம் கற்பிக்கத் தொடங்கினார் என்பதைப் பார்ப்போம்.

*லலிதா சர்மா அனந்த் — RC இந்தூர் ஆதர்ஷ் தலைவர் — பூங்காவில் பாடம் நடத்துகிறார்.*



லலிதா, சிக்கிமில் இருந்து வந்தவர் மற்றும் சக ரோட்டேரியர் மற்றும் தொழிலதிபர் ஹாதிம் ஆனந்தை மணந்தார். 2008-ஆம் ஆண்டில் இந்த ஜோடியின் புதிய வீடு இந்தூரில் கட்டப்பட்டபோது தான் இது அனைத்தும் தொடங்கியது என்று கூறுகிறார். கட்டுமானத்தில் இருக்கும் எனது வீட்டிற்கு காண நான் சென்றிருந்தபோது, நிறைய குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் அங்கே சூதாட்டம் ஆடுவதையும், புகைபிடிப்பதையும் பார்த்தேன். ஒரு கல்வியாளராக என்னால் அதை பொருட்படுத்தாமல் இருக்க முடியவில்லை. அவர்கள் தங்கள் நேரத்தை மட்டுமல்ல, தங்கள் முழு வாழ்க்கையையும் வீணடித்துக் கொண்டிருந்தனர். இந்தியாவின் ஆன்மாவின் மேல் கடுமையான காயம் ஏற்பட்டதைப் பார்ப்பது போல் இருந்தது'' என லலிதா கூறுகிறார்:

தான் ஏதாவது செய்ய வேண்டும் என்று அவர் உணர்ந்தார். கணவரிடம் கலந்து ஆலோசித்து ஒரு முடிவுக்கு வந்தார். அவர்கள் வீடு மாறிய பிறகு, எட்டு குழந்தைகளுடன் தனது வீட்டிற்குள் ஒரு சிறிய டூடோரியலை தொடங்கினார். ஒரு மாதத்தில் அந்த எண்ணிக்கை 100ஐ தாண்டியது.



அதனால் அவர் வகுப்புகளை வீட்டிற்கு வெளியே சாலைக்கு மாற்றினார்.


யாரையும் தொந்தரவு செய்யாத தனிமைப்படுத்தப்பட்ட இடத்தில் வீடு இருந்ததால் காவல்துறையிடமிருந்தோ அல்லது வேறு எந்த தொந்தரவோ வரவில்லை. ஆனால் சிறு குழந்தை களை சாலையில் வைத்திருப்பது பாதுகாப்பானது அல்ல என்று உணர்ந்ததால், தனது வீட்டின் முன் ஒரு பெரிய பூங்காவை அவர் அடையாளம் கண்டார். அது அசுத்தமாகவும், அழுக்காகவும் இருந்தது மற்றும் சமூக விரோத செயல்களுக்கு பயன்படுத்தப் பட்டுக் கொண்டிருந்தது. ''எனது முதுகெலும்பு மற்றும் சிறந்த ஆதரவாளர்'' என்று அவர் விவரிக்கும் அவரது கணவரும், அவரும் அதை சுத்தம் செய்து வகுப்புகளை அங்கு மாற்றினர். இந்த திறந்த வகுப்புக் கல்விக்கு படிப்படியாக வந்த பல இளைஞர்கள் பள்ளியிலிருந்து இடை நிறுத்தப்பட்டவர்கள். அவர்களில் சிலர் பொதுத் தோட்டத்தின் வேலியின் சில பகுதிகளைக் அறுத்து, அதை விற்று, அதில் கிடைத்த பணத்தை சூதாட்டம், புகைத்தல் மற்றும் போதைப்பொருள் துஷ்பிரயோகத்திற்குப் பயன்படுத் தினார்கள். பள்ளியின் உட்புறத்தையே பார்த்திராத மற்றும் சொற்ப பணத்திற்காக பகுதி நேர வேலை செய்துகொண்டிருந்த குழந்தைகளும் அங்கே வந்தனர்.

ஒரு காய்கறி வியாபாரி மற்றும் சலவை செய்பவரின் உதவியால் அடையாளம் காணப்பட்ட, அவரது சுற்றுப்புறத்தைச் சேர்ந்த எட்டு குழந்தைகளுடன் ஆரம்பித்தது, வேகமாக வளர்ந்து, இறுதியில் 280 ஆக உயர்ந்தது!


அவரது வகுப்புகளுக்கு அதிகமான குழந்தைகள் வரத் தொடங்கியதால், வியக்கத்தக்க எண்ணிக்கையிலான 15 மூத்த ஆசிரியர்கள், அனைவரும் பெண்கள், இந்த குழந்தைகளுக்கு கற்பிக்க அவருடன் சேர்ந்தனர். அவரது திறந்தவெளி வகுப்புகளில் கூடுதல் பயிற்சி பெற்று, உயர்நிலைப் பள்ளியில் தேர்ச்சி பெற்ற மூத்த மாணவர்கள், பட்டம் பெற்ற பிறகு,



Where magic happens with open sky education - Tamil - October 2023.indd 13 9/28/2023 12:14:29 PM













Where magic happens with open sky education - Tamil - October 2023.indd 14 9/28/2023 12:14:35 PM









இளைய குழந்தைகளுக்கு கற்பிக்க முன்வந்தனர்.

மனதைக் கவரும் பல வெற்றிக் கதைகளை அவர் நினைவுகூற, அவரது ரோட்டரி பயணம் (பெட்டியைப் பார்க்கவும்), அவருடைய கற்பித்தல் முயற்சியைத் தக்கவைக்க அவர் எப்படி நிதி திரட்டுகிறார், மற்ற ரோட்டேரியர்கள் அல்லது அவருடைய சங்க உறுப்பினர்கள் நிதிக்கு உதவுகிறார்களா என்று அவரிடம் கேட்டேன். நிதி பல்வேறு வழிகளில் வருகிறது. ஆனால் உண்மையில் அதிக பணம் எங்களுக்கு தேவையில்லை, ஏனென்றால் எங்களிடம் பெரிய கட்டிட அமைப்போ, நியமிக்கப்பட்ட இடமோ இல்லை. ஆனாலும் வகுப்புகள் 14 ஆண்டுகளாக நீடித்து வருகின்றன!'' என்று அவர் விளக்குகிறார்.

பணத்தை விட பெரிய சவால்கள் உள்ளன என்று லலிதா விளக்குகிறார். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை, குறிப்பாக பெண் குழந்தைகளை, பள்ளிகளில் படிப்பதைத் தொடர அனுமதிப்பது பெரும்பாலும் கடினம். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் வேலை செய்து வீட்டிற்கு பணம் கொண்டு வரவேண்டும் என்று விரும்புகிறார்கள்; சிறுமிகள் தங்கள் தாய்மார்களுடன் வீட்டு உதவியாளர்களாகவும், சிறுவர்கள் தினக்கூலிகளாகவும் பணியாற்ற ஊக்குவிக்கப்படுகிறார்கள். பொதுவாக, ஒரு பெண்ணின் கல்வி குறைந்த மதிப்புடனே பார்க்கப்படுகிறது, அதற்கு ''அவள் திருமணம் செய்துகொண்டு வேறு வீட்டிற்குச் செல்வாள்'' என்பது வாதம். மற்ற பிரச்சனை என்ன வென்றால், ''எங்கள் வகுப்புகளை அடைய பல பெண்கள் நீண்ட தூரம் நடக்க வேண்டியிருந்தது, அப்போது அவர்கள் ஈவ்டீசிங்கை எதிர் கொண்டனர், அதனால் அவர்களை நிறுத்த பெற்றோர்கள் முடிவு செய்தனர். ஆனால் கல்வியின் மதிப்பு மற்றும் அதன் நீண்டகால நன்மைகள் குறித்து பெற்றோருக்கு ஆலோசனை வழங்குவதன் மூலம் அதை தீர்வு செய்தோம்.



Where magic happens with open sky education - Tamil - October 2023.indd 15 9/28/2023 12:14:40 PM

# வெற்றிக் கதைகள்

*லலிதா ஆனந்த், பூஜாவின் சுவாரசியமான கதையை விவரிக்கிறார், அவள் 9-ஆம் வகுப்பிலிருந்து வெளியேறியவர் மற்றும் லலிதாவின் வகுப்புகளுக்கு வந்தவர்; "அவளுக்குள் ஒரு தீப்பொறி இருப்பதையும், ஏதாவது செய்ய அவள் விரும்புவதையும் நான் உணர்ந்தேன். ஒவ்வொரு குழந்தையையும் நாங்கள் கண்காணித்து வருகிறோம், அதனால் அவள் சில நாட்கள் வருவதை நிறுத்தியபோது, அவளது ஆசிரியர் ஒருவருடன், ஒரு மாலையில் அந்தப் பெண்ணின் வீட்டிற்குச் சென்றேன். அவளின் குடும்பம் மிகவும் கடுமையான நிதி நெருக்கடியில் இருப்பதை அறிந்தேன். அவளின் பெற்றோருக்கு நான்கு மகள்கள் இருந்தனர், அதனால் பூஜா தனது தாயுடன் பல்வேறு வீடுகளில் பாத்திரங்களை சுத்தம் செய்யும் வேலைக்குச் செல்ல வேண்டியிருந்தது. "உங்கள் வாழ்க்கை முடிந்துவிட்டது, ஆனால் உங்களால் உங்கள் குழந்தைகளுக்கு சிறந்த வாய்ப்புகளை வழங்கமுடியும். அவள் படிக்கவில்லை என்றால், அவள் அதே பின்னணியிலிருந்து ஒரு துணையைக் கண்டுபிடிப்பாள், அதன்பிறகு அவளுடைய வாழ்க்கையும் உங்களைப் போலவே கடினமாக இருக்கும்" என நான் அவளின் அம்மாவுக்கு அறிவுரை கூறினேன்*

*அந்த சிறுமி மாதம் ரூ.1,200 சம்பாதிப்பதாக தாயிடமிருந்து ரோட்டேரியர் அறிந்துக் கொண்டார், மேலும் பல இளைஞர்கள் செய்வது போல, எங்களிடமே உதவுவதற்கு சிறுமியை அனுப்புமாறு தாயிடம் கேட்டுக்கொண்டேன். இளைஞர்கள் வெவ்வேறு வழிகளில் எங்களுக்கு உதவுகிறார்கள், அதற்கு பதிலாக அவர்களின் கல்விக்கு நிதியளிப்பதன் மூலம் நாங்கள் அவர்களுக்கு உதவுகிறோம். மேலும் இதுபோன்ற தன்னார்வலர்களுக்கு ஒவ்வொரு மாதமும் கொஞ்சம் பணம் கொடுக்கிறோம், ஏனென்றால் அவர்களுக்கும் கைச்செலவிற்கு பணம் தேவைப்படுகிறது. பூஜா தனது 10ஆம் வகுப்பை ஒரு தனியார் பள்ளியில் படித்தாள், அதற்கு நான் கட்டணம் செலுத்தினேன். அவள் அறிவியலைத் தேர்ந்தெடுத்து 12ஆம் வகுப்புக்குச் சென்றாள்.*

*அதன் பிறகு அரசு கல்லூரியில் சென்று பிஎஸ்சி முடித்தாள். பிரகாசமான மற்றும் கடினமாக உழைக்கும் அவள் மேலும் படிக்க விரும்பினாள், ஆனால் அவளுடைய குடும்பம் இதை எதிர்க்கிறது என்று கூறினாள். "நாங்கள் மீண்டும் ஒரு முறை அவள் வீட்டுக்கு சென்று பெற்றோருக்கு ஆலோசனை வழங்கினோம், அவள் இந்தூர் பல்கலைக்கழகத்தில் மருந்து வேதியியலில் எம்எஸ்சி முடித்து தங்கப் பதக்கம் பெற்றாள். அதன் பிறகு அவள் என்னிடம் வந்து இப்போது தனக்கு ஒரு வேலை வேண்டும் என்றாள்.*

*லலிதா, மருந்து நிறுவனங்களில் விண்ணப்பிப்பதற்கு அவளுக்கு உதவினார். நேர்காணல் மற்றும் தொடர்புடைய*



நாங்கள் காவல் நிலையத்தை தொடர்புகொண்டு ஈவ் டீசிங் உள்ளிட்ட பல பிரச்சனைகளை தீர்த்து வைத்தோம், மேலும் சில தகுதியான மற்றும் பள்ளிகளுக்கு நீண்ட தூரம் செல்லவேண்டியிருந்த சிறுமிகளுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன என்கிறார் லலிதா.

*பலர் பன்னாட்டு நிறுவனங்கள், புகழ்பெற்ற மருந்து நிறுவனங்கள், நர்சிங் துறையில் நுழைந்துள்ளனர் மற்றும் எங்களிடம் ஐ.ஐ.டி.யில் படித்த ஒருவரும் உள்ளார்.*

தனியார் பள்ளிகளில் சேர்க்கப்படும் நம்பிக்கைக்குரிய மாணவர்களின் கட்டணத்தை செலுத்துவதற்கான பணத்தைப் பொறுத்தவரை, அடிக்கடி, ரோட்டரியர்கள் மற்றும் பிறர் தங்கள் பிறந்தநாள், ஆண்டுவிழா போன்றவற்றுக்கு ஏதாவது நன்கொடை அளிக்கின்றனர், அவர்களை குறிப்பிட்ட மாணவர் களிடமும், நிறுவனங்களிடமும் அனுப்புகிறோம். அவர்கள் நேரடியாக அவர்களுக்கான கட்டணத்தை செலுத்த முடியும். மேலும், நான் 18 ஆண்டுகள் பணிபுரிந்ததால், PF மற்றும் FDகள் போன்ற எனது தனிப்பட்ட சேமிப்பும் உள்ளது; சில மாணவர்களின் கட்டணங்களைச் செலுத்த நான் அடிக்கடி எனது தனிப்பட்ட அல்லது எனது கணவரின் பணத்தைப் பயன்படுத்து கிறேன் அல்லது அவர்களுக்கு ஸ்பான்சர்களைக் கண்டுபிடிப்போம். எங்கள் தன்னார்வலர்களில் பலர் குறைந்த வருமானம் கொண்ட பின்னணியில் இருந்து வருவதாலும், அவர்களில் பலர் கல்லூரியில் படிப்பதாலும், அவர்கள் தங்களையும் தங்கள் உயர்கல்வியையும் ஆதரிக்கும் வகையில், அவர்களுக்கு கௌரவ ஊதியம் வழங்கவேண்டும். அவசரகாலங்களில் ஹதிம் நிச்சயமாக உதவுகிறார் என்று அவர் புன்னகைக்கிறார்.

இந்த திறந்தவெளிப் பள்ளியில் பல்வேறு வகையான படிப்புகள்





Where magic happens with open sky education - Tamil - October 2023.indd 16 9/28/2023 12:14:43 PM

*விஷயங்களை எவ்வாறு கையாள்வது என்பது குறித்து பல அமர்வுகள் மூலம் அவளுக்கு பயிற்சி அளித்தார். என்னிடம் பல தன்னார்வலர்கள் இருக்கிறார்கள்; அவர்கள் அவளுக்கு உதவினார்கள், பயிற்சி அளித்தார்கள், அவளுடைய பேச்சை மெருகூட்டினார்கள், அவளுக்கு இப்போது மருந்து நிறுவனமான சிப்லாவில் ஆய்வாளராக வேலை கிடைத்திருக்கிறது. இன்று அவள் மாதம் ரூ.25,000 சம்பாதிக்கிறாள் மற்றும் நிறுவனம் வழங்கும் பல சலுகைகள் மற்றும் நலன்புரி நடவடிக்கைகளை அனுபவிக்கிறாள்.*

*இப்போது அவள் தனது இளைய சகோதரிகளின் கல்வியை ஆதரிக்கிறாள் அவர்களும் தங்கள் கல்வியை முடித்துவிட்டார்கள், அவர்களில் ஒருவர் B Ed படிப்பில் இணைந்துள்ளார். அடுத்து, படிப்பில் மிகவும் பலவீனமாக இருந்த சாதனா யாதவின் மனதைக் கவரும் கதை உள்ளது; 5 ஆம் வகுப்பு வரை கூட அவளால் வாக்கியங்களை சரியாக உருவாக்க முடியவில்லை. லலிதா முதலில் அவளுக்கு டிஸ்லெக்ஸியா இருக்கலாம் என்று நினைத்தார், மருத்துவரை அணுக திட்டமிட்டார். "பின்னர் மீண்டும் நாங்கள் அவளுடன் இணைந்து பணியாற்றலாம் என்று முடிவுசெய்தோம், அவ்வாறு செய்யும்போது ஜூனியர் வகுப்புகளில் அவளது பாடங்கள் தெளிவாக இல்லை என்பதைக் கண்டறிந்தோம், மேலும் நாங்கள் அவளை சரியாக வழிநடத்தினோம். நானே அவளுடன் பல மாதங்கள் அமர்ந்து பயிற்சி அளித்தேன், இன்று அவள் ஃப்ளிப்கார்ட்டில் பயிற்சியாளராக இருக்கிறாள், விரைவில் எம்பிஏ தேர்வு எழுதப் போகிறாள். அவள் தனது தம்பி மற்றும் தங்கையின் கல்விக்கு ஆதரவாக இருக்கிறாள். நான் 8-ஆம் வகுப்பு முதல் உயர்நிலைப் பள்ளி வரை அவளுக்கு பள்ளிக்கட்டணத்தைச் செலுத்தியிருக்கிறேன்; பின்னர் நாங்கள் அவளை ஒரு அரசு கல்லூரிக்கு அனுப்பினோம், அங்கு எந்த கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை.*

*இந்த ஆண்டு செவிலியராகப் பட்டம் பெறும் ஒரு பெண்ணின் கதையும் உள்ளது. அரசுப் பள்ளியில் படித்த அவள், பள்ளிப்படிப்பை கிட்டத்தட்ட பாதியிலேயே நிறுத்திவிட்டாள். லலிதா அவளை ஒரு தனியார் பள்ளியில் சேர்க்க முயன்றாள் "ஆனால் அதை சமாளிக்க முடியும் என்ற நம்பிக்கை அவளுக்கு இல்லை, அதனால் நான் அவளுக்கு வழிகாட்ட சிலரை கண்டுபிடித்தேன். அவளுக்கு தனிப்பட்ட வழிகாட்டுதல் வழங்கப்பட்டது; இறுதியாக அவள் தன்னம்பிக்கையை மீட்டு, ஒரு நல்ல நர்சிங் கல்லூரியில் (தி அரபிந்தோ இன்ஸ்டிடியூட் ஆஃப் மெடிக்கல் சயின்சஸ்) சேர முடிந்தது. அவள் தந்தைக்கு வேலை இல்லை, ஆனாலும் அவர் மிகவும் நேர்மையானவர். "நோயியல் ஆய்வகத்தை வைத்திருக்கும் ஒரு மருத்துவர் தம்பதியினர் எங்களுக்கு தெரியும்; காலை 6 மணி முதல் 10 மணி வரை அவளை பகுதி நேர வேலைக்கு அவர்கள் அமர்த்தினர். அவள் அங்கு சம்பாதிக்கும் பணத்தில், தனது கல்லூரி கட்டணத்தை செலுத்துகிறாள், மேலும் நன்றாக படிக்கிறாள்.*

*ஃபார்மா படிப்பு படித்துக் கொண்டிருந்த மற்றொரு பெண், படிப்பின் நடுவில் புற்றுநோயால் தன் தந்தையை இழந்தாள். அவளது அம்மா அவளால் தொடர முடியாது என்று கூறினார், அவள் வெளியேறும் தருவாயில் இருந்தாள். அதனால் ஹதீமிடம் அவருடைய கடையில் ஒரு பணியிடத்தை உருவாக்கச் சொன்னேன், அவர் அவளுக்கு கணக்குகளை பதிவு செய்யும் ஒரு வேலையைக் கொடுத்தார். இது அவர்கள் வேலையின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்வதை உறுதி செய்வதோடு, அவளுக்கு கௌரவத்தையும் தருகிறது. அந்த பணியின் சம்பளத்தைக் கொண்டு அவர் தனது கட்டணத்தைச் செலுத்தி, மருந்தகப் படிப்பை முடித்துவிட்டாள், விரைவில் முதுநிலைப் படிப்பை படிக்கப் போகிறாள் என்கிறார் லலிதா.*

*இதைப் போலவே எங்களிடம் இன்னும் பல கதைகள் உள்ளன, 4 மற்றும் 5 ஆம் வகுப்பு படிக்கும் எங்கள் குழந்தை களுக்கு 40 மற்றும் 45 வரை பெருக்கல் அட்டவணை தெரியும் என்பதை நான் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன் என அவர் பெருமையுடன் கூறுகிறார்.*



**கம்ப்யூட்டர் கல்வி கற்றுத் தரப்படுகிறது.**

உள்ளன; 1 முதல் 12 வரையிலான மாணவர்களுக்கு இங்கே வகுப்புகள் நடத்தப்படுகின்றன; பட்டப்படிப்பு மற்றும் முதுநிலை படிப்புகளுக்கு எங்களிடம் வழிகாட்டுதல் திட்டம் உள்ளது, மேலும் மாணவர்களுக்கு பயிற்சியளிக்க வழிகாட்டிகளைப் பெறுகிறோம். இடைநிற்றல் செய்த மற்றும் பள்ளிக்குச் செல்லாதவர்களுக்கான பாலம் கல்வித் திட்டமும் எங்களிடம் உள்ளது. நாங்கள் அவர்களை முழுமையாக தயார் செய்கிறோம்; எடுத்துக்காட்டாக, இதுவரை பள்ளிக்குச் செல்லாதவர்கள், அரசுப் பள்ளியில் 5ஆம் வகுப்புத் தேர்வில் தனித்தேர்வர்களாகச் சேர்க்கப்படுகிறார்கள். அவர்கள் தேர்ச்சி பெற்றவுடன் – அவர்களை



திறந்தவெளி வகுப்பறைகளில் தன்னார்வலர்கள் பாடம் நடத்துகின்றனர்.





நன்றாகத் தயார்படுத்துவதன் மூலம் அவர்கள் வெற்றி பெறுவதை உறுதிசெய்கிறோம். 6-ஆம் வகுப்பிற்கு, நாங்கள் அவர்களை வழக்கமான வகுப்பில் சேர்ப்போம்.

இதன் மூலம், அவர்கள் பிரதான கல்வியில் நுழைகின்றனர், மேலும் அவர்கள் உயர் கல்விக்குச் சென்று தனது கனவை அடைய ஒரு பாதை உருவாக்கப்படுகிறது. ஆனால் பல இளைஞர்கள் பல்வேறு காரணங்களுக்காக உயர்கல்விக்கு செல்ல விரும்புவதில்லை. எனவே அவர்கள் கொஞ்சம் பெரியவர்களாகி, ஏழாவது அல்லது எட்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றவுடன் "அவர்களுக்காக திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் தொழில் பயிற்சிகள் எங்களிடம் உள்ளன, அதை முடித்துவிட்டு அவர்கள் வெவ்வேறு இடங்களில் வேலை செய்கிறார்கள்," என்று அவர் கூறுகிறார்.

லலிதாவின் ஹோம்-யுனிவர்சிட்டியின் சிறப்பு மற்றும் மனதைக் கவரும் அம்சம், 35 அக்கா மற்றும் அண்ணன் ஆசிரியர்களைக் கொண்ட குழுவாகும், அவர்கள் ஒரு காலத்தில் அங்கே மாணவர்களாக இருந்தவர்கள். சட்டம், வணிக நிர்வாகம், நர்சிங் மற்றும் பல துறைகளில் பட்டம் பெற்ற அவர்கள் இப்போது சில வகுப்புகளை எடுக்க முன்வந்துள்ளனர்.

ஒரு நாளைக்கு ஆறு மணி நேரம் வரும் வழிகாட்டிகள் மற்றும் தன்னார்வலர்களின் வசதிக்கு ஏற்ப வகுப்பு நேரங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இரண்டு தொகுதிகள் - மதியம் 1 முதல் 6 மணி மற்றும் மாலை 3 முதல் 7 மணி வரை - நடைபெறுகிறது.

### அவர் எப்படி ஆசிரியர்களைக் கண்டுபிடித்தார்?

அடிமட்ட கல்விக்கான தன்னலமற்ற சேவைக்காக 2019ஆம் ஆண்டு நியூயார்க்கில் குளோபல் வுமன் இன்ஃப்ளுயன்சர் விருது, "தன்னலமற்ற சமூக சேவைக்காக இந்தியாவின் 100 மிகவும் தாக்கமுள்ள





Where magic happens with open sky education - Tamil - October 2023.indd 18 9/28/2023 12:14:58 PM

# அவரது ரோட்டரி பயணம்



லலிதா அவர் கணவர் ஹதிம் அனந்துடன்.

லலிதா அனந்த் மற்றும் அவரது கணவர் ஹதிம் ஆறு ஆண்டுகளுக்கு முன்பு ரோட்டரியில் சேர்ந்தனர்; "எங்கள் இரண்டு நண்பர்கள் ரோட்டேரியர்கள் மற்றும் அவர்கள் சேர்வதற்கு ஒரு நல்ல அமைப்பு ரோட்டரி என்று சொன்னார்கள். பஹாய் மதத்தினரான எங்களின் அமைதி, சமத்துவம் மற்றும் அனைவரையும் உள்ளடக்கல் போன்ற மதிப்புகள் மற்றும் கொள்கை களுக்கும், ரோட்டரியின் முக்கிய மதிப்புகளுக்கும் இருக்கும் இயற்கையான பொருத்தத்தை உணர்ந் தோம். ரோட்டரியர்கள் ஒரு நல்ல குழுவாக இருப்பதைக் கண்டோம். எனவே நாங்கள் ரோட்டரி சங்கத்தில் இணைந்தோம் என்று அவர் கூறுகிறார்.

ஆனால் துரதிர்ஷ்ட வசமாக, அவர்கள் இணைந்த பிறகு, "அங்கு எதுவும் பெரிதாக நடக்கவில்லை என்று கண்டறிந்தோம், அதனால் நாங்கள் அதிலிருந்து வெளியேறினோம், அந்த சங்கமும் மூடப்பட்டது." ஆனால் ஆறு மாதங் களுக்குப் பிறகு, ரோட்டரியில் சேர ஒரு நோக்கு நிலைத்திட்டம் நடைபெற்றது "நாங்கள் எப்போதும் ரோட்டரியில் சேர விரும்பினோம், அதனால் அதில் கலந்துகொண்டோம், ஏனென்றால் ரோட்டரியில் நல்ல மனிதர்களும், நாங்கள் மதிக்கும் சரியான பன்முகத்தன்மை மற்றும் உள்ளடக்கமும் இருந்தது. இப்போது, நாங்கள் சங்கத்தில் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளோம் என்று அவர் கூறுகிறார்.

அப்படியானால், பின் தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த இந்தக் குழந்தை களுக்கு உதவுவதற்காக, இந்த ஆண்டு அவர் தலைவராக இருக்கும் தனது சங்கத் திலிருந்து உதவியைப் பெற முயற்சிக்கிறாரா? என்று கேட்டேன்

அதற்கு லலிதா, உண்மையில், இது நான்கு ஆண்டுகள் மட்டுமே நிறை வடைந்த சங்கம், நாங்கள் குறைந்தபட்ச கட்டணத்தை மட்டுமே சேகரிக்கிறோம். இதைப் பற்றி நான் என் சங்கத்தில் பேசவில்லை. என் குறைகளில் ஒன்று, என்னால் வாய்விட்டு நன்கொடை கேட்கமுடியாதது என பதிலளிக்கிறார்.

அவருக்கு கொடுக்க மட்டுமே தெரியும் என நான் கருத்து தெரிவிக்க அவர் சிரித்துவிட்டு, எனக்கு பணம் கேட்பது மிகவும் கடினமான செயல், ஆனால் எனது சங்கத்தில் உள்ள பலருக்கும் எங்கள் வேலையைப் பற்றி தெரியும். பருவப் பெண்களுக் கான விழிப்புணர்வு நிகழ்ச்சி களையும் நடத்துகிறோம். சமீபத்தில், நாங்கள் MHM பற்றிய ஒரு அமர்வும் மற்றும் ராக்கிகள் தயாரிப்பது மற்றும் பிற செயல்பாடுகள் பற்றிய ஒரு பட்டறையையும் நடத்தினோம்.



Where magic happens with open sky education - Tamil - October 2023.indd 19 9/28/2023 12:15:01 PM



திறந்தவெளியில் வகுப்புகளை நடத்த முடியாதது. மேலும் எந்தவொரு கல்வியிலும் மதிப்பைக் காணாத இளைஞர்கள் மற்றும் பெற்றோர்களின் கூட்டமும் உள்ளது. ஆனால் கல்வியின் உண்மையான மதிப்பு குறித்த விழிப்புணர்வை ஊக்குவிக்கும் அவரது முயற்சிகள் தொடர்கின்றன.

பட்டப்படிப்பு முடித்த மாணவர்களின் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள சமூகப் பொருளாதார மாற்றம் குறித்து லலிதா பெருமிதம் கொள்கிறார். ''பலர் பன்னாட்டு நிறுவனங்கள், புகழ்பெற்ற மருந்து நிறுவனங்கள், நர்சிங் துறையில் நுழைந்துள்ளனர் மற்றும் எங்களிடம் ஐ.ஐ.டி.யில் படித்த ஒருவரும் உள்ளார். முடிவில், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இருவருக்கும் முடிவு எதிர்பார்ப்புக்கு அப்பாற்பட்டதாகவும், மிகவும் திருப்திகரமாகவும் உள்ளது'' என்று அவர் பெருமிதத்துடன் கூறுகிறார்.

பெண்களில் ஒருவராக, 2016-இல், அன்றைய இந்திய குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியால் அங்கீகாரம் என பல விருதுகளை வென்ற அவர் ஒருமுறை ஜீ டிவியில் டாக்டர் சுபாஷ் சந்திரா நிகழ்ச்சியில் வாழ்க்கையின் நோக்கம் பற்றி பேசினார். மிகவும் சலிப்பாகவும் தூக்கத்துடனும் இதைப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு ஆசிரியர் திடீரென்று விழித்துக்கொண்டார், அவரது பேச்சால் ஈர்க்கப்பட்டு, அடுத்த நாளே தன்னார்வ ஆசிரியராக குழுவில் சேர வந்துவிட்டார்.

லலிதாவின் பணிவு நம்மை நெகிழச்செய்யும்; 14 ஆண்டுகளில், ஆண்டுதோறும், சராசரியாக 580 மாணவர்களின் வாழ்க்கையை அவர் மேம்படுத்தியுள்ளார். ஆனாலும் அவர் தன் முயற்சிகளை நிராகரிக்கிறார்: ''நாங்கள் உண்மையில் யாரும் இல்லை; நாங்கள் ஒரு உயர்ந்த சக்தியின் கருவிகள் மட்டுமே'' என கூறுகிறார்.

அவர் தொடர்ந்து போராட, சவால்களும் தொடர்கின்றன, அதில் ஒன்று பருவமழை காலத்தில்

திறந்தவெளி கல்வியின் இந்த கருத்தாக்கத்தின் விரிவாக்கத்திற்கு நிறைய வாய்ப்புகள் இருப்பதாக அவர் கூறுகிறார் ''இதன் மூலம் நாடு முழுவதும் உள்ள லட்சக் கணக்கான மாணவர்களை பிரதான கல்வியில் நெறிப்படுத்த முடியும். 2017-ல் எங்கள் திறந்தவெளி கற்றல் வகுப்புகள் அபாகுஞ்ச் நலன்புரி சங்கம் என்ற அமைப்பில் பதிவு செய்யப்பட்டது.■



Where magic happens with open sky education - Tamil - October 2023.indd 20 9/28/2023 12:15:05 PM

**Together, we end polio**



# WORLD POLIO DAY
## 24 OCTOBER

Register your World Polio Day event

Rotary | END POLIO NOW

# அஸ்ஸாமில் தேயிலை பறிப்பவர்களின் கண் பராமரிப்பு

ஜெய்ஸ்ரீ



ரோட்டரி மாவட்டம் 3240-க்கு உட்பட்ட குவாஹாட்டி சவுத் ரோட்டரி சங்கம், விஷன் ஸ்பிரிங் சமூக நிறுவனம் மற்றும் பி அண்ட் ஏ குரூப் ஆப் நிறுவனங்கள் இணைந்து ஜோர்ஹட், கோலாகட் மற்றும் சிவசாகர் மாவட்டங்களில் தேயிலைத் தோட்டங்களில் தேயிலை பறிக்கும் தொழிலாளர்களுக்காக சிறப்பு கண்சிகிச்சை முகாமை நடத்தின. 6,000 தொழிலாளர்களுக்கு கண்பரிசோதனை நடத்த திட்டமிட்டு கடந்த ஜூன் மாதம் வரை 6,700 பேருக்கு கண்பரிசோதனை நடத்தப்பட்டது. இந்த திட்டத்தின் வெற்றியை 2021 இல் தலைவராக இருந்த காலத்தில் இதற்கான முயற்சி கள் மேற்கொண்ட மறைந்த தீரஜ் காகதிக்கு அர்ப்பணிக்கிறோம். நாங்கள் அதை இரண்டு ஆண்டுகள் நடத்தினோம் என்கிறார் சங்கத்தின் முன்னாள் தலைவர் ராஜேஷ் பாத்ரா.

தோட்டங்களில் தேயிலை பறிக்கும் தொழிலுக்கு ஆட்கள் தேவை என்றாலும் தேயிலைத் தொழிலாளர்களுக்கு கண்பார்வை முக்கியம். கண் பார்த்து, கை வேலை செய்யும் விதத்தில் வேகம் நிறைந்த தொழில். நல்ல கறுப்பு அல்லது பச்சைத் தேயிலையை பறிப்பவர்கள் புதரிலிருந்து முதல் இரண்டு இலைகளையும் பின் மொட்டுக்களையும் கவனமாக தேர்ந்தெடுக்க வேண்டும். ஆனால், அஸ்ஸாமில் தேயிலைத் தொழிலாளர்களுக்கு நல்ல கண்பார்வை இல்லை. பண வசதி இல்லாததால் அவர்களால் கண் கண்ணாடி வாங்க முடியவில்லை. அதனால், அவர்கள் தங்கள் திறமைக்கு ஏற்ப வேலை செய்ய முடியவில்லை என்று விளக்கினார் பாத்ரா.

கண் கண்ணாடி அணிந்து தேயிலைத் தொழிலாளர்கள் வேலை செய்தால் பார்வைக் கூர்மையால் உற்பத்தியையும் அதிகரிக்க முடியும். அவர்களுக்கு அதிக கண் அழுத்தமும் ஏற்படாது. பார்வைக் குறைபாடுள்ள தேயிலைத் தொழிலாளர்களுக்கு ரோட்டரி சங்கம் மூலம் கண் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன.



*டிபோர் பீல் என்னும் ஏரியில் மீன்குஞ்சுகள் விடப்படுகின்றன.*

இந்த சங்கம் 2014-ஆம் ஆண்டு முதல் பார்வையற்ற இளைஞர்களுக்கு அர்ச்சனா மற்றும் அதுல் சந்திர கோஸ்வாமி நினைவு விருதை வழங்கி வருகிறது. இந்த விருது ரூ.10,000 ரொக்கமும், பாராட்டுப் பத்திரமும் கொண்டதாகும். கடந்த ஆண்டு இந்த விருது ஷாஹித் அஃப்ரிடி என்ற 14 வயது கண்பார்வையற்ற சிறுவனுக்கு வழங்கப்பட்டது. குவாஹாட்டி உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் இந்த மாணவன் இசையில் சிறந்த தேர்ச்சி பெற்றதற்காக இவ்விருது வழங்கப்பட்டது. பாரத ஸ்டேட் வங்கியின் முன்னாள் உதவிப் பொது மேலாளர் விகாஷ் தாஸ் நிகழ்ச்சிக்கு தலைமைவகித்தார். இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால் இவரும் கண்பார்வையற்றவர் என்பதுதான்.

### தலசீமியா நோயை குணப்படுத்துதல்

இந்த ஆண்டு தொடக்கத்தில் சங்கம் அதன் தலைவர் நவஜோதி சர்மா தலைமையில் குவாஹாட்டியில் உள்ள மார்வாரி மருத்துவமனைகளுடன் ஒரு உடன்பாடு செய்துகொண்டது. இதன் நோக்கம் தலசீமியா நோய்க்கு சிகிச்சை அளிப்பதுதான். (தலசீமியா என்பது இரத்தத்தில் ஹீமோகுளோபின் குறைபாடுகளால் ஏற்படும் ஒருவகை நோய்). இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவமனை இலசமாக இரத்தமாற்று சிகிச்சை அளிக்கும். மருத்துவமனையின் சேவைக்காக ரோட்டரி சங்கம் ஒரு குறிப்பிட்ட தொகையை வழங்கும். இதற்காக காலாசார நிகழ்ச்சி நடத்தப்பட்டு, டிக்கெட் விற்பனை மூலம் ரூ.8 லட்சம் நிதி திரட்டப்பட்டது. மேலும் ஓவியங்களை ஏலம் விட்டதன் மூலம் ரூ.50,000 கிடைத்தது. இத்திட்டத்துக்கு சங்கத்தின் அறக்கட்டளை மூலம் ரூ.4.8 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மற்றொரு முன்முயற்சியாக ரோட்டேரியன்கள் 50,000 மீன்குஞ்சு களை குவாஹாட்டிக்கு தென்மேற்கில் உள்ள ஒரு ஏரியில் விட்டனர். மீன் வளர்ப்புக்காகவும், சுற்றுச்சூழல் பாதுகாப்பாகவும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த திட்டம் முந்தைய திட்டத்தின் வெற்றியின் அடிப்படையில் உருவானது என்று தெரிவித்தார் பாத்ரா. RCC சக்ரதேவ் உதவியுடன் கலிதபாரா கிராமத்தில் மீன் வளர்ப்பை ஒரு நிலையான வாழ்வாதாரமாக இருக்கும் வகையில் அறிமுகப்படுத்தினோம். கிராம மக்கள் பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைந்து ஆர்வத்துடன் இத்தொழிலை தொடர்ந்து செய்து வருகின்றனர்.■



Eyecare for tea pluckers in Assam - Tamil - October 2023.indd 23 9/26/2023 5:43:25 PM

# குறைபாடுகள் உள்ள குழந்தைகளுக்கு சிறப்புக் கல்வி

**ரஷீதா பகத்**

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மெட்ராஸ் சௌத் ரோட்டரி சங்கத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஜவாஹர் நிச்சானி, தமது பதவிக் காலத்தில் (2022–23) செயல்படுத்த வேண்டிய முதன்மைத் திட்டம் என்ன என்பதை அறிந்திருந்தார். குழந்தைகளுக்கு தரமான கல்வியை அளித்து அவர்களது எதிர்காலத்தை ஒளிமயமாக்குவதே அவரது நோக்கமாக இருந்தது.

பிரபஞ்சத்தில் ஒவ்வொரு குழந்தையும் எதையாவது கண்டு பிடிக்க வேண்டும், பாகுபாடு இல்லாத அடிப்படைக் கல்வியை பெறுவது அவர்களின் அடிப்படை உரிமை என்பதை நாம் எல்லோரும் அறிவோம். நாளைய குடிமக்கள் தங்கள் பணியிடங்களில் போட்டி யிடுவதற்கும், வெற்றி பெறுவதற்கும் சமவாய்ப்புகளை கல்விதான் தரும் என்கிறார் அவர்.

ஆனால், தரமான கல்விக்கான அணுகலை வழங்கும்போது, அனைத்தும் உள்ளடங்கியிருப்பது அதாவது, மூளை வளர்ச்சிக் குறைபாடு, மனவளர்ச்சி குறைபாடு உள்ள குழந்தைகளுக்குக்கூட சம வாய்ப்புகளை வழங்குவது முக்கியமாகும். சுமார் ரூ.30 லட்சம் மதிப்பிலான உலகளாவிய மானியத்திற்கு விண்ணப்பிக்கும் திட்டங்கள் உட்பட இந்த திட்டத்தின் அடிப்படைகளை ஒருங்கிணைத்தபோது, பத்து ஆண்டுகளுக்கு மேலாக உள்ளடக்கிய கல்வித்துறையில் பணியாற்றி வரும் பேச்சுத்திறன் திறன் அளிக்கும் நிபுணரான கல்பனா குமாரை அவர் சந்தித்தார். கல்பனா, சிறப்புக் குழந்தைகளுக்காக கரே தெரபி சென்டரை நடத்தி வருகிறார். சிறப்புக் குழந்தைகளை பராமரிப்பதில் உங்களுக்கு முதிர்ந்த அனுபவம் உள்ளது, சரியான அடிப்படை கட்டமைப்பு மற்றும் திறமையான ஆசிரியர்கள் இல்லாத அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஒருங்கிணைந்த உள்ளடக்கிய கல்வித் திட்டத்தை எங்கள் ரோட்டரி சங்கம் செயல்படுத்த விரும்புகிறது. சிறப்பு குழந்தைகளுக்கும் கற்றலில் சமவாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும், ஏன் நீங்கள் எங்கள் ரோட்டரியில் சேர்ந்து சேவையாற்றக் கூடாது என்று அவர் கேட்டதை கல்பனா நினைவுகூர்ந்தார்.

இந்த திட்டம் பற்றி கேள்விப்பட்டதும் உடனடியாக ஒப்புக்கொண்டு மெட்ராஸ் சௌத் ரோட்டரி சங்கத்தில் அவர் சேர்ந்தார். உள்ளடக்கிய பள்ளிகளில் தொடக்கநிலை வகுப்புகள், நடுநிலை வகுப்புகளில் சிறப்புக் குழந்தைகளில் கல்விப் பின்னணி குறித்தும் ஆராயப்பட்டது. நானும் எனது சங்கத்தின் உறுப்பினரான முகுந்த் வேதபூதியும் ஆயிரத்துக்கும் மேலான கி.மீ. தொலைவுக்கு மேல் பயணித்து திட்ட மையத்திற்கு வெளியே உள்ள பள்ளிகளை அடையாளம் கண்டோம். இதற்கு கல்வி மூலம் சுதந்திரம் என பெயரிட்டோம் என்றார் சமீபத்தில் தலைவர் பதவிக்காலத்தை நிறைவு செய்த நிச்சானி.

> நானும் எனது சங்கத்தின் உறுப்பினரான முகுந்த் வேதபூதியும் ஆயிரத்துக்கும் மேலான கி.மீ. தொலைவுக்கு மேல் பயணித்து திட்ட மையத்திற்கு வெளியே உள்ள பள்ளிகளை அடையாளம் கண்டோம். இதற்கு கல்வி மூலம் சுதந்திரம் என பெயரிட்டோம்.
>
> **ஜவஹர் நிச்சானி**
> IPP, RC மெட்ராஸ் சவுத்

இந்த திட்டத்தின் கீழ் பயன்பெறும் எட்டு பள்ளிகளைத் தேர்ந்தெடுக்க பல்வேறு அளவுகோல்களை பின்பற்றினோம். நல்ல நிர்வாகம், நல்ல ஆசிரியர்கள் குழு, சுகாதாரமான சூழல் பள்ளியில் வசதிகளை மேம்படுத்தும் ஆர்வம் ஆகியவையும் கணக்கில் கொள்ளப்பட்டன. எட்டு பள்ளிகளில் ஆறு பள்ளிகள் உள்ளடக்கிய பள்ளிகளாகவும், சிறப்புக் குழந்தைகளுக்கு கல்வி கற்பிக்கும் வசதி உள்ளதாகவும் அமைந்திருந்தன. அவற்றில் பாலா மந்திர், மதுரம் நாராயணன் சென்டர், பத்மா சுப்பிரமணியன் பால பவன், சரஸ்வதி வித்யாலயா, சர் எம். வெங்கட சுப்பாராவ் மற்றும் லேடி வெங்கட சுப்பாராவ் நிறுவனங்கள் ஆகியவை அடங்கும்.

நாங்கள் பள்ளிகளை அடையாளம் கண்டு எங்கள் ஆய்வை முடித்தவுடன் சிறப்புக் குழந்தைகளுக்குத் தேவையான சிறப்பு உபகரணங்கள் மற்றும் சேவைகளுடன் பள்ளியை தயார்படுத்தும் பணியை நாங்கள் தொடங்கினோம். அத்தகைய குழந்தைகளுக்கு பேச்சுத் தெரபி மற்றும் ஆக்குபேஷனல் தெரபி அளிக்கப்படுவது முக்கியம். ஏனெனில் ஒரு குழந்தையின் கற்றல் திறனை பாதிக்கும் ஏதேனும் கோளாறு



Helping special children in inclusive schools - Tamil - October 2023.indd 24 9/27/2023 12:17:22 PM



குறைபாடுள்ள
ஒரு குழந்தைக்கு
பயிற்சி
அளிக்கப்படுகிறது.




கண்டறியப்பட்டால் அது கற்றல் திறனை வெகுவாக பாதிக்கும் என்றார் கல்பனா.

நிச்சானி கூறுகையில், நான் வட்டமேஜையாளராக இருந்தபோது பல்வேறு பள்ளித் திட்டங்களை செயல்படுத்தி இருக்கிறேன். வறுமை ஒழிப்புக்கு கல்வி அவசியம் என்பது எனது ஆழ்ந்த நம்பிக்கை. இந்த சிறப்புவாய்ந்த திட்டத்தை செயல்படுத்துவதில் கல்பனா போன்ற அனுபவம் வாய்ந்த ஒருவரை எங்கள் குழுவில் பெற்றது எங்களது பாக்கியம். இந்த துறையில் செயல்பட அவர் தகுதியானவர்.

சிங்கப்பூர் மற்றும் ஆஸ்திரேலியாவில் நிபுணர்களுடன் சேர்ந்து அவர் பணியாற்றியிருக்கிறார். பல்வேறு குறைபாடுள்ள குழந்தைகளுக்கு உதவியிருக்கிறார். அவர் 130-க்கும் மேற்பட்ட குழந்தைகளுடன் பணிபுரிகிறார். சிறப்புக் குழந்தைகளின் தேவைகளை நேர்காணல் மூலம் மதிப்பீடு செய்கிறார். அவர்களுக்கு புத்திசாலித்தனம் (ஐ.க்யூ) எந்த அளவுக்கு உள்ளது, கற்றலை அவர்களின் மூளை எந்த அளவுக்கு உள்வாங்கிக் கொள்கிறது என்பதையும் மதிப்பிடுகிறார். அவரின் முயற்சிகளுக்கு நன்றி. பலரும் இந்த துறையை பற்றி அறிந்துகொண்டுள்ளனர். உள்ளடகத்தையும் புரிந்துகொண்டுள்ளனர். இப்போது பள்ளிகள் சிறப்புக் குழந்தைகளுக்கு அதிக இடங்களை வழங்க முன்வந்துள்ளன என்றார் அவர்.

அத்தகைய பள்ளிகள் மற்றும் குழந்தைகளுக்கு எந்த அளவுக்கு ஆதரவு தேவை என்பதை அடிக்கோடிட்டு காட்டுகிறார். சில நேரங்களில் ஒரு குழந்தைக்கு மூன்று ஆசிரியர்கள் தேவைப் படுவார்கள். நான் இந்த பள்ளிகளுக்குச் சென்று சிறப்பு உதவி தேவைப் படும் குழந்தைகளைப் பார்த்திருக்கிறேன். சில குழந்தைகளுக்கு சரியாக எழுந்து நிற்கத் தெரியாது. புதிதாக எதையும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். நமது நோக்கம் என்னவென்றால் அவர்களை சுதந்திரமாக செயல்பட வைப்பதாகும். அவர்களால் கதவின் தாழ்ப்பாளை கையாள்வது, கதவுகளைத் திறப்பது போன்ற எளிய விஷயங்களைச் செய்ய கற்று தருகிறோம். மேலும் தொடுதிரை மற்றும் ஸ்மார்ட் டி.வி.க்களை பயன்படுத்துவதன் மூலம் குழந்தைகள் தங்கள் எண்ணங்களை,






Helping special children in inclusive schools - Tamil - October 2023.indd 26 9/27/2023 12:17:23 PM

யோசனைகளை வெளிப் படுத்த உதவியுள்ளோம். இந்த நடைமுறையில் குழந்தைகள் கற்றுக் கொள்கிறார்கள்.

கல்பனாவின் அனுபவம் மற்றும் நிபுணத்துவத்தை பயன்படுத்தி பள்ளிகளுக்கு சிறப்புக் குழந்தை களுக்கான ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டனர். அடுத்த கட்டமாக பல்வேறு குறைபாடுகள் உள்ள குழந்தைகளுக்கு தேவையான உபகரணங்கள் கொள் முதல் செய்யப்பட்டன. அவர்களின் சமநிலை, செயல்திறனை மேம் படுத்து கருவிகள், மேலும் குழந்தைகளின் அறிவாற்றலை மேம் படுத்த டிஜிட்டல் போர்டுகள், புதிர்கள் மற்றும் துணை கற்பித்தல் பொருள்கள் பொருட்களும் இதில் அடங்கும். பல்வேறு குறைபாடுகள் உள்ள குழந்தைகளுக்குத் தேவைப்படும் உபகரணங்களை பள்ளிக்கு வாங்குவதற்கு சரியான நபரை வேலைக்கு அமர்த்தவும் நான் உதவினேன்.

இதற்கெல்லாம் பணம் செலவாகும்.



RC *மெட்ராஸ் சவுத் முன்னாள் தலைவர் ஜவஹர் நிச்சானி மற்றும் அவர் மனைவி அக்ஷயா.*



RC *மெட்ராஸ் சவுத் நிறுவியுள்ள சிறப்பு வகுப்பறையில் பல தரப்பட்ட செயல்களை குழந்தைகள் கற்றுக் கொள்கின்றனர்.*



Helping special children in inclusive schools - Tamil - October 2023.indd 27 9/27/2023 12:17:24 PM





ஆனால், பள்ளிகள் அரசு குறிப் பிட்ட குறைந்தபட்ச நிர்ணய கட்டணத்தை தவிர வேறு பணம் வசூலிப்பதில்லை. உண்மையில் நாங்கள் இந்த பள்ளிகளுக்கு வழங்கிய உபகரணங்கள் உயரடுக்கு பள்ளிகளில் கூட கிடையாது என்று அவர் மேலும் கூறினார்.

நிச்சானி மற்றும் அவரது குழுவினர் பணம் திரட்டுவதற்கு துரிதமாக செயல்பட்டனர். தொடக்கத்தில் ரூ.30 லட்சம் ச ர்வதேச மானிய உதவிக்கு அவர் விண்ணப்பித்தார். ஆனால், அது கிடைக்கவில்லை. அவர்கள் பல கேள்விகளை கேட்டு. பல்வேறு சந்தேகங்களை எழுப்பினார்கள். நான் எனது பதவிக் காலத்தில் இந்த திட்டத்தை செயல்படுத்த விரும்பினேன். எனவே நாங்களே நிதி திரட்ட முடிவு செய்தோம்.

ஒட்டுமொத்தமாக 8 பள்ளிகளுக்கும் ரூ.85 லட்சம் செலவிடப்பட்டது. சிறப்பு ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்து பயிற்சி அளித்து பணியில் அமர்த்த நாங்கள் ரூ.14 லட்சம் வரை செலவிட்டோம். கணினி, தொடுதிரை டி.வி. மற்றும் சிறப்புக் குழந்தைகளுக்கான இதர உபகரணங்கள் வாங்க ரூ.20 லட்சம் செலவானது. கெம்பாஃப் அல்காலிஸ் (Chemfab Alkalies) நிறுவனம் தங்களது கார்ப்பொரேட் நிறுவனங்களின் சமூக பொறுப்புணர்வு திட்டத்தின் கீழ் ரூ.2 லட்சம் வழங்கியது. இரண்டு அறக்கட்டளைகளை நடத்தி வரும் அவர்களது உறுப்பினர்களில் ஒருவர் ரூ.60 லட்சம் கொடுத்தார். இதர சங்க உறுப்பினர்கள் ரூ.13 லட்சம் நன்கொடையாக வழங்கினர். ஊனமுற்ற குழந்தைகளின் பெற்றோர்களுக்கு வசதியாக நகரத்துக்கு அருகாமையில் உள்ள பள்ளிகளே தேர்ந்தெடுக்கப்பட்டன என்றும் அவர் கூறினார்.

பயனாளி பள்ளிகளில் உள்ள குழந்தைகளின் பெற்றோர் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளனர். ஏனெனில் அவர்கள் இறுதியாக தங்கள் குழந்தைகளை பிரதான பள்ளிக் கல்வியில் சேர்த்தால், சிறப்புக் குழந்தைகளுக்கு இதுபோன்ற சிறப்பு சேவைகளைப் பெறுவதற்கு நிறைய பணம் செலவாகும்

சில குழந்தைகளுக்கு சரியாக எழுந்து நிற்கத் தெரியாது. புதிதாக எதையும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். நமது நோக்கம் என்னவென்றால் அவர்களை சுதந்திரமாக செயல்பட வைப்பதாகும்.






Helping special children in inclusive schools - Tamil - October 2023.indd 28 9/27/2023 12:17:25 PM





என்பதால் அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் இருக்கிறார்கள். ஒருவகையில் இது ரோட்டரியின் சிறந்த திட்டமாகும். மேலும் இதுபோன்ற சிறப்புக் குழந்தைகளுக்கு கல்வி மற்றும் மருத்துவ மறுவாழ்வு கைகோர்த்துச் செல்கிறது என்பதை நினைவில் கொள்வது முக்கியம். அதனால் தான் ஆக்குபேஷன் தெரபி மிகவும் முக்கியமானது என்கிறார் கல்பனா.

ஆராய்ச்சி கட்டத்தின்போதும், திட்டத்தைச் செயல்படுத்திய பின்னரும் மாணவர்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்களா, அவர்களுக்கு ஏதேனும் கவலை இருக்கிறதா என்பதை அறிய மாணவர்கள் மற்றும் பெற்றோர்களிடம் கருத்துக்கள் கேட்கப்பட்டன என்று நிச்சானி விளக்கினார். ரோட்டேரியன்கள் இரண்டு பள்ளிகளில் 6 ஆசிரியர்களை பணிக்கு அமர்த்தியுள்ளனர். இதுபோன்ற குழந்தைகளை கண்காணிக்கவும், அவர்களுக்கு உதவி செய்யவும் அவர்களின் முன்னேற்றத்தை மதிப்பிடவும் நிழல் ஆசிரியர்கள் அல்லது துணை கல்வியாளர்கள், பேச்சுக் குறைபாடுள்ள குழந்தைகளுக்கு பேச்சுத்திறன் அளிக்கும் வல்லுநர்கள். அவர்களின் நடத்தையை மாற்றியமைத்து நல்ல பழக்க வழக்கங்களைச் சொல்லிக் கொடுக்கும் செயல்திறன் பயிற்சியாளர்கள் தேவை. அறிவியல் அடிப்படையில் ஒரு முழுமையான கண்ணோட்டத்தை வழங்குவதற்கு சிறப்பு கல்வி யாளர்களும், உளவியலாளரும் தேவை என்றார் அவர். இந்த திட்டத்துக்கு உற்சாகத்துடன் ஆதரவு அளித்த ரோட்டரியன் களுக்கு அவர் நன்றி தெரிவித்தார். ■





Helping special children in inclusive schools - Tamil - October 2023.indd 29 9/27/2023 12:17:27 PM

# ஒரு நகரத்தை உருமாற்றிய கதை

வித்யோத்தமா சர்மா

ரோட்டரியானது மக்களின் வாழ்க்கையை உயர்த்துவது மட்டுமல்லாமல், முழு நகரத்தையும் அதன் பரோபகாரப் பணிகளால் மாற்றியமைக்க முடியும். குஜராத்தின் மிகவும் பிரபலமான தொழில்துறை நகரான வாபியை மாற்றிய நகரத்தின் முதல் மருத்துவ மனையான ஹரியா LG ரோட்டரி மருத்துவமனையின் கதை தான் இது. உலகின் மிக நீண்டகாலமாக இயங்கும் ரோட்டரி திட்டங்களில் ஒன்றின் கதை.


1960கள் மற்றும் 1970களில் தொழிற்சாலைகள் வாபியை தங்கள் முகவரியாக மாற்றத் தொடங்கியபோது, அந்த நகரம் தொழில்மயமாக்கல் உலகில் தயக்கத்துடன் நுழைந்த போது,



*மருத்துவமனை வளாகத்தில் புற்றுநோய் மையம் கட்டப்பட்டு வருகிறது.*



When Rotary transformed a city - Tamil - October 2023.indd 30 9/26/2023 5:17:11 PM



வாபியின் வாழ்வாதாரக் குறியீடு மிக குறைவாக இருந்தது. ஒரு முறையான மருத்துவமனையை விட்டுவிடுங்கள், அவசரகாலத்தில் நோயாளியை அழைத்துச் செல்ல போதுமான சிகிச்சையகம் கூட அங்கே இல்லை.

“ஒரே ஒரு மருத்துவர் மட்டுமே முழு நகரத்திற்கும் சேவை செய்தார், நாய்களும் பாம்புகளும் சுதந்திரமாக எங்கும் சுற்றித் திரிந்தன” என்று ரோட்டரி இன்டர்நேஷனலின் முன்னாள் தலைவரும், வாபியில் நன்கு அறியப்பட்டவருமான கல்யாண்பானர்ஜி நினைவு கூர்ந்தார், அவர் ரோட்டரி மற்றும் கடந்த ஐந்து தசாப்தங்களாக தொடர்புகொண்டுள்ள UPL நிறுவனத்தின் மூலம் சமூகப் பணி செய்துள்ளார். “நகரம் கடுமையான கொசுப் பிரச்சனையைக் கொண்டிருந்தது மற்றும் அதிகப்படியான மழை அங்கே பொழியும். மக்கள் தங்களின் முக்கிய தேவைகள் அனைத்திற்கும் பெரிய நகரங்களையே சார்ந் திருந்தனர். பானர்ஜி, 60களின் பிற்பகுதியில், நிறுவனத்தின் உரிமையாளரும் தலைவருமான ரஜினிகாந்த் ஷ்ராஃப் (ரஜ்ஜு ஷ்ராஃப் என்று பிரபலமாக அறியப்பட்டவர்) உடன் இணைந்து யுனைடெட் பாஸ்பரஸை அமைப்பதில் உதவு வதற்காக வாபிக்கு சென்றார்.

ஒரு நாள் மாரடைப்பால் ஒரு நண்பர் இறந்துவிட்டார். அவரின் மருத்துவ பிரச்சனை என்ன என்று மருத்துவரால் கண்டறிய முடியவில்லை. அதனால், அவருக்கு சரியான மற்றும் உடனடி சிகிச்சை அளிக்கப்படவில்லை என்று பானர்ஜி நினைவு கூர்ந்தார். எங்களால் அப்போது ஒன்றும் செய்ய முடியவில்லை. அது எங்களை கடுமையாக தாக்கியது. நாங்கள் இந்த நகரத்தில் பிழைக்க வேண்டுமென்றால், எங்களுக்கு ஒரு மருத்துவமனை தேவை என்று முடிவுசெய்தோம்.

### ஒரு சிறிய சிகிச்சையகம்

எனவே, யுனைடெட் பாஸ்பரஸ் தொடங்கப்பட்டபோது, பானர்ஜி மற்றும் தலைவரின் மனைவி சாண்ட்ரா ஷ்ராஃப் ஆகியோரும் நகரத்திற்கு மிகவும் தேவைப்படும் அடிப்படை உள்கட்டமைப்பை உருவாக்கத் தொடங்கினர். ஷ்ராஃப் ஞான் தாம் பள்ளியில் கவனம் செலுத்தத் தொடங்கினார், நகரின் மருத்துவத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஒரு சிகிச்சையகத்தை உருவாக்க பானர்ஜி தனது ஆற்றலைச் செலவிட்டார். அவர் உறுப்பினராக இருந்த RC வாபியிடம் இருந்து சிகிச் சையகத்திற்கான யோசனை வந்தது. அவர் ஈடுபட்டதால், யுனைடெட் பாஸ்பரஸ் (அப்போது அது UPL ஆகவில்லை) பின்தங்கியிருக்க முடியவில்லை. CSR சரியாகப் புரிந்து கொள்ளப்படாத காலக்கட்டத்தில், அதன் ஆரம்ப ஆண்டுகளில் கூட, அந்த நிறுவனம் CSR பணிகளை செய்ய ஆரம்பித்தது.

அது எளிதாக அமையவில்லை. ஒரு புதிய நிறுவனத்திற்கு நேரம், ஆற்றல் மற்றும் பெரிய முயற்சிகள்



When Rotary transformed a city - Tamil - October 2023.indd 31 9/26/2023 5:17:12 PM

தேவை. ஒரு புதிய சிகிச்சையகத் திற்கும் அது தேவை. ''ஆரம்பத்தில் எங்கிருந்து தொடங்குவது என்று எங்களுக்குத் தெரியவில்லை. எனவே நாங்கள் சிறியதாக தொடங்கினோம்'' என்று பானர்ஜி கூறுகிறார். 1978ஆம் ஆண்டில், RC வாபியைச் சேர்ந்த சில ரோட்டேரியர்கள், யுனைடெட் பாஸ்பரஸின் சில பணியாளர்கள் மற்றும் பொறியாளர்கள் சங்கத்தின் சில உறுப்பினர்கள் ஒன்றிணைந்து 10 படுக்கைகள் கொண்ட சிகிச்சையகத்தை உருவாக்கினர். ''நாங்கள் ஒரு எக்ஸ்-ரே இயந்திரத்தை நிறுவி இதய பரிசோதனைகளை தொடங்கினோம் – அவை மாரடைப் புக்கான முதன்மை சிகிச்சை ஆகும். ஒரு ஆம்புலன்ஸ் சேவையையும் தொடங்கினோம். இன்னும் மேம்பட்ட மருத்துவ வசதிகள் எங்களிடம் இல்லை. ஆனால் குறைந்தபட்சம் அது ஒரு தொடக்கமாக இருந்தது'' என்று அவர் நினைவு கூர்ந்தார். கூட்டாண்மை மற்றும் நன்கொடை களை செயல்படுத்துவதற்காக, சங்கம் ஒரு அறக்கட்டளையை உருவாக்கியது, அது தான் ரோட்டரி நன்கொடை அறக்கட்டளை.

### ஒரு சிறிய மருத்துவமனை

ஆனால் வாபி வேகமாக வளர்ந்தது. அதிகமான மக்கள் தொடங்கினர். வளர்ந்து வரும் நகரத்தின் தேவையை ஒரு சிகிச்சையகத்தினால் பூர்த்தி செய்யமுடியவில்லை. ''உலகின் சிறந்த நீர் விநியோகம்'' கொண்ட வாபி, யார் வேண்டுமானாலும் ஒரு தொழிலை கட்டியெழுப்புவதற்கான வாய்ப்பை வழங்கியது. அதற்கு எல்லா வசதிகளும் தேவைப்பட்டது. பத்து படுக்கைகள் 1982-ல் 24 படுக்கைகளுக்கு வழிவகுத்தது, பின்னர் ரோட்டரி நிராமயா மருத்துவ மனை உருவானது.

*மருத்துவமனையில் பிறந்த குழந்தை ICUவில் சிகிச்சை பெற்று வருகிறது.*



மருத்துவமனைக்கான நிலத்தை ரோட்டேரியர்கள் எவ்வாறு பெற்றனர் என்பதும் ஒரு சுவாரஸ்யமான கதை. குஜராத் தொழில் வளர்ச்சி கழகம் (GIDC) 1967–68-ல் வாபியில் நிறுவப்பட்டது. ரஜ்ஜு ஷ்ராஃப் ஆரம்ப நாட்களிலேயே அதன் வாரிய உறுப்பினரானார். ரோட்டரி மற்றும் UPL நிறுவனம் ஒரு மருத்துவ மனையை கட்டுவது நகரத்தில் பெரும் செய்தியாக இருந்தது, கல்வி மற்றும் மருத்துவ சேவைகளுக்கு நிலம் கோரி GIDC-ஐ அணுகியபோது, பள்ளிக்காக நிறுவப்பட்ட ஞான் தாம் அறக்கட்டளைக்கும், ரோட்டரி அறக்கட்டளைக்கும் இலவச நிலத்தை வழங்கியது.

''ஆரம்ப கட்டங்களில், எங்களிடம் நிதியோ அல்லது மற்ற ஆதாரங்களோ எதுவும் இல்லை'' என்று யுனைடெட் பாஸ்பரஸின் தலைமை பொறியாளரும் ரோட்டேரியருமான பிரஃபுல் தெவானி கூறுகிறார். எனவே, மருத்துவமனை எல்லாவற்றிக்கும் நிறுவனங்களின் உதவியை நம்பியிருந்தது. உதாரணமாக, ஒரு டியூப் லைட் அல்லது மின் விளக்கை பழுதுபார்க்க வேண்டும் அல்லது மாற்றவேண்டும் என்றால் நிறுவனத்தைச் சேர்ந்த எலக்ட்ரீஷியன் வந்து அதைச் செய்வார். இதேபோல், ஒரு கழிப்பறை அடைப்பு ஏற்பட்டாலோ அல்லது குளியலறையில் சிக்கல்கள் ஏற்பட்டாலோ பிரச்சனையைச் சரிசெய்ய நிறுவனம் அதன் பிளம்பர்களை அனுப்பும். ஆம்புலன்ஸுக்கு, ரோட்டேரியர்கள் தனிப்பட்ட உத்தரவாதம் வழங்கினர், ஏனெனில் தனிப்பட்ட உத்தரவாதங்கள் இல்லாத நிலையில் கடன்கள் வழங்கப்படாது.'' அவை ஆரம்ப நாட்களாக இருந்தும் ரோட்டரியின் சேவை மனப்பான்மை பற்றிய செய்தி வாபி முழுவதும் பரவியது.

### ரோட்டரியர்களிடமிருந்து உதவி

ரோட்டரியின் இந்த கனவை வடிவமைப்பதில் ரோட்டரியர்கள் அதிக நேரத்தையும் சக்தியையும் செலவிட்டனர். அவர்கள் காலையில் மருத்துவமனைக்குச் செல்வார்கள், பின்னர் தங்கள் அலுவலகத்திற்குச்




*நன்கொடையாளர்களான P M தேசாய் மற்றும் ரேகா ஆகியோர் புற்றுநோய் மையத்தின் கட்டுமானத்திற்கான காசோலையை PRIP மற்றும் ரோட்டரி அறக்கட்டளையின் தலைவர் கல்யாண் பானர்ஜியிடம் (R) ஒப்படைத்தனர். உடன் ஹரியா L G ரோட்டரி மருத்துவமனை இயக்குனர் மற்றும் தலைமை மருத்துவர் டாக்டர் S S சிங்.*

செல்வார்கள், பின்னர் மீண்டும் மருத்துவமனைகளுக்கு இடைவேளை யிலும் சில சமயங்களில் மாலையிலும் கூடச் செல்வார்கள். வாபியில் பல மருந்து நிறுவனங்கள் இருந்தன, இந்த நிறுவனங்களின் பல உரிமையாளர்கள் ரோட்டேரியர்களாகவும் இருந்தனர். எனவே, பணம் கொடுக்க முடியாத நிறுவனங்கள், சிறந்த விலையில் மருந்துகளை கொடுத்து உதவினர்.

மருத்துவமனையை இப்போது மேலும் விரிவுபடுத்த வேண்டியிருந்தது. ரோட்டரியின் நல்ல வேலையைக் கண்டு, ஹரியா குழுமம் ரோட்டரி அறக்கட்டளையுடன் கைகோர்க்க முன் வந்தது, மேலும் மருத்துவமனை கட்டுவதற்கான செலவை ஈடுகட்ட லகம்ஷி கோவிந்த் ஹரியா ஆதரவு அளிக்க முன்வந்தார். மருத்துவ மனைக்கு இப்போது ஹரியா LG ரோட்டரி மருத்துவமனை என்று பெயரிடப்பட்டுள்ளது. இரண்டு ஹரியா குழுமப் பிரதிநிதிகளும் ஐந்து ரோட்டேரியர்களும் அதற்கு அறங்காவலர்களாக ஆனார்கள். அவர்களில் பானர்ஜியும் ஒருவர். அவர் அறக்கட்டளையின் மூன்றாவது தலைவராக பணியாற்றினர். மருத்துவ மனை பின்னர் 32 படுக்கை வசதியாக மாறியது. ஒரு மருத்துவரிலிருந்து, அது அதன் சொந்த எலும்பியல் மருத்துவர், பின்னர் ஒரு அறுவை சிகிச்சை நிபுணர் என பெருகியது. உருது மொழி கவிதை சொல்வது போல்: மக்கள் கூடினர், ஊர்வலம் பெருகியது. ரோட்டரி கனவுக்கு இப்போது உறுதியான அடித்தளம் கிடைத்தது.

இன்று 250 படுக்கைகள் கொண்ட இந்த மருத்துவமனை அதன் சொந்த விபத்து மற்றும் அவசர சிகிச்சை மையத்துடன் கூடிய சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையாக உள்ளது. மருத்துவமனையின் பிரதான ICU-வில் 54 படுக்கைகள் உள்ளன. வெவ்வேறு பிரிவுகளிலும் பல்வேறு ICக்கள் உள்ளன, மேலும் அனைத்து ICக்களிலும் உள்ள மொத்த படுக்கைகளின் எண்ணிக்கை இப்போது சுமார் 75 ஆக உயர்ந்துள்ளது, ஒரு ICU-விலிருந்து தொடங்கிய மருத்துவமனைக்கு இது ஒரு கணிசமான முன்னேற்றம்.

மருத்துவமனையில் இப்போது 70 முழுநேர மருத்துவர்களும் (மருத்துவ அலுவலர்கள் உட்பட) மற்றும் பல்வேறு துறைகளில் சுமார் 80 பகுதிநேர மருத்துவர்களும் உள்ளனர் (கதிரியக்கவியல், இருதயவியல், அறுவை சிகிச்சை, மகளிர் மருத்துவம், விபத்து மற்றும் அவசர சிகிச்சை, எலும்பியல், தோல் மருத்துவம், பல் மருத்துவம், கண் மருத்துவம் மற்றும் நரம்பியல் அறுவை சிகிச்சை). இங்கு நான்கு அறுவை சிகிச்சை கூடங்கள், ஒரு கண் மருத்துவ அறுவை சிகிச்சை கூடம் மற்றும் ஒரு ரத்த வங்கி உள்ளது.

### புற்றுநோய் பராமரிப்பு

கதிர்வீச்சு பிரிவுடன் கூடிய ஒரு புற்றுநோய் மையம் இப்போது அங்கே தொடங்கப்பட உள்ளது. அது தயாராகிவிட்டால், புற்றுநோயாளிகள் சிகிச்சைக்காக மும்பை செல்ல வேண்டியதில்லை. "எங்களிடம் இல்லாத ஒரே விஷயம் இதுதான்" என்கிறார் தலைமை மருத்துவர் மற்றும் மருத்துவ சேவைகள் இயக்குநரும் ரோட்டேரியருமான Dr S S சிங். அளவில், இது மும்பையின் டாடா புற்றுநோய் மருத்துவமனையைப் போலல்லாமல் இருக்கலாம், ஆனால் அவர்கள் வழங்கும் அனைத்து சேவைகளையும் நாங்கள் வழங்குவோம். எங்களிடம் புற்றுநோயியல் நிபுணர், புற்றுநோய் அறுவை சிகிச்சை நிபுணர் மற்றும் ரேடியோ தெரபிஸ்ட் குழு உள்ளது. மேலும் சமீபத்திய கதிர்வீச்சு இயந்திரத்தை விரைவில் கொண்டு



When Rotary transformed a city - Tamil - October 2023.indd 33 9/26/2023 5:17:28 PM

வருவோம். ESIS அல்லது ஆயுஷ்மான் யோஜனா போன்ற அரசின் திட்டங்களைச் சார்ந்திருக்கும் ஒவ்வொரு ஏழை நோயாளியும் எங்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெறவேண்டும் என்பதே எங்கள் நோக்கம்.

உலகிலேயே மிக நீண்ட காலமாக இயங்கி வரும் ரோட்டரியின் நிரந்தர திட்டங்களில் ஒன்றான இந்த மருத்துவமனையின் முக்கியத்துவத்தை 15 சர்வதேச ரோட்டரி தலைவர்கள் தங்கள் இந்திய வருகையின் போது பார்வையிட்டதில் இருந்து அறியலாம்.

அறக்கட்டளையின் நிலத்தில், மொத்தம் 30,000 சதுர மீட்டர் பரப்பளவில் சுமார் 1.25 லட்சம் சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்ட மருத்துவமனையில், அடுத்த ஆண்டு ஜூன் மாதத்திற்குள் புற்றுநோய் மையம் அதன் கதிர்வீச்சு பிரிவோடு வந்தவுடன், மேலும் 40,000 சதுர அடி கட்டப்பட்ட பகுதி சேர்க்கப் படும். இது நான்கு தளங்களைக் கொண்டிருக்கும், ஒவ்வொரு தளமும் 10,000 சதுர அடி வரை இருக்கும்.

### செவிலியர் கல்லூரி

சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்ட சாண்ட்ரா ஷ்ராஃப் ROFEL (கல்வி மற்றும் கற்றலுக்கான ரோட்டரி அறக்கட்டளை) செவிலியர் கல்லூரியுடன் இணைந்தே இந்த மருத்துவமனை உள்ளது. தெற்கு குஜராத் பல்கலைக்கழகத்துடன் இணைந்த அந்த செவிலியர் கல்லூரி, டிப்ளமோ, Bsc மற்றும் Msc படிப்புகளுடன் ஆண்டுக்கு 100க்கும் மேற்பட்ட செவிலியர்களுக்கு பயிற்சி அளித்து வருகிறது. ''கடந்த ஆண்டு முதல், கல்லூரி செவிலியர்களுக்கு உயர் நம்பகத்தன்மையுள்ள உருவபொம்மையை கொண்டு அனைத்தையும் கற்பிக்கும் ஒரு சிறந்த உருவகப்படுத்துதல் ஆய்வகத்தை அறிமுகப்படுத்தி யுள்ளது, இதனால் அவர்கள் நோயாளிகளிடம் நேரடியாகக் கற்றுக்கொள்ள வேண்டியதில்லை'' என்று டாக்டர் சிங் கூறுகிறார்.

சில செவிலியர்கள் வெளிநாடு களுக்குச் செல்ல, சிலர் தங்கள் சொந்த ஊருக்குத் திரும்புகிறார்கள், சுமார் 20 முதல் 30 சதவீதம் பேர் மருத்துவமனையிலேயே






**இடதுபுறம்:** *அடிக்கல் நாட்டு விழா – ரோட்டரி மருத்துவமனை.*




PRIP *ஃப்ராங்க் டெவ்லின் பிப்ரவரி* 19, 2003 *அன்று வெள்ளி விழா தொகுதிக்கு அடிக்கல் நாட்டினார்.*








*டிசம்பர்* 8, 2004-*ல் வெள்ளி விழா வார்டின் திறப்பு விழாவில்* PRIP *க்ளென் எஸ்டெஸ்.*



When Rotary transformed a city - Tamil - October 2023.indd 34 9/26/2023 5:17:35 PM



**மேலே:** *முதல் ஆபரேஷன் தியேட்டர் மார்ச் 21, 1981 அன்று RI தலைவர் (1982–83) ஸ்டான்லி மெக்காஃப்ரியால் திறந்து வைக்கப்பட்டது. PRIP பானர்ஜி இடதுபுறத்தில் காணப்படுகிறார்.*

*பிப்ரவரி 1994-ல் PRIP ராஜேந்திர சாபூவால் நுகேம் இரத்த வங்கியின் தொடக்க விழா.*




பணியமர்த்தப்படுகின்றனர் என்று தலைமை நிர்வாக அதிகாரி சோமேஷ் தயாள் கூறுகிறார்.

ரோட்டரி மருத்துவமனையில் யாருக்கும் அனுமதி மறுக்கப் படாது. “நாங்கள் எந்த வைப்புத் தொகைக்காகவும் காத்திருக்க மாட்டோம் அல்லது நோயாளி ஒரு உறவினருடன் வந்தாரா இல்லையா என்பதை நாங்கள் பொருட்படுத்த மாட்டோம். ஒரு நோயாளி அனுமதிக்கப்பட்டவுடன் மருத்துவ மனை உடனடியாக சிகிச்சையைத் தொடங்கும் என்கிறார் டாக்டர் சிங்.

விபத்தில் பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவமனையில் இருந்து 70 முதல் 80 கிமீ தொலைவில் இருக்கும் மகாராஷ்டிராவில் உள்ள காசா அல்லது மானூர் போன்ற இடங்களிலிருந்து இங்கு கொண்டு வரப்படுகிறார்கள் என தயாள் மேலும் கூறுகிறார். சில சமயங்களில் சில நோயாளிகள் சிகிச்சை பெற்றபின் பணம் செலுத்த முடியாமல் போனாலும், முறையான சிகிச்சை அளித்தும் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரால் பணம் செலுத்த முடியாமல் போனாலும் அறக்கட்டளையே அந்த செலவை ஏற்கிறது.

இந்த மருத்துவமனையின் மிகவும் ஈர்க்கக்கூடிய அம்சம் என்னவென்றால், 2011 முதல் இங்கு அனைத்து நோயாளிகளுக்கும் டயாலிசிஸ் சிகிச்சை இலவசமாக செய்யப்படுகிறது. எந்த நோயாளியும் இங்கே வந்து டயாலிசிஸ் செய்து கொள்ளலாம். இதை செயல்படுத்த மருத்துவமனை ஒரு அமைப்பை உருவாக்கியுள்ளது. ஒரு ரோட்டேரியர் அல்லது பணியாளர், அவரது பிறந்த நாள் அல்லது திருமண நாளில், தானாக முன்வந்து ரூ.7,500 நன்கொடையாக வழங்கலாம். எதாவது பற்றாக்குறை ஏற்பட்டால், அறக்கட்டளை முன்வந்து நடவடிக்கை எடுக்கும். “சிறுநீரக நோயாளிகளுக்கு சரியான ஊட்டச்சத்து தேவை என்பதால், மருத்துவமனை ஒவ்வொரு நோயாளிக்கும் ஒவ்வொரு மாதமும் அரிசி, பருப்பு, எண்ணெய், மல்டி-வைட்டமின்கள் மற்றும் பிற முக்கிய உணவுத் தேவைகளை உள்ளடக்கிய ஒரு ரேஷன் கிட்டை வழங்குகிறது” என்கிறார் தயாள். தலசீமியா நோயாளிகளுக்கும், உதடு மற்றும் அண்ணப் பிளவை அறுவை சிகிச்சை தேவைப்படும் நோயாளிகளுக்கும் இலவசமாக சிகிச்சை அளிக்கப்படுகிறது. எங்கள் சுகாதாரப் பணியாளர் அங்கன்வாடிகள் மற்றும் தொலைதூர இடங்களுக்குச் சென்று, அத்தகைய அறுவை சிகிச்சை தேவைப்படும் நோயாளிகளை மருத்துவமனைக்குக் கொண்டு வருகிறார். அவர்களின் போக்குவரத்து, சிகிச்சை மற்றும் உணவு செலவு அனைத்தையும் மருத்துவமனையே ஏற்கிறது என்கிறார் டாக்டர் சிங். அதன் முழு அளவிலான இதய அறுவை சிகிச்சை பிரிவில், கடந்த ஆறு ஆண்டுகளாக பெரியவர்களுக்கும் குழந்தைகளுக்கும் திறந்த இதய அறுவை சிகிச்சைகள் செய்யப்படுகின்றன.

550 பணியாளர்களைக் கொண்ட மருத்துவமனை இப்போது தன்னிறைவு பெற்றுள்ளது. “எங்களுக்கு எப்போதாவது ஒரு தேவை ஏற்பட்டால், UPL மற்றும் பிற தொழில்கள் எங்களுக்கு உதவ இருக்கின்றனர் என்பதை நாங்கள் அறிவோம், ஆனால் இப்போது எங்களிடம் வளங்கள் உள்ளன, அதைக்கொண்டு எங்களால் எங்களை நிர்வகித்துக் கொள்ளமுடியும்” என்று அவர் மேலும் கூறுகிறார். தற்போது, புற்றுநோய் மையத்திற்கு மிகப்பெரிய பணத் தேவை உள்ளது,



PRIP *லூயி க்யே (நடுவில்) அவரது மனைவி எலினா குரூஸ்,* PRIP *பானர்ஜி* (R) *மற்றும் பினோதா (இடதிலிருந்து இரண்டாவது) மருத்துவமனையில் கண் மருத்துவப் பிரிவைத் திறந்து வைத்த பிறகு.*



When Rotary transformed a city - Tamil - October 2023.indd 35 9/26/2023 5:17:36 PM



*கேத் ஆய்வகத்தின் ஒரு காட்சி.*

அனால் அதற்கு உதவ தாராள நன்கொடையாளர் PM தேசாய் முன் வந்துள்ளார்.

பீகார், உ.பி., கர்நாடகாவிலிருந்து நோயாளிகள் இங்கு வருகிறார்கள். இங்கிருந்து பணிபுரியும் தொழிலாளர்கள் விடுமுறையில் சொந்த ஊருக்குச் செல்லும்போது, நோய்வாய்ப்பட்ட உறவினர்களை அழைத்து வந்து சிகிச்சை அளிக்கின்றனர்'' என்றார்.

அவ்வப்போது தேவைகளைப் பூர்த்தி செய்வதே எனது கொள்கை. அம்பானி மருத்துவமனையின் தரத்தை எங்களால் பெறமுடியாது என்று எனக்கு தெரியும், ஆனால் குறைந்த முதலீட்டில் அதுபோன்ற வசதிகளை எப்படி வழங்க முடியும் என்பதைப் பார்ப்பதே எங்களின் நோக்கமாக இருந்தது என்கிறார் பானர்ஜி. ரோட்டேரியர்கள் இங்கு தங்கள் முயற்சிகளுக்கு ஒரு பைசா கூட வாங்குவதில்லை; ஒரு கோப்பை தேநீருக்குக் கூட பணம் கொடுக்கிறார்கள். மருத்துவர்களின் சம்பளத்தில் நாங்கள் சமரசம் செய்வதில்லை. வாபியில் தங்குவதற்கு அவர்களை ஊக்குவிக்கும் வகையில் மற்ற மருத்துவமனைகளுக்கு இணையாக அவர்களுக்கு ஊதியம் வழங்குவது அவசியம். எங்களிடம் ஏதோ ஒன்று நன்றாக இருக்கிறது. அதை நாங்கள் நிச்சயமாக மேம்படுத்த முடியும்.''

மருத்துவமனையில் ஏதாவது குறை இருக்கிறதா? என்ற கேள்விக்கு "நாங்கள் எங்கள் சொந்த மாற்று அறுவை சிகிச்சை மற்றும் புற்றுநோய் மையத்தை தொடங்கினால், எங்களிடம் அனைத்தும் கைவசம் இருக்கும். ரோட்டரி மூலம் இங்கு மருத்துவ சுற்றுலா போன்ற ஒன்றை தொடங்கும் யோசனையை நான் முன்வைத்துள்ளேன். நாம் நம் மருத்துவமனையை அந்த வழியில் விளம்பரப்படுத்தினால் வங்காளதேசம், பாகிஸ்தான் மற்றும் ஆப்பிரிக்கா உள்ளிட்ட மூன்றாம் உலக நாடுகளைச் சேர்ந்த நோயாளிகளுக்கு மிகவும் மானிய விலையில் சிகிச்சை அளிக்கமுடியும் என்று டாக்டர் சிங் எதிர்காலத் திட்டங்களைப் பற்றி கூறுகிறார்.

அதன் முழு மக்களுக்கும் ஒரே ஒரு மருத்துவர் மட்டுமே இருந்த நகரத்திலிருந்து, 45 ஆண்டுகளுக்குள், இப்போது இந்தியா முழுவதிலும் இருந்து சிறப்பு சிகிச்சைக்காக நோயாளிகளை வரவேற்கிறது வாபி.■



When Rotary transformed a city - Tamil - October 2023.indd 36 9/26/2023 5:17:40 PM

# BECOME A DOCTOR IN USA

## XAVIER UNIVERSITY ARUBA'S 6 YEAR PROGRAMME TO TRANSFORM YOUR AMERICAN DREAM INTO A REALITY

REGISTER FOR OPEN HOUSE

# WEBINAR

XUSOM.COM/INDIA/

Tuesday, October 3 at 7pm IST
Thursday, October 5 at 7pm IST



### DOCTOR OF MEDICINE

**First 2 years**
Start @ KLE, Campus Karnataka, India

**Next 2 years**
Continue @ Xavier's Campus Aruba, Caribbean island - Netherland

**Next 2 years**
Complete @ Xavier's affiliated Teaching Hospitals USA / Canada

### DOCTOR OF VETERINARY MEDICINE

**First 2 years**
Start @ KLE, Campus Karnataka, India

**Next 3 years**
Continue @ Xavier's Campus Aruba, Caribbean island- Netherland

**Final year**
Complete @ Xavier's affiliated Teaching Hospitals USA / Canada

**Limited Seats**


The session starts in January 2024

To apply, Visit: application.xusom.com
Contact: Uday @+91 91 0083 0083 +91 98 8528 2712
email: infoindia@xusom.com

XAVIER STUDENTS ARE ELIGIBLE FOR H1/J1 Visa PROGRAMME

ADVT.

Advt - Xavier - Tamil - October 2023.indd 37
9/27/2023 12:48:27 PM



*ரீனா மற்றும் கில்பர்ட் ரவிச்சந்திரனின் திருமண நிகழ்வு.*

# காதல், கடிதங்கள் மற்றும் நெகிழ்ச்சி

கிரண் ஜெஹரா

அந்த அனாதை இல்லத்தில் இருந்த சிறுமிகளின் மகிழ்ச்சி கலந்த சிரிப்பை பார்த்த போது, ரீனா ரவிச்சந்திரனுக்கு பழைய நினைவலைகள் திரும்பியது. ஒரு துயரமான விபத்தை சந்தித்து உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த கணவரை கவனித்துக் கொள்வதற்காக மருத்துவமனையின் தாழ்வாரத்தில் கவலையுடன் இரவில் தூங்காமல் விழித்திருந்து அடுத்து என்ன நடக்குமோ என்று பதைபதைக்க காத்திருந்தது ரீனாவுக்கு நினைவுக்கு வந்தது. அனாதை இல்லத்தில் கைவிடப்பட்ட இந்த குழந்தைகளின் உணர்ச்சிக் கொந்தளிப்பு எனது பயத்தை மாற்றி ஆறுதல் அளிப்பது போல் இருந்தது என்கிறார் ரீனா.

1984-ம் ஆண்டு, கொல்கத்தாவைச் சேர்ந்த ரீனா என்ற இளம் பெண், சென்னையைச் சேர்ந்த தமிழ் கிறிஸ்தவரான கில்பர்ட் ரவிச்சந்திரனிடம் காதல் வயப்பட்டார். ரவிச்சந்திரனின் குடும்பத்தினர் அவர்களின் காதலுக்கு எதிர்ப்பு தெரிவித்த போதிலும் இருவரும் 1988-ம் ஆண்டு திருமணம் செய்து கொண்டனர். ஒரே மாதத்தில் தனது செயல்கள் மூலம் அனைவரின் அன்பையும் பெற்றார் ரீனா. 1990-ம் ஆண்டு ஆண் குழந்தை பிறந்ததும் அவர்களிடம் இருந்த பிணைப்பு வலுவடைந்தது.

2003-ம் ஆண்டு, ரவிச்சந்திரன், புவனேஸ்வரில் ஒரு மோட்டார் பைக் விபத்தை சந்தித்தார். உடலில் ஏற்பட்ட காயங்களுக்கு அவர் சிகிச்சைபெற்றாலும், மூளையில் இரத்தக்கட்டு ஏற்படுவதை கவனிக்காமல் விட்டுவிட்டனர். ஓராண்டுக்குப் பிறகு அவர் படுக்கையில் பேச்சு மூச்சு இல்லாமல் முடங்கிக்கிடப்பதை கண்டுபிடித்த ரீனா, உடனடியாக அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். மருத்துவக் குழுவினர் மூன்றில் இரண்டு இரத்தக்கட்டுகளை அகற்றினர்.

அவர் குணமடைந்த மூன்று மாதங்களுக்குப் பிறகு வேலைக்குச் சென்ற போது சென்னைக்கு மாற்றப்பட்டார். ஒருநாள் ரவிச்சந்திரன் பணியில் இருந்தபோது திடீரென அவருக்கு வலிப்பு ஏற்பட்டது. உடனடியாக சக ஊழியர்கள் அவரை மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்றனர். தகவல் அறிந்த ரீனா, உடனடியாக விமானம் மூலம் சென்னை சென்றார். ரவிச்சந்திரன் உயிர் பிழைக்க ஐந்து சதவீதம்தான் வாய்ப்பு உள்ளது என்று மருத்துவர்கள் கூறியும், அவருக்கு சிகிச்சை அளிக்குமாறும் அதனால் ஏற்படும் விளைவுகளுக்கான முழுப்பொறுப்பையும் தாம் ஏற்பதாக உத்தரவாதம் அளித்தார். ரீனா சென்னையை அடைந்த சமயத்தில் ரவிச்சந்திரன் கோமா நிலைக்குச் சென்றுவிட்டார். ஆனாலும், ரீனா, சிகிச்சையின்போது அவரது அருகிலேயே இருந்தார்.

அவர் குணமடைந்த இரண்டு மாதங்களுக்குப் பிறகு, கணவன், மனைவி இருவரும் ரயிலில் வீடு திரும்பிக் கொண்டிருந்தனர்.



Love, letters and resilience - Tamil - October 2023.indd 38 9/27/2023 12:34:48 PM

புவனேஸ்வரிலிருந்து அடுத்த ரயில்நிலையம் செல்லும்போது ரவீச்சந்திரனுக்கு மீண்டும் வலிப்பு வந்தது. ரீனா பயந்துபோனாள். ஆனாலும் வலிப்பு வந்தவர்கள் நாக்கை கடித்துக்கொள்ளக்கூடாது என்பதற்காக அவரின் பற்களுக்கு இடையில் ஒரு ஸ்பூனை வைத்தாள். இந்த நெருக்கடியான நேரத்தில் அவருக்கு ஒரு ஊசிபோட வேண்டும். ஆனால், அவளின் கைகள் ஒத்துழைக்க மறுத்துவிட்டன. நான் எனது கணவரின் கையை பிடித்துக்கொண்டே மண்டியிட்டு அமர்ந்தேன். உடனே கடவுளை பிரார்த்தித்தேன். அதிசயமாக அடுத்த சில நிமிடங்களில் வலிப்பு குறைந்தது. உணர்ச்சியை வெளிப்படுத்த நேரமில்லை. நான் உடனடியாக கண்ணீரை துடைத்துக் கொண்டேன். அவரது பற்களிலிருந்து ஸ்பூனை வெளியில் எடுத்தேன். அவருக்கு ஆறுதல் சொன்னேன். அவருக்கு விரைவில் சுயநினைவு வந்தாலும் வலிப்பு பற்றிய நினைவு இல்லை.

அதன் தொடர்ச்சியாக அவர் மருத்துவமனையில் சேர்க்கப் பட்டார். அவருக்கு அறுவைச் சிகிச்சைகள் நடந்தன. 2013-ம் ஆண்டு 25 வது திருமண விழாவில் ரீனா, ரவிச்சந்திரனுக்கு வாழ்த்துச் சொன்னபோது, அவரால் அவளை அடையாளம் காண முடியவில்லை. நான் கேலி செய்கிறேன் என்று அவர் நினைத்திருக்கலாம். எனது செயல் அவருக்கு கோபத்தை ஏற்படுத்தி யிருக்கலாம் என்று நான் கவலைப் பட்டேன். அவர் நினைவாற்றலை இழந்துவிட்டார் என்றார் ரீனா. ஒரு முதன்மை பராமரிப்பாளர் என்ற முறையில் தனது கணவர் அடைந்த துன்பத்தையும் வலியையும் நேரில் கண்டார். இது என்னை மிகவும் உணர்ச்சிவசப்படுத்தியது மற்றும் பிரிவை ஏற்படுத்தியது. நான் மனம் உடைந்திருந்த போதிலும் அவர் மீண்டுவர என்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொள்ள முடிவு செய்தேன். ஒரு நண்பரைப் போல ஒவ்வொரு நாளும் அவரை சந்தித்தேன் என்றார் தழுதழுத்த குரலில்.



ரீனா அவருடன் மனப்பூர்வமாக உரையாடினாள். கடந்த கால சம்பவங்களை பகிர்ந்துகொண்டாள். அவர்களுக்கு பிடித்தமான உணவு, அவர்களின் பணியிடம் பற்றி பேசி னாள். இதையடுத்து ரவிச்சந்திரனுக்கு பணியிடம் நினைவுக்கு வந்தது. எனது மனைவியும் அங்குதான் பணிபுரிகிறாள். அவளிடம் ஒரு கடிதத்தை கொடுக்க முடியுமா என்று ரீனாவிடம் கேட்டார். அதற்கு அவள் ஒப்புக்கொண்டாள். 1984-ம் ஆண்டு திரும்பிவந்தது போல் இருந்தது. காதலின் ஆரம்ப நாட்களில் நாங்கள் கடிதங்களை பரிமாறிக்கொண்ட நாட்கள் எங்களிடம் எதிரொலித்தது என்றார் ரீனா. மகனை கவனித்துக் கொள்வது, அலுவலக நேரம் மற்றும் இரவில் மருத்துவமனை என வாழ்க்கை கயிறு மேல் நடப்பது போல இருந்தது. அவரது கடித்தை எதிர்நோக்கி நான் இருந்தேன். குடும்ப நல்வாழ்வுக்கான கவலை, பதற்றம் மற்றும் பயத்திற்கு இடையில் அவர் என்னை








Love, letters and resilience - Tamil - October 2023.indd 39 9/27/2023 12:34:49 PM

நினைவில் வைத்திருந்தார் மற்றும் என்னை நேசித்தார். அது எனக்கு நம்பிக்கை அளித்தது என்றார் ரீனா.

மொத்தத்தில் வியக்கத் தக்க வகையில் அவர்கள் 400 கடிதங்களைப் பரிமாறிக் கொண்டனர். ஒவ்வொன்றிலும் அந்தரங்க விஷயங்கள், வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் நடந்த விவரங்களை குறிப்பிட்டிருந்தனர். சில கடிதங்களில் அவர், தனது நிறுவனத்தால் ஏழைகளுக்காக திரட்டப்பட்ட நிதி, எந்த பிரச்னையும் இல்லாமல் தங்களை வந்தடைந்ததை உறுதிசெய்யும் இதய பூர்வமான கோரிக்கைகளை பகிர்ந்துகொண்டார். சில கடிதங்களில், தொடர்ந்து அவளுக்கு கடிதம் எழுதுவதற்கு தேவையான நோட்டுப்புத்தகம் மற்றும் பேனாக்களை கேட்டிருந்தார்.



*ரவிச்சந்திரன் தன் மகனுடன்.*

2014-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் ஒருநாள் அவர், ரீனாவை அடையாளம் கண்டு, அவளிடம் பேசியது நம்பிக்கையை ஏற்படுத்தியது. அவளை மிகவும் கஷ்டப்படுத்தியதற்காக மிகவும் வருந்துவதாக அவர் குறிப்பிட்டிருந்தார். ஆனால், அடுத்த மாதமே ரவிச்சந்திரன் மருத்துவமனையில் உயிரிழந்தார். மருத்துவமனை சம்பிரதாயங்களை முடித்துக்கொண்டு வீடு திரும்பிய ரீனா, இனி நான் அவருக்கு ஊசி போடவோ, மாத்திரை கொடுக்கவோ வேண்டியதில்லை. அவரை நான் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்று பரிசோதிக்க வேண்டியதில்லை. அவர் இனி வீட்டுக்கு வரமாட்டார் என்பதை புரிந்து கொண்ட போது நான் மனம் உடைந்துபோனேன் என்று கனத்த குரலில் கூறினார்.

தான் மிகவும் நேசித்த நபரின் இழப்பு, வாழ்க்கையில் நீண்டகாலம் இணைந்திருந்த ஒருவரை பிரிந்த துன்பம் மற்றும் மன அழுத்தத்தால் ரீனா, பலமாதங்கள் துயரத்தை அனுபவித்தாள். வேலைக்குச் சென்ற அவள் வீட்டிற்கு வருவதற்கு 15 கி.மீ. நடந்தாள். அப்போதாவது மன அழுத்தம் குறைந்து தூக்கம் வரும் என நினைத்தாள். அவளது உணவுப் பழக்கமும் மாறிப்போனது. சில சமயங்களில் சோகமாகவும், ஆதரவற்றவளாகவும் உணர்ந்தாள். விரக்தியும் கோபமும் தான் அவளிடம் மிஞ்சியிருந்தது. தனிமையில் இருக்கவே விரும்பினாள். தாய் விரக்தியும், கோபத்துடனும் இருப்பதால் எங்கே அனாதையாகி விடுவோமோ என்ற அச்சத்தை 18 வயது மகன் வெளிப்படுத்தினான். அதுதான் ரீனாவுக்கு மனச்சோர்வை எதிர்த்துப் போராடும் சக்தியாக உருவானது.

மருத்துவர்களான தமது நண்பர்கள் ஆதரவுடன் ரீனா, புதிய பயணத்தை தொடங்கினார். நேர்மறை சிந்தனைகளை எடுத்துக்கூறும் புத்தகங்களை படித்தாள். அதுதான் அவளுக்கு உற்ற தோழனாக இருந்தது. புவனேஸ்வரில் உள்ள அனாதை இல்லங்களில் அதிக நேரத்தை செலவிட்டார். அது அவருக்கு புதிய பார்வையை கொடுத்தது.

ரவிச்சந்திரனுடன் பகிர்ந்து கொண்ட அன்பையும் மகிழ்ச்சி யையும் நினைவில் நிறுத்தி, வலிமிகுந்த நினைவுகளை மகிழ்ச்சியான நினைவுகளாக மாற்றினாள். வாழ்க்கை என்பது அழகான பயணம். அதில் ஏற்றத்தாழ்வுகள் இருக்கும் என்பதைப் புரிந்து கொண்டார். என் கணவரை என்னால் மறக்கவே முடியாது. அவருடைய வாழ்க்கையையும் அவர் என் மீது கொண்டிருந்த அன்பையும் மதிக்க வேண்டுமானால், வாழ்க்கையின் மறுபுறத்தில் நாங்கள் மீண்டும் இணைய வேண்டுமானால் நான் ஆரோக்கியமான, மகிழ்ச்சியான வாழ்க்கை நடத்த வேண்டும் என்றார் ரீனா.

புவனேஸ்வர் ரோட்டரி சங்கத்தில் உறுப்பினராகியதன் மூலம் நண்பர்களுடன் இணைந்து சமூக சேவையில் தனது பயணத்தை தொடர் கிறார் ரீனா. அலோ கோபிபா (வாருங்கள் பேசுவோம்) என்பது அவரது இதயத்துக்கு நெருக்கமான திட்டமாகும். அதாவது ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் நகரில் உள்ள குறிப்பிட்ட பூங்காக்களில் அமர்ந்து பேசுவோம். மனநலம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தவும், ரோட்டரியின் பணிகள் குறித்து பேசவும் மூத்த குடிமக்கள் உள்ளிட்ட அனைவரையும் ரீனாவும் இதர உறுப்பினர்களும் அழைக்கிறார்கள்.■



Love, letters and resilience - Tamil - October 2023.indd 40 9/27/2023 12:34:49 PM




New members from different groups in our communities bring fresh perspectives and ideas to our clubs and expand Rotary's presence. Invite prospective members from all backgrounds to experience Rotary.

**REFER A NEW MEMBER**
my.rotary.org/member-center

Rotary

FIND A CLUB

ANYWHERE IN THE WORLD!



Use Rotary's free Club Locator and find a meeting wherever you go!

www.rotary.org/clublocator


## District Wise TRF Contribution as on August 2023

(in US Dollars)

| District Number | Annual Fund | PolioPlus Fund | Endowment Fund | Other Funds | Total Contribution |
|---|---|---|---|---|---|
| | | | India | | |
| 2981 | 10,601 | 405 | 0 | 0 | 11,006 |
| 2982 | 10,431 | 0 | 7,085 | 4,488 | 22,005 |
| 3000 | 39,236 | 0 | 0 | 1,339 | 40,575 |
| 3011 | 53,414 | 5,745 | 18,000 | 98,195 | 175,354 |
| 3012 | 1,574 | 0 | 0 | 1,720 | 3,294 |
| 3020 | 16,439 | 699 | 0 | 20,000 | 37,138 |
| 3030 | 7,618 | 86 | 0 | 138,163 | 145,866 |
| 3040 | 1,034 | 49 | 0 | 0 | 1,083 |
| 3053 | 4,698 | 0 | 0 | 12,439 | 17,137 |
| 3055 | 9,808 | 33 | 0 | 0 | 9,841 |
| 3056 | 2,793 | 0 | 0 | 0 | 2,793 |
| 3060 | 41,701 | 9,276 | 0 | 75,268 | 126,246 |
| 3070 | 111 | 0 | 0 | 0 | 111 |
| 3080 | 13,057 | 3,943 | 0 | 1,500 | 18,500 |
| 3090 | 21,064 | 713 | 0 | 5,121 | 26,898 |
| 3100 | 23,033 | 0 | 0 | 0 | 23,033 |
| 3110 | 24 | 0 | 0 | 0 | 24 |
| 3120 | 3,632 | 34 | 0 | 0 | 3,666 |
| 3131 | 139,111 | 151 | 6,098 | 17,224 | 162,583 |
| 3132 | 35,942 | 2,183 | 0 | 293 | 38,418 |
| 3141 | 125,148 | 1,654 | 32,000 | 204,998 | 363,800 |
| 3142 | 196,139 | 2,137 | 5,500 | 0 | 203,776 |
| 3150 | 7,985 | 296 | 50 | 45,976 | 54,307 |
| 3160 | 6,174 | 0 | 0 | 0 | 6,174 |
| 3170 | 19,076 | 18,089 | 0 | 47,288 | 84,453 |
| 3181 | 10,840 | 152 | 0 | 24 | 11,017 |
| 3182 | 1,620 | 0 | 0 | 0 | 1,620 |
| 3191 | 17,988 | 2,561 | 60,976 | 0 | 81,524 |
| 3192 | 13,062 | 1,312 | 0 | 2,100 | 16,475 |
| 3201 | 12,536 | 21,756 | 3,940 | 18,348 | 56,580 |
| 3203 | 1,925 | 321 | 1,220 | 7,470 | 10,936 |
| 3204 | 2,535 | 500 | 0 | 2,962 | 5,997 |
| 3211 | 1,795 | 1,000 | 0 | 40,222 | 43,017 |
| 3212 | 14,204 | 1,826 | 0 | 1,050 | 17,080 |
| 3231 | 1,417 | 386 | 0 | 0 | 1,803 |
| 3232 | 16,359 | 2,138 | 8,300 | 203,738 | 230,535 |
| 3240 | 17,728 | 3,414 | 0 | 30 | 21,172 |
| 3250 | 5,261 | 1,148 | 26 | 2,974 | 9,410 |
| 3261 | 9,037 | 0 | 0 | 0 | 9,037 |
| 3262 | 3,750 | 49 | 0 | 0 | 3,799 |
| 3291 | 31,014 | 0 | 24,390 | 0 | 55,404 |
| 3220 Sri Lanka | 16,717 | 630 | 0 | 0 | 17,347 |
| 3271 Pakistan | 5 | 0 | 0 | 6,825 | 6,830 |
| 3272 Pakistan | 0 | 60 | 0 | 25 | 85 |
| 3281 Bangladesh | 5,476 | 1,728 | 2,000 | 14,423 | 23,626 |
| 3282 Bangladesh | 15,213 | 100 | 0 | 0 | 15,313 |
| 3292 Nepal | 8,293 | 805 | 0 | 34,710 | 43,808 |

Annual Fund (AF) includes SHARE, Areas of Focus, World Fund and Disaster Response.

**Source:** RI South Asia Office

Rotary PEOPLE OF ACTION

# கிராமப்புற பெண்களின் கல்விக்கு உதவும் திட்டம்

ரஷீதா பகத்





Aiding the education of rural adolescent girls - Tamil - October 2023.indd 42 9/27/2023 1:25:28 PM



பிட்லூ கிராமத்தில் பள்ளி மாணவியர்.

தர்மசாலா ரோட்டரி சங்கம் (RID 3070), மலைநகரத்தைச் சுற்றியுள்ள நூற்றுக்கணக்கான வளர் இளம் பெண்கள் பள்ளிக்குச் சென்று கல்வி கற்கும் வகையில் அவர்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. அதாவது தரமான, துவைத்து மீண்டும் பயன்படுத்தக்கூடிய சானிடரி நாப்கின்களை நன்கொடையாக வழங்கும் எளிய செயல் மூலம் இதைச் செய்துள்ளது.

நமது கிராமங்களில் உள்ள மிகப் பெரிய பிரச்னை என்னவென்றால் வளர் இளம் பெண்கள் சானிடரி நாப்கின்கள் கிடைக்காததால் மாதவிடாய் காலத்தில் நிலைமையைச் சமாளிக்க முடியாமல் வகுப்புகளைத் தவறவிட்டுவிடுகிறார்கள். எனவே நான் சங்கத்தின் தலைவராக இருந்தபோது (2020–21) கலிபோர்னியாவில் உள்ள லாஸ் ஆல்டோஸ் ரோட்டரி சங்க (RID 5170) உலக சமூக சேவை குழுவின் உறுப்பினராக கிரிஸ் ஓல்ஸன் இருந்தபோது தர்மசாலாவைச் சுற்றியுள்ள கிராமங்களில் சேவ் எ கேர்ள் திட்டத்தை செயல்படுத்து வதற்காக என்னை அணுகினார். நான் மிகுந்த உற்சாகத்துடனும் ஆர்வத்துடனும் அதனை ஏற்றுக்கொண்டேன் என்கிறார் சங்கத்தின் முன்னாள் தலைவர் மிலப் நெஹ்ரியா.

எல்லாவற்றுக்கும் மேலாக, ஒவ்வொரு மாதமும் வளர் இளம் பெண்கள் ஒருவாரம் பள்ளிக்கு வராமல் இருப்பதையோ அல்லது பள்ளி செல்லும் எண்ணத்தை கைவிட்டுவிடும் வாய்ப்பையோ தடுப்பதற்கு இது ஒரு சிறந்த வாய்ப்பாகும்.

உடனடியாக தர்மசாலாவைச் சுற்றியுள்ள சில கிராமங்களில் உள்ள பள்ளிகளை அடையாளம் காணும் பணியில் இறங்கினார். சில கிராமங்களில், கிராமத்தின் தலைவர் ஒரு பெண்ணாக இருந்ததால் வளர் இளம் பெண்களுக்கு உதவும் இந்த திட்டத்துக்கு ஆதரவு தேடுவது எளிதாக இருந்தது. சில கிராமங்களைத் தேர்ந்தெடுத்து அதற்கான பட்டியலை அமெரிக்க ரோட்டேரியனான ஓல்ஸனிடம் அளித்தோம். பிறகு இத்திட்டத்திற்கும் அதற்குத் தேவையான நிதியையை திரட்டுவதற்கும் சங்க உறுப்பினர்களிடம் ஒப்புதல் பெற்றார். அதாவது 3,000 டாலர் நிதியை திரட்டும் பணியைத் தொடங்கினார்.

லாஸ் ஆல்டோஸ் ரோட்டரி சங்கத்தின் இந்த முயற்சி, சான்பிரான்ஸிஸ்கோ விரிகுடா பகுதியில் உள்ள ரோட்டரி



Aiding the education of rural adolescent girls - Tamil - October 2023.indd 43 9/27/2023 1:25:29 PM

மாவட்டம் 5170-க்கு உள்பட்ட இதர ரோட்டரி சங்கங்களின் கூட்டாண்மையுடன் இணைக்கப் பட்டது. அமெரிக்கா இதை சர்வதேச மேம்பாட்டுத் திட்டமாக செயல்படுத்தி வருவதால் ஆப்ரிக்கா மற்றும் ஆசியாவைச் சேர்ந்த 11,000 வளர் இளம் பெண்கள் பள்ளி செல்ல முடிந்துள்ளது. வளர் இளம் பெண்கள் பள்ளிப்படிப்பை பாதியில் கைவிடுவதை உலகில் தடுக்கக்கூடிய மிகப் பெரிய சோகம் என்பதை இந்த கூட்டாளர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். சரியான கல்வி அறிவு இல்லாததால் இந்தப் பெண்களில் பலர் குழந்தை பருவத்திலேயே திருமணம் செய்து கொள்ளும் சூழலும், சில சமயங்களில் கடத்தப்படும் சூழலும் உள்ளது. ரோட்டரி மாவட்டம் 5170-ல் 63 சங்கங்கள் உள்ளன. இவற்றிலுள்ள உறுப்பினர்கள் எண்ணிக்கை 3800 ஆகும்.

இந்த கூட்டுறவு வளரும் நாடுகளில் உள்ள வளர் இளம் பெண்களுக்கு துவைத்து மீண்டும் பயன்படுத்தக்கூடிய சானிடரி நாப்கின்களை சேவ் எ கேர்ள்







*பிட்லூ பள்ளி மாணவியருடன் Dr ஹிஸ்டி, சங்க உறுப்பினர்கள் அஜய் சர்மா மற்றும் அஸ்வனி சர்மா.*



Aiding the education of rural adolescent girls - Tamil - October 2023.indd 44 9/27/2023 1:25:32 PM



RC *தர்மசாலா உறுப்பினர்கள் ஹரி சிங், மிலாப் நெஹ்ரியா, சங்ரம் குலேரியா, Dr ஹர்மீத் கௌர் மற்றும் Y K டோக்ரா மாணவியருடன்.*



(Save a Girl) திட்டத்தின் கீழ் ஒரு தொகுப்பாக (Kit) வழங்குகிறது. இதனால் வளர் இளம் பெண்கள் தங்கள் மாதவிடாய் காலத்தில் பாது காப்பாகவும் தூய்மையாகவும் இருந்து பள்ளிகளுக்கு செல்வதில் எந்த பிரச்னையும் இல்லை.

வளரும் நாடுகளில் இது எவ்வளவு பெரிய பிரச்னை என்பதைப் புரிந்துகொள்ள யுனிசெப் கொடுக்கும் புள்ளிவிவரங்களைப் பார்ப்போம். மாதவிடாய் காலத்தை சரியாக பராமரிக்க முடியாமல் ஆண்டுக்கு 20 மில்லியன் வளர் இளம் பெண்கள் பள்ளி செல்வதை கைவிட்டுவிவதாக யுனிசெப் தெரிவிக்கிறது. இந்த எண்ணிக்கை 50 மில்லியனாக இருக்கலாம் என்பதுதான் அதிர்ச்சி தரும் தகவல். இங்குதான் சர்வதேச மேம்பாட்டுத் திட்டம் வருகிறது. இது துவைத்து மீண்டும் பயன்படுத்தக்கூடிய சானிடரி நாப்கின் பேடுகளை 6 டாலர் செலவில் தயாரிக்கிறது. இதை மூன்று வருடங்கள் வரை பயன்படுத்தலாம். இதுவரை இத்திட்டத்தின் கீழ் 9 வளரும் நாடுகளில் 49,000 சானிடரி நாப்கின் கிட்டுகள் விநியோகிக்கப் பட்டுள்ளன. ரோட்டரியின் மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் முன்முயற்சியாக இவை தயாரிக்கப்படுகின்றன.

இந்தியாவில் உள்ள தர்மசாலாவுக்கு வருவோம். நேபாளத்தில் டாங் என்னுமிடத்தில் உள்ள சர்வதேச மேம்பாட்டுத் திட்ட உற்பத்தி மையத்திலிருந்து 400 சானிடரி கிட்டுகள் வாங்குவதற்கு லாஸ் ஆல்டோஸ் ரோட்டரி சங்கம் மானிய உதவியாக 3,000 டாலர் வழங்கியுள்ளது. மீண்டும் பயன்படுத்தக்கூடிய மூன்று பேடுகள் மற்றும் இரண்டு ஜட்டிகள் கொண்ட ஒரு தொகுப்பு (கிட்) காத்மாண்டுவிலிருந்து தர்மசாலா வுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இவற்றை அனுப்புவதில் சில சிரமங்கள் இருந்தன. போக்குவரத்தில் இருக்கும் சமயத்தில் இவை இரண்டு முறை பேக் செய்யப்பட வேண்டியிருந்தது. ஒருவழியாக அவை தர்மசாலா வந்தடைந்தது என்றார் நெஹ்ரியா.

இந்த திட்டம் அவருக்கு



Aiding the education of rural adolescent girls - Tamil - October 2023.indd 45 9/27/2023 1:25:34 PM

பிடித்தமான திட்டம் என்று அவர் விளக்கினார். ஏனெனில் வளர் இளம்பருவப் பெண்கள் மாதவிடாய் காலத்தில் சராசரியாக ஒவ்வொரு மாதமும் நான்கு நாட்கள் பள்ளியைத் தவறவிடுகிறார்கள். அதாவது பள்ளி நேரத்தில் 20 சதவீதத்தை தவறவிடுகிறார்கள். இதன் மூலம் அவர்களின் பள்ளி பாடங்களில் பின்தங்கி விடுகிறார்கள். பலர் பள்ளிக்குச் செல்வதை நிறுத்திவிடுகிறார்கள். அவர்களால் பள்ளிக்கல்வியை பூர்த்திசெய்ய முடிவதில்லை. இந்த கல்வி இடைவெளி வளரும் நாடுகளில் பெண்களை பெரும் பின்னடைவுக்கு கொண்டு செல்கிறது. ஆண்கள் சம்பாதிப்பதில் 40 சதவீதத்தைத் தான் அவர்களால் சம்பாதிக்க முடிகிறது என்கிறார் அவர்.

இது பெண்கள் பொருளாதார ரீதியாக ஆண்களைச் சார்ந்து இருக்கச் செய்கிறது. மேலும் குறைந்த கல்வி அறிவு பெற்ற பெண்களுக்கு இளம் வயதிலேயே திருமணம் நடக்கிறது. அதைத் தொடர்ந்து அவர்கள் சிறுவயதிலேயே தாய்மை அடைந்துவிடுகிறார்கள். இதன் காரணமாக அவர்கள் குறைந்த சம்பளத்துக்கு வயல்களில் தினக்கூலிகளாகவும் அல்லது வீட்டு வேலை செய்பவர்களாகவும் உருவாகிவிடுகின்றனர்.

சானிடரி நாப்கின் கிட்டுகள் 2021 இறுதியில் தர்மசாலாவை வந்து அடைந்தது. அப்போதும் கோவிட் ஒரு அச்சுறுத்தலாக இருந்தது. கோவிட் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதும், ரோட்டேரியன்கள் சானிடரி பேடுகள் விநியோகத்தை தொடங்கினர். லாஸ் ஆல்டோஸ் ரோட்டரி சங்கத் துடனான ஒப்பந்தத்தின்படி, நாங்கள் பெண்களுக்கு மாதவிடாய் சுகாதாரம், பள்ளிப்படிப்பை நிறுத்திவிடாமல் தொடர வேண்டியதன் அவசியம் குறித்தும் அவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டியிருந்தது. எங்கள் சங்கத்தின் உறுப்பினரும் மகப்பேறு மருத்துவருமான டாக்டர் ஹர்மீத் கௌர், இந்த கிராமங்கள் அனைத்துக்கும் சென்று மாதவிடாய் சுகாதாரம் பேணுதல் பற்றி பேசு வதற்கு ஒப்புக் கொண்டார். அதற்காக தொலைதூர கிராமங்களுக்கு எங்களுடன் நடந்து வந்தார்.

முதலில் அவர்கள் தர்மசாலாவில் உள்ள சலேட் கோடம் கிராமத்தில் உள்ள சத்ய சாய் பள்ளிக்குச் சென்றனர். இப்பள்ளி சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த ஏழை மாணவர்களுக்கு ஆதரவளித்து வருகிறது. 45 வளர் இளம் பெண்களுக்கு மாதவிடாய் சுகாதாரம் பற்றி எடுத்துரைக்கப்பட்டு, சானிடரி பேடுகளும் வழங்கப் பட்டன. அடுத்து கரேரி மற்றும் சுற்றியுள்ள கிராமங்களுக்குச் சென்றோம். அங்குள்ள பஞ்சாயத்து தலைவி பெண்கள் அனைவரையும் ஒரே இடத்தில் சந்திக்க ஏற்பாடு செய்தார். தர்மசாலாவிலிருந்து நாங்கள் இரண்டு மணி நேரம் பயணித்து கரேரி சென்றடைந்தோம். அங்கு 150 வளர் இளம் பெண்கள் எங்கள் வருகைக்காக காத்திருந்தனர். அவர்களிடம் சானிடரி பேடுகளை கொடுத்த போது அதை அவர்கள் மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டனர் என்றார் நெஹ்ரியா. அடுத்து கனியாரா கிராமத்தில் உள்ள பல்நோக்கு திறன் வளர்ப்பு மையத்தில் சானிடரி பேடுகள் விநியோகம் நடந்தது. தர்மசாலா ரோட்டரி சங்கம் இதை ஆதரித்து வருகிறது. இங்குள்ள பயிற்சி மையத்தில் குறுகியகால பயிற்சி வகுப்புகளில் ஆண்கள், பெண்கள் இருபாலினரும் சேர்ந்து பயன்பெற்று வருகின்றனர். இந்த மையத்தில் படிப்பதற்காக வந்திருந்த கிராமப்புற பெண்கள் 40 பேருக்கும் சானிடரி கிட்டுகள் வழங்கப்பட்டன.

பருவமழை குறைந்த பிறகு ரோட்டேரியன்கள் தொலைதூர கிராமமான பிட்லுவில் இலவச மருத்துவ முகாமுக்கு ஏற்பாடு செய்திருந்தனர். சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த 40 மாணவிகள், டாக்டர் குர்மீத் கௌரின் பேச்சை கேட்க வந்திருந்தனர். அவர்கள் அனைவருக்கும் சானிடரி பேடுகள் விநியோகிக்கப்பட்டன. கடைசியாக கனியாரா சீனியர் செகண்டரி பள்ளியில் நடைபெற்ற நிகழ்வில் 90 மாணவிகளுக்கு சானிடரி பேடுகள் வழங்கப்பட்டன.

சங்க உறுப்பினரான அருணா பிரஷார், மாணவிகளுக்கு ஹிந்தி மொழியில் எழுதப்பட்ட கல்வி உபகரணங்களை வழங்கினார்.

ஆப்பிரிக்கா மற்றும் நேபாளத்தில் சானிடர் பேடுகள் தயாரிக்கும் மையங்களைக் கொண்டிருந்த லாஸ் ஆல்டோஸ் ரோட்டரி சங்கம் மற்றும் டி.ஜி.யு.பி. இரண்டும் இப்போது இமயமலைப் பகுதியில் மற்றும் இந்தியாவின் தொலைதூரப் பகுதியிலும் சானிடரி நாப்கின் உற்பத்தி செய்யும் மையங்களை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகளை ஆராய்ந்து வருவதாக நெஹ்ரியா மேலும் கூறினார்.



*மரம் நடும் நிகழ்ச்சி.*



Aiding the education of rural adolescent girls - Tamil - October 2023.indd 46 9/27/2023 1:23:34 PM



எங்களது திட்டங்களை பார்த்த உள்ளூர் சேவை நிறுவனம் ஒன்று இதில் ஆர்வம் காட்டி வருவதுடன், இத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்லவும் விரும்புகிறது.

### மரம் நடுதல்

மற்றொரு சங்கத்தின் இமயமலைப் பகுதியை பசுமையாக்கும் திட்டம் பற்றி விவரித்தார் நெஹ்ரியா. கடந்த சில ஆண்டுகளாக தர்மசாலா ரோட்டரி சங்கம், ஹிமாலய பிராந்தியத்தில் மரம் நடும் திட்டத்தை செயல்படுத்தி வருவதாக குறிப்பிட்டார். ஹிமாசல பிரதேசம் அதிக அளவு காடுகளைக்கொண்ட ஒரு மாநிலமாகும். ஏறக்குறைய மொத்த நிலப்பரப்பில் 66 சதவீதம் பசுமையாக காட்சியளிக்கிறது. பழமையான மரங்கள் அல்லது வேருடன் சாய்ந்துவிட்ட மரங்கள் மாநில நிர்வாகத்தினரால் வெட்டப்பட்டு மரவேலைகளுக்கு பயன்படுத்தப்படுகின்றன. ஹிமாசல மாநில வனத்துறை காடுகளை வளர்ப்பதிலும், மரங்களை நடுவதிலும் அதிக ஆர்வம் காட்டி வருகின்றன. ஆயிரக்கணக்கான மரங்கள் புதிதாக நடப்படுகின்றன. இத்திட்டத்திற்கு ரோட்டரி சங்கங்களும் ஒவ்வொரு ஆண்டும் உதவி வருகின்றன.



இந்த ஆண்டு சங்கம் வனத்துறையுடன் இணைந்து மூன்று மரம் நடும் திட்டங்களைச் செயல்படுத்தியது. முதலில் மரம் நடப்படும் இடத்தை சுற்றி வேலி அமைக்கப்படுகிறது. விலங்குகள் மற்றும் வெளிநபர்கள் ஊடுருவாமல் இருக்க இவ்வாறு செய்யப்படுகிறது. பின்னர் ஆங்காங்கே குழிகள் வெட்டப்பட்டு தேவதாரு, ஊசியிலை மரங்கள் நடப்படுகின்றன. உயரமான மலைப்பகுதிகளில் ஓக் மரங்கள் நடப்படுகின்றன. இவை தவிர செர்ரி, கைந்த் போன்ற பழச் செடிகளும் நடப்படுகின்றன. பசுமைத்திட்டத்தின் முன்முயற்சியாக இளைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் பள்ளிகளிலும் மரங்கள் நடும் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

தேவதாரு மரங்கள் உயர்ந்து வளரும் மரங்கள். மரவேலைகளுக்கு அவை பயன்படுத்தப்படுகின்றன. ஆனாலும், இப்போது அத்தகைய மரங்களை வெட்டுவதற்கு அரசு கட்டுப்பாடுகள் விதித்துள்ளன. ஒவ்வொரு திட்டத்தை செயல்படுத்தும் போது 55 முதல் 60 மரங்கள் தான் நடப்படுகின்றன. அதிக மரங்களை நடுவதைவிட சுற்றுச்சூழலை பாதுகாப்பதன் அவசியத்தை வலியுறுத்துவதுதான் எங்கள் நோக்கமாகும். இந்த அழகான பகுதியில் வசிக்கும் எங்களில் பெரும்பாலானவர்கள் சுற்றுச்சூழலை நேசிப்பவர்கள். மலைகளைப் பாதுகாப்பதில் அதிக அக்கறை செலுத்துபவர்கள் என்று அவர் மேலும் கூறினார்.

பல ஆண்டுகளுக்கு முன்பு நட்ட மரங்கள் இன்று பெரிதாக வளர்ந்து நிற்பதை பார்க்கும் போது மகிழ்ச்சியாக இருக்கிறது என்கின்றனர் சங்க உறுப்பினர்கள். கொய்யா, சில்வர் ஓக் மரங்கள் கொண்ட புதிய தோட்டம் அமைத் திருப்பது எங்களுக்கு பெருமையாக உள்ளது என்று அவர்கள் தெரிவித்தனர்.

மழை, திடீர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மணாலி, மண்டி மற்றும் சிம்லாவில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள நிதி திரட்டி வருவதாகவும் ரோட்டரி சங்கத்தினர் தெரிவித்தனர். எனினும் தர்மசாலா பாதிக்கப்படவில்லை.■



Aiding the education of rural adolescent girls - Tamil - October 2023.indd 47 9/27/2023 1:25:35 PM

# இருளர் குடும்பங்களுக்கான மாதிரி நகரியம்

V முத்துகுமரன்

சென்னைக்கு 100 கிலோமீட்டர் தெற்கில், அழகான ECR நெடுஞ் சாலையிலிருந்து சற்று விலகி, செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் வட்டத்தில் உள்ள புதர்க்காடு ஒன்றில் 63 இருளர் குடும்பங்கள் கடினமான வாழ்க்கையைச் சந்தித்துவந்தார்கள். அவர்களுடைய வாழ்க்கையில் ஓர் இனிமையான மாற்றம் இப்போது நிகழ்ந்துள்ளது. முன்பு பாம்பு பிடிக்கிறவர்களாக இருந்த இந்தப் பட்டியலினப் பழங்குடியினர் இப்போது 63 அழகான, புதிய 2 படுக்கை அறை வீடுகளின் உரிமையாளர்கள். தலா 650 சதுர அடி பரப்பு கொண்ட இந்த வீடுகளில் கூடுதல் பொருட்கள், வசதிகளும் நிறைந்துள்ளன.

நல்லம்மை ராமநாதன் குயில்குப்பம் நகர் என்ற இந்தக் குடியிருப்பின் முதன்மைக் கொடையாளர் PDG அபிராமி ராமநாதன், இவருடைய மனைவி நல்லம்மை. இவர்கள் இருவரையும் இருளர்கள் மதித்து வழிபடுகிறார்கள். தங்களுடைய வீடுகளில் இந்த ரோட்டரியன் தம்பதியினருடைய படத்தை மாட்டியுள்ளார்கள்.

“ஒரு புதிய கிராமம் அல்லது நகரியத்தை உருவாக்கவேண்டும் என்ற பெரிய கனவு எனக்கு நெடுங்காலமாக உண்டு. அந்த கனவு இன்று நனவாகி விட்டது. நாங்கள் இருளர்களுடன் தொடர்ந்து பணிபுரிவோம், அவர்களுக்குத் தொழில் சார்ந்த பயிற்சியை வழங்கி அவர்களுடைய திறன்களை மேம்படுத்துவோம், அவர்களுடைய குழந்தைகளுக்குக் கல்வி அளிப்போம். இதன்மூலம், அவர்களுடைய சமூக மற்றும் பொருளாதார நிலை முற்றிலும் மாறும்” என்கிறார் PDG ராமநாதன். இந்தத் திட்டத்தின் செலவாகிய ரூ.8.5 கோடியில் ரூ.4 கோடியை Directed Gift-ஆக பரிசாகக் கொடையளித்துள்ளார் இவர். முன்னணிச் சங்கமாகிய RC மெட்ராஸ் சென்ட்ரல் மூன்று பன்னாட்டு நல்கைகளின் வழியாக ரூ.1.8 கோடியை வழங்கியது. மீதித் தொகை RID 3232 மற்றும் RID 3231 ரோட்டரி சங்கங்கள், ரோட்டரியன்கள் மற்றும் தனியார் கொடையாளர்களுடைய பங்களிப்புகளின்மூலம் பெறப்பட்டது.

இருளர் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும், மாற்ற இயலாத, 3.5 சென்ட் பட்டா (உரிமைப் பத்திர) நிலம் ஒதுக்கப்பட்ட பிறகு, 2018ம் ஆண்டின் நடுவில், வீடுகளுக்கான கட்டுமானப் பணி தொடங்கியது. ஆனால், கோவிட் நோய்ப்பரவலால் “எங்கள் பணி இரண்டு ஆண்டுகளுக்குத் தடைப்பட்டது. இந்தப் புதிய கிராமத்தை உருவாக்குவதற்கு, பலன் பெறுகிற அனைவரும் உதவினார்கள். வீடு கட்டுதல், தச்சு வேலை, குழாய் வேலை, வீட்டுக்கான மின்சாரக் கம்பி அமைப்பு ஆகிய திறமைகளை அவர்கள் வளர்த்துக் கொள்ள இது உதவியது. இதன் மூலம், அவர்கள் பாதுகாப்பான ஒரு வாழ்வாதாரத்தைப் பெறுவார்கள்” என்று நினைவுகூர்ந்தார் RC மெட்ராஸ் சென்ட்ரல் திட்டச் செயலாளர் P B ரவிக்குமார். “நாங்கள் இவர்களுக்கு 25 கறவைப் பசுக்களைக் கொடையளித்துள்ளோம். இருளர்களை உறுப்பினர்களாகக் கொண்ட கூட்டுறவுச் சங்கம் ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. நான்கு ரோட்டரியன்கள் இந்தக் கூட்டுறவுச் சங்கத்துக்கு அறிவுரைகளை வழங்குவார்கள்.”

*இருளர் பயனாளிகளுடன் (இடமிருந்து)* RID 3231 DG *பரணிதரன்,* RID 3234 DGN *வினோத் சரோகி, நல்லம்மை,* PDG *அபிராமி ராமநாதன்,* VIT *நிறுவனர் - வேந்தர்* G *விஸ்வநாதன்,* PRID A S *வெங்கடேஷ், திருப்போரூர்* MLA *பாலாஜி மற்றும்* RID 3232 DG *ரவி ராமன் ஆகியோர்.*





Model township for Irula families - Tamil - October 2023.indd 48 9/27/2023 12:37:18 PM

### கூடுதல் வசதிகள்

தளக் கட்டிகளால் உருவாக்கப் பட்டுள்ள இணைச் சாலைகள் நான்கிலும் சூரிய ஒளி ஆற்றல் விளக்குகள் உள்ளன. அனைத்து வீடுகளையும் ஒரு சாக்கடை வலைப்பின்னல் இணைக்கிறது. அம்ஃபெனால் வழங்கிய ரூ.10 லட்சம் CSR நல்கையின் உதவியுடன் பொது இடத்தில் மிகப் பெரிய மேல் தொட்டி (5,000 லிட்டர்) அமைக்கப்பட்டுள்ளதால், தண்ணீர் தடையின்றிக் கிடைக்கிறது. ஒவ்வொரு வீட்டிலும் மூன்று மின்விசிறிகள், விளக்குகள், ஒரு குளிர்பதனப் பெட்டி, TV, மிக்ஸி, க்ரைண்டர், எரிவாயு அடுப்பு, பிரஷர் குக்கர், சமையல் பாத்திரங்கள், இரண்டு படுக்கைகள், தலையணைகள், ஸ்டீல் அலமாரி ஆகியவை உள்ளன. கறைகள் மற்றும் சிதைவுகளைத் தவிர்ப்பதற்கென இந்த வீடுகளின் சுவர்கள் 5 அடி வரையில் வில்லைப் (tiles) பாதுகாப்பு கொண்டுள்ளன.

இந்த வீடுகளையும் 2 சதுர கிலோமீட்டர் பரப்பில் விரிந்துள்ள ஒட்டு மொத்த நகரியத்தையும் பராமரிப்பதற்கென, ஆறு ரோட்டரி சங்கங்கள் 63 குடும்பங்களைத் தத்தெடுத்துள்ளன; ரோட்டரி குழு ஒன்று தொடர்ச்சியாகக் குயில்குப்பத்துக்கு வரும், இருளர் குழந்தைகளுடைய கல்விக்கு உதவும், பலன் பெறுவோர் நல்ல பணியைக் கண்டறிய உதவும் என்றார் ராமநாதன். இருளர்கள், PDGகள் மற்றும் ரோட்டரியன்கள் கூட்டம் ஒன்றில் குயில்குப்பத் தின் புதிய உரிமையாளர்களுக்கு மளிகைப் பொருள் பொதிகளை வழங்கிப் பேசிய PDG ராமநாதன் "நான் கொடையளிக்கத் தொடங்கிய புதிதில், தொடர்ந்த வழங்குதல் மற்றும் சேவையின்மூலம்தான் ஒருவர் சமூகத்தில் வளர இயலும் என்று தெரிந்துகொண்டேன்" என்றார்.

16ம் நூற்றாண்டைச் சேர்ந்த ஃபிரெஞ்சுச் சோதிடர் நாஸ்ட்ராடமஸுடைய 'மூன்று பக்கங்களில் கடலால் சூழப்பட்ட நாடுதான் உலகை ஆளும்' என்ற வரிகளை மேற்கோள் காட்டிய ராமநாதன், இனி வரும் பத்தாண்டு களில் "எல்லாருக்கும் வீட்டு வசதி, கல்வி, நலப் பராமரிப்பு போன்ற தன்னுடைய வளர்ச்சிச் சவால்களை யெல்லாம் வென்று விரைவில் இந்தியா மிகை ஆற்றல் கொண்ட ஒரு நாடாக மாறும்' என்று நம்பிக்கை தெரிவித்தார். இருளர் ஆண்கள் மதுப்பழக்கத்தை விடவேண்டும், தங்கள் வாழ்வாதாரப் பிரச்சனைகளில் கவனம் செலுத்தவேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

'உலகில் நம்பிக்கையை உருவாக்குதலை' தன்னுடைய கருப்பொருளாகக் கொண்டுள்ள இந்த ரோட்டரி ஆண்டில், "நாம் இருளர்களுடைய வாழ்க்கைகளில் புதிய நம்பிக்கையை உருவாக்கி யுள்ளோம், அவர்கள் அறிவோடு கடினமாக உழைத்துத் தங்கள் எதிர் காலத்தை நன்கு வடிவமைக்க வேண்டும்" என்றார் நல்லம்மை. அவர்கள் தங்களுடைய வீடுகளையும் சுற்றுப்புறங்களையும் தூய்மையாகவும் சுகாதாரமாகவும் பிறர் பின்பற்றக்கூடியவகையிலும் பார்த்துக் கொள்ளவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். "ரோட்டரி குழு இந்த வீடுகளைத் தொடர்ந்து மேற்பார்வையிடும், மிக நன்றாகப் பராமரிக்கப்படும் வீட்டுக்கு ரூ.5,000 பரிசு வழங்கப்படும்" என்றார் அவர். "பெண்களுக்குத் தையல், கணினியில் தரவுகளை உள்ளிடுதல் போன்ற தொழில் சார்ந்த பயிற்சிகளை அளிப்பதற்கென இந்தக் கிராமத்தில் ஒரு சமூகக் கூடம் கட்டப்படும்."

PRID A S வெங்கடேஷ் பேசுகையில், "ராமநாதன் நூற்றுக் கணக்கான சேவைத் திட்டங்களை நடத்தியுள்ளார். ஆனால், இந்தக் குயில்குப்பம் திட்டம் அவருக்கு மிகச் சிறப்பானது. ஏனெனில், அவர் மற்ற ரோட்டரியன்களுடனும் இந்த நற்செயலைப் பகிர்ந்துகொள்ள விரும்பினார், அவர்களுடன் இணைந்து இதை உருவாக்கியுள்ளார்" என்றார்.



### உயர்கல்வியின் முதன்மை

இந்தியாவில் 3.5 கோடிக் குடிமக்களுக்கு வீடு இல்லை, அதில் சுமார் 10 லட்சம் பேர் தமிழ் நாட்டில் இருக்கிறார்கள் என்றார் VIT பல்கலைக்கழகத்தின் நிறுவனர்-வேந்தர் G விஸ்வநாதன். "இந்தியர்கள் ஒவ்வொருவரும் தங்களுக்குச் சொந்தமாக ஒரு வீடு வேண்டும் என விரும்பு கிறார்கள். அவர்களுடைய கனவு நனவாகவேண்டுமென்றால், இப்போது ரூ.2,600ஆக உள்ள நாட்டின் தனி நபர் வருவாயை நாம் மேம்படுத்தவேண்டும். இதைச் செய்வதற்கு, நம்முடைய பொருளாதாரம் முன்னேறவேண்டும். உயர்கல்வியின் மூலம் தான் அது சாத்தியமாகும்" என்றார் அவர்.



Model township for Irula families - Tamil - October 2023.indd 49 9/27/2023 12:37:18 PM

ஆனால், இந்தியாவில் 25% இளைஞர்கள் தான் (18 முதல் 23 வயதுள்ளோர்) உயர்கல்வியை நாடுகிறார்கள். இதில் தமிழ் நாடு 50%ஐத் தாண்டிவிட்டது, “ஆனால், அனைவருக்கும் வீடு வழங்கும் நிலைக்குச் செல்ல நாம் நெடுந்தொலைவைக் கடக்கவேண்டும்.”

ஒரு நாடு தன்னுடைய GDPல் 6%ஐக் கல்வி வளர்ச்சிக்கு வழங்க வேண்டும் என்று பன்னாட்டுத் தரநிலை சொல்கிறது. ஆனால், இந்தியா தன்னுடைய நாட்டுச் செல்வத்தில் வெறும் 3%ஐத்தான் கல்வி வளர்ச்சிக்கு வழங்குகிறது என்று அவர் குறிப்பிட்டார். வேலூரில் விஸ்வநாதன் பிரபஞ்ச உயர்கல்வி அறக்கட்டளையை உருவாக்கியுள்ளார். இது கடந்த 10 ஆண்டுகளாக ஏழை மாணவர்களுடைய உயர்கல்வியை ஆதரிக்கிறது. “இதுவரை மாணவர் களுக்கு 7,000 கல்வி நல்கைகள் வழங்கப்பட்டுள்ளன, இதில் 50% பேர் பெண்கள்.” நம் நாட்டில் உள்ள 1.45 பில்லியன் பேரில் 10% பேர் தான் பட்டதாரிகள். “ஆனால், ஏழைமையை, அறியாமையை அகற்ற, உயர்கல்வி வலியுறுத்தப்பட வேண்டும்” என்றார் அவர்.

PDG ராமநாதன் அவர்களுக்குத் தன்னுடைய நன்றியுணர்வை வெளிப்படுத்திய இருளர் பெண் லதா “நாங்கள் பொறுப்பான வாழ்க்கை வாழ்வோம், எங்கள் குழந்தைகளுக்குக் கல்வி அளிப்போம்,




By special arrangement

*தமிழ்நாடு விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஒரு இருளர் பெண்ணிடம் புதிய வீட்டின் சாவியை வழங்குகிறார். உடன் PDG அபிராமி ராமநாதன், நல்லம்மை, விஸ்வநாதன், RC மெட்ராஸ் சென்ட்ரல் தலைவர் ப்ரகாஷ் வைத்தியநாதன், DG பரணிதரன், MLA பாலாஜி மற்றும் அமைச்சர் T M அன்பரசன் ஆகியோரும் உள்ளனர்.*

எங்கள் வீடுகளையும் கிராமத்தையும் தூய்மையாக வைத்துக்கொள்வோம்” என்று உறுதியளித்தார். நான்கு ஆண்டுகளுக்கு முன் தாங்கள் கிடைத்த வேலைகளைச் செய்து கொண்டிருந்த கடினமான வாழ்க்கையை அவர் திரும்பிப் பார்த்தார், “இப்போது, ரோட்டரியின் உதவியால் எங்கள் வாழ்க்கை பெரிய அளவில் மாறிவிட்டது.”

2017ல், RC செங்கல்பட்டைச் சேர்ந்த A G D துரைராஜ் ராமநாதனை இந்தத் திட்டம் நிறைவேறியுள்ள இடத்துக்கு அழைத்துவந்தார். அப்போது இது வெற்றுப் புதர் நிலமாக இருந்தது. பனை ஓலைக் கூரை கொண்ட சில மண் வீடுகள் தான் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருந்தன. இவர் சிவகங்கை மாவட்டத்தில் 950 குடும்பங்கள் வசிக்கிற புலாங்குறிச்சி கிராமத்தைத் தத்தெடுத்துள்ளார், அங்கு ஆண்டு தோறும் ரூ.50 லட்சம் செலவு செய்துவருகிறார். திருக்கழுக்குன்றம், மறைமலைநகர், வந்தவாசி, குடியாத்தத்தில் இவர் நான்கு “நல்லம்மை ராமநாதன் மருத்துவ மனைகளை”க் கட்டியுள்ளார், செங்கல்பட்டு அரசு மருத்துவ மனையில் குழந்தைகள் பிரிவு ஒன்றையும் திறந்துள்ளார்.

DGக்கள் ரவி ராமன் (RID 3232), P பரணிதரன் (RID 3231), திருப்போரூர் MLA S S பாலாஜி, கிராமப்புறத் தொழில்துறைகள் அமைச்சர் T M அன்பரசன், விளையாட்டு மேம்பாட்டு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் ராகுல் நாத் ஆகியோர் குயில்குப்பம் திட்டத்துக்கென ராமநாதனையும் RC மெட்ராஸ் சென்ட்ரலையும் பாராட்டினார்கள்.

*இருளர் குடும்பத்தினருக்கு மளிகை பொருள் வழங்கும் விழாவில்.*



படங்கள்: V முத்துகுமரன்



Model township for Irula families - Tamil - October 2023.indd 50 9/27/2023 12:37:21 PM

ADVT.

# A FEW SEATS AVAILABLE
## ADMISSIONS open 2023-24

# IIS (deemed to be UNIVERSITY) JAIPUR
FORMERLY ICG

## UG / PG / Ph.D. & Professional Programmes
**3-Level certificate/Diploma/Advanced Diploma alongwith Degree Programmes**

### Undergraduate Programmes
- B.A. ▪ B.Sc. ▪ B.Com.
- B.A. / B.Sc. / B.Com. Hons.
- B.A. / B.Sc. / B.Com. - Research
- B.A. / B.Sc. / B.Com. Hons. - Research

### Specialized Programmes
- **B.Com. Hons.** (Proficiency in Chartered Accounting/Proficiency in Company Secretaryship) Specialized programmes and separate academic calendars for aspirants of CA & CS.
- **B.Com. Hons.** (Applied Accounting and Finance) Accredited by ACCA UK

### UG - Professional Programmes
- **B.A.** (J.M.C.) ▪ **B.F.A.** ▪ **B.C.A.**
- **B.Sc. Hons.** (Forensic Science)
- **B.Sc. Hons.** (Data Analytics & Artificial Intelligence)
- **B.Sc. Hons.** (Home Science)
- **B.Sc.** (Fashion Design)
- **B.Sc. Hons.** (Multimedia & Animation)
- **B.Sc.** (Jewellery Design & Technology)
- **B.B.A.**
- **B.B.A.** (Aviation & Tourism Management)
- **B.Voc.** (UGC Approved)

### Integrated Programmes
- **B.A. B.Ed.*** ▪ **B.Sc. B.Ed.*** *NCTE Approved
- **B.Sc. M.Sc.** (Nano Science & Technology)

### Post Graduate Programmes
- **M.A. -** Economics, English, French, Sociology, Geography, History, Political Science, Mathematics, International Relations, Public Administration Psychology, Statistics
- **M.Sc. -** Biotechnology, Botany, Chemistry, Economics, Environmental Sc., Geography, Information Technology, Mathematics, Microbiology, Physics, Psychology, Statistics, Zoology
- **M.Com.** ▪ **M.F.A.** ▪ **M.S.W.** ▪ **M.Sc. Home Sc.**
- **M.A. / M.Sc. / M.Com Fashion Design, Jewellery Design**
- **MA Journalism & Mass Communication**
- **M.B.A. (Semester Based)** ▪ **M.A/M.Sc in Yogic Sciences**

### Co-Educational Programmes
**@ IISU Block, ISIM Campus, Mahaveer Marg, Mansarovar**
- **B.C.A.** ▪ **B.B.A.** ▪ **B.Lib.Sc.**
- **M.A.** (Digital Media & Communication) ▪ **M.C.A.**
- **M.B.A.** (Dual Specialization, Trimester based) MBA/MCA AICTE Approved

### Research Programmes
- **Ph.D. :** Admission through Research Entrance Test.

### Short Term Courses
- **Cyber Security and Cyber Law (Online)**
- **Certificate Course in Textile Design**

### Preparatory classes along with UG / PG Programmes
- **Civil Services** ▪ **NET** ▪ **USCMA**

### College of Physiotherapy & Allied Health Sc.
(Co-Educational)
@ Sitapura Campus
- **B.P.T.** ▪ **M.P.T.** ▪ **Ph.D.**

### Distinguishing Features
- Extra & Co-Curricular Activities
- Placement Support
- Wi-Fi enabled campus
- Conveyance Facility
- NCC, NSS, Sports
- Hostel Facility

### SOME OF OUR DISTINGUISHED ALUMNAE



Padmini Solanki, IAS · Aruna Rajoria, IAS · Yasha Mudgal, IAS · Darshika Rathore Ajinkya, Endpoint, Middle East, UAE · Laxmi Tatiwala, Chartered Accountant · Shweta Sirohi Gupta, Careflight, Sydney, Australia · Beenu Dewal, 8th Rank, RAS 2018 · Manvi Soni, International Shooter · Navodita Mathur, Standard Chartered Bank Dubai

Priyanka Raghuvanshi, RPS · Fg. Lieutenant Swati Rathore, Indian Air Force · Vasundhara Singh, Dietician, AIIMS, New Delhi · Fg. Off. Shivanshi Pathak, Indian Air Force · Bhawana Garg, RAS · Maj. Komal Rathore, Indian Army · Lt Karnika Singh, Indian Army · Sqn. Ldr. Unnati Sahera, Flying Officer · Shalu Mathur, Royal Bank of Scotland

**FOR COUNSELLING AND ANY QUERIES, CONTACT AT:**

ARTS & SOCIAL SCIENCES 93588 19994 · SCIENCE 93588 19995 · COMMERCE & MANAGEMENT 93588 19996 · PHYSIOTHERAPY 89493 22320

Gurukul Marg, SFS, Mansarovar, Jaipur-302 020 Rajasthan (India)

+91 141 2400160, 2397906/07
Toll Free No.: 1800 180 7750

admissions@iisuniv.ac.in

www.iisuniv.ac.in




# மனித கடத்தலுக்கு எதிராக குரல் எழுப்பும் ரோட்டராக்டர்கள்

ரஷீதா பகத்

RID 3141-யில் உள்ள ஜெய் ஹிந்த் கல்லூரியின் ரோட்ராக்ட் சங்கம், பெண்களைக் கொண்டாடவும், பாலின சமத்துவம் மற்றும் பெண்களின் உரிமைகளை மிதிப்பது குறித்து கேள்விகளை எழுப்பவும் ஒவ்வொரு மார்ச் மாதமும் சர்வ தேச மகளிர் தினத்தை ஒட்டி ஒரு வாரம் முழுவதும் விழிப்புணர்வு பேரணிகளை நடத்துவதை பாரம்பரியமாக கொண்டுள்ளது. இந்த ஆண்டும், குஷி ஷெட்டியின் தலைமையில், பெண்கள் வாரம் (மார்ச் 1–8) ப்ராஜெக்ட் சீக் (அலறல்)



Mumbai Rotaractors put spotlight on women's trafficking - Tamil - October 2023.indd 52 9/27/2023 12:41:28 PM




பெண்கள் கடத்தல் பற்றிய விழிப்புணர்ச்சி நிகழ்ச்சி.

என்ற பெயரில் கொண்டாடப் பட்டுள்ளது. இதன் அடிப்படை யோசனை, மும்பை முழுவதும் Flash Mob நிகழ்ச்சிகளை நடத்துவதாகும், அதில் நாங்கள் பெண்கள் கடத்தலின் கடுமையான பிரச்சினையை முன்னிலைப்படுத்துவோம். ஆனால் இந்த ஆண்டு அனுமதி பிரச்சனைகளால் அது சாத்தியமாக வில்லை. எனவே பெண்கள் வாரத்தைக் கடைப் பிடிப்பதில் இருந்த தடங்கல் எங்களை நிறுத்தாமல் இருக்க நாங்கள் மாற்று யோசனைகளுடன் வந்தோம், மேலும் எங்கள் குழு ஒரு சக்திவாய்ந்த அறிக்கையை வெளியிடுவதற்கான தொடர்ச்சியான நடவடிக்கைகளில் ஈடுபட்டு, புதிய அம்சங்களை அறிமுகப்படுத்தி வேறுபட்ட அணுகு முறையை மேற்கொண்டோம்'' என்கிறார் குஷி.

பெண்கள் கடத்தல் மற்றும் மும்பையின் சதை வியாபாரத்தில் அப்பாவி இளம்பெண்களை இழுக்கும் பெரும் பிரச்சனைக்கு கவனத்தை ஈர்ப்பதே இதன் முக்கிய நோக்கமாக இருந்தது. இப்பிரச்சனை குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தவும், இக்கொடூரமான நடைமுறைக்கு எதிராக பொதுமக்களை குரல் கொடுக்க வலியுறுத்தவும், ரோட்டராக்டர்கள் ரயில் நிலையம் அருகே உள்ள கிராண்ட் ரோடு பகுதியில் சுவர் ஓவியங்களை வரைய முடிவுசெய்தனர். ''கிராண்ட் ரோட்டில் மும்பையின் ஒரு மிகப்பெரிய சிவப்பு விளக்கு பகுதி உள்ளது. இந்த பகுதியில் சுவர் ஓவியங்கள் வரைவதற்கு மும்பை மாநகராட்சியிடம் அனுமதி பெற்றோம்.


உலகெங்கிலும் பெண்கள்



Mumbai Rotaractors put spotlight on women's trafficking - Tamil - October 2023.indd 53 9/27/2023 12:41:28 PM

*பெண்கள் கடத்தல் மற்றும் மும்பையின் சதை வியாபாரத்தில் அப்பாவி இளம்பெண்களை இழுக்கும் பெரும் பிரச்சனைக்கு கவனத்தை ஈர்ப்பதே இதன் முக்கிய நோக்கமாக இருந்தது.*

**குஷி ஷெட்டி**
முன்னாள் தலைவர்
RAC ஜெய் ஹிந்த் கல்லூரி, RID 3141.



**சுவர்களில் பெண்களுக்கு எதிரான அநீதி குறித்து படங்களை ரோட்டராக்டர்கள் வரைகின்றனர்.**

எதிர்கொள்ளும் அடக்குமுறை மற்றும் துஷ்பிரயோகங்களை சித்தரிக்கும் வரை திரையாக ஒரு சுவர் பயன் படுத்தப்பட்டது. அமைதியான குரல்களின் சாரத்தையும், கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களின் அவலத் தையும் படம்பிடித்து காட்டும் நான்கு சக்திவாய்ந்த படங்கள் வரையப்பட்டன. கலைப்படைப்பு உணர்ச்சிகளைத் தூண்டுவதையும், உரையாடல்களைத் தூண்டுவதையும் நோக்கமாகக் கொண்டது மற்றும் பெண்கள் கடத்தல் போன்ற ஒரு தீமையை எதிர்கொள்ள சமூகத்தை ஊக்குவிக்கிறது.

மரைன் டிரைவில் உள்ள சண்டே ஸ்ட்ரீட்ஸ் ஒன்றில் சங்கத்தின் ரோட்டராக்டர்கள் அணிவகுப்பை ஏற்பாடு செய்து பெண்கள் வாரத்தை தொடங்கி வைத்தனர். சண்டே ஸ்ட்ரீட்ஸ் என்பது மும்பை காவல்துறையின் ஒரு முன்முயற்சியாகும், இதில் மும்பையின் மத்திய பகுதிகளான மரைன் டிரைவ், முலுண்ட், விக்ரோலி போன்ற சில தெருக்கள் யோகா, ஜாகிங், ஸ்கேட்டிங்,



Mumbai Rotaractors put spotlight on women's trafficking - Tamil - October 2023.indd 54 9/27/2023 12:41:29 PM

பாட்டு, நடனம் போன்ற பொழுது போக்கு நடவடிக்கைகளுக்காக ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் சில மணிநேரங்கள் பொதுமக்களுக்கு திறக்கப்படுகின்றன. மும்பை மக்கள் நிதானமான, வேடிக்கையான செயல்களை செய்து மகிழவும், இசை மற்றும் பிற திறமை உள்ளவர்கள் இந்த இடங்களில் நிகழ்ச்சிகளை நடத்துவதுமே இந்த யோசனையின் அடிப்படை. இவை பெரும் பார்வையாளர்களை ஈர்க்கின்றன, எனவே இந்த இடத்தில் ஏன் அணிவகுப்பு நடத்தக்கூடாது என்று நாங்கள் நினைத்தோம் என்று அவர் கூறுகிறார்.

எனவே, ''பெண்கள் விற்கப்பட வேண்டிய பொருட்கள் அல்ல'' அல்லது ''உண்மையான ஆண்கள் பெண்களை வாங்குவதில்லை'' போன்ற பெண்கள் கடத்தலுக்கு எதிரான வாசகங்கள் அடங்கிய பிரமாண்டமான பதாகைகளை ரோட்டராக்டர்கள் தயார் செய்தனர். இந்தப் பதாகைகளை ஏந்தியவாறும், பெண் கடத்தலுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பியும் ஊர்வலமாகச் சென்றோம், எங்கெல்லாம் கூட்டம் அதிகமாக இருந்ததோ, அங்கெல்லாம் நிறுத்தி ஒரு கவிதையை வாசித்தோம். சூழ்நிலையின் தீவிரத்தை பிரதிபலித்து, நடவடிக்கை எடுக்க மக்களை ஊக்குவித்து, இந்த பிரச்சினையின் மேல் கவனத்தை ஈர்ப்பதை அணிவகுப்பு நோக்கமாகக் கொண்டிருந்தது.

அணிவகுப்பிற்கு இணையாக, இளைஞர்கள் சமூக ஊடகங்களிலும்







Mumbai Rotaractors put spotlight on women's trafficking - Tamil - October 2023.indd 55 9/27/2023 12:41:33 PM

*சங்கத்தின் சென்ற ஆண்டுத் தலைவர் குஷி ஷெட்டி (இடமிருந்து 3வது) மற்றும் 'சீக்' குழுவினர் ரெஸ்க்யூ அறக்கட்டளை நிறுவனர் த்ரிவேணி ஆச்சார்யாவுடன்.*




ஒரு பிரச்சாரத்தை நடத்தினர். இன்ஸ்டாகிராமில் ஒரு குறும்படத்தை சங்கம் வெளியிட்டது, அப்படத்தில், பெண்கள் பொம்மைகள் போல நடத்துவதாக சித்தரிக்கப்பட்டிருந்தது. நம் சமூகத்தில் பெண்கள் அனுபவிக்கும் புறநிலை மற்றும் மனிதநேயமற்ற தன்மையை அது வலியுறுத்தியது. சிந்தனையைத் தூண்டும் கதை பார்வையாளர்களிடையே எதிரொலிக்க, இதன் விளைவாக அதற்கு அமோக வரவேற்பு கிடைத்தது. குறுகிய காலத்திற்குள், படம் 12,000-க்கும் மேற்பட்ட மக்களைச் சென்றடைந்தது, பெண் கடத்தலுக்கு எதிரான செய்தியைப் பெருக்கி மேலும் விவாதத்தைத் தூண்டியது.

இந்த பிரச்சினையில் விழிப்புணர்வை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல் ரோட்டராக்டர்கள் மேலும் ஒரு படி முன்னேறியுள்ளனர். "ஒரு உறுதியான மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக, எங்கள் சங்கம், கடத்தல் வலையில் சிக்கியுள்ள சிறுமிகளை மீட்டு அவர்கள் வீடுகளுக்குத் திரும்ப உதவுவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு மீட்பு அறக்கட்டளையுடன் கைகோர்த்துள்ளது. அறக்கட்டளை மேற்கொள்ளும் முக்கியமான பணியை அங்கீகரித்து, குழு நிதி திரட்டல்களை ஏற்பாடு செய்து, இந்த காரணத்தை ஆதரிக்க வெற்றிகரமாக ரூ.10,100 வசூலித்தது.

ஐந்து சிறுமிகளின் மீட்பு மற்றும் மறுவாழ்விற்கும், அவர்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான வாய்ப்பை வழங்குவதற்கும் திரட்டப்பட்ட நிதி முக்கிய பங்கு வகித்ததாக குஷி மேலும் கூறுகிறார். சிகப்பு விளக்கு பகுதிகளில் இருந்து சிறுமிகளை மீட்க விரும்பிய ஒரு குற்றபிரிவு பத்திரிகையாளரால் கந்தேவெல்லியில் Huge NGO என்ற தன்னார்வ தொண்டு நிறுவனம் தொடங்கப்பட்டதாக அவர் விளக்குகிறார். தன்னார்வத் தொண்டர்கள் ஆய்வுகள் செய்து, வெளியேற விரும்பும் பெண்களை அடையாளம் காண்கின்றனர். இந்த பெண்களை மீட்க தன்னார்வ தொண்டு நிறுவனம் அவ்வப்போது பணம் செலுத்த வேண்டியிருக்கும். பின்னர் அவர்களை மறுவாழ்வு மையத்திற்கு கொண்டு வருகிறார்கள்.

பின்னர் குடும்பங்கள் அணுகப்பட்டு, பெண்களின் நிலைமை அவர்களுக்கு விளக்கப்படுகிறது; "குடும்பத்தினர் புரிந்து கொண்டு, பெண்களை திரும்பப் பெற ஒப்புக்கொண்டால், அது மகிழ்ச்சியான முடிவு. ஆனால் துரதிர்ஷ்டவசமாக, பல குடும்பங்கள் அவர்களை நிராகரிக்கின்றன. அதனால் இந்த பெண்கள் மறுவாழ்வு மையத்தில் தங்க வைக்கப்படுகின்றனர். தையல் அல்லது சிறுதொழில் தொடங்குவது போன்ற சில திறன்களில் அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு சுதந்திரமாக உருவாக்குவதே அதன் குறிக்கோள்.

சங்கத்தின் முன்னாள் தலைவர் சீக் திட்டம் மூலம், 70 சதவீத பெண்களை உள்ளடக்கிய எங்கள் சங்கம், பெண்கள் கடத்தலை எதிர்த்துப் போராடுவதில் கூட்டு நடவடிக்கை மற்றும் ஆக்கப்பூர்வமான ஆற்றலை வெளிப்படுத்தியதில் மகிழ்ச்சி" அடைகிறார். அவர்களின் செயல்பாடுகளை பன்முகப்படுத்துவதன் மூலம், குழு வெவ்வேறு பார்வையாளர்களுடன் ஈடுபட்டது மற்றும் பிரச்சினை பற்றிய பரந்த புரிதலை வளர்த்தது. விழிப்புணர்வை ஏற்படுத்துதல், உரையாடல்களைத் தூண்டுதல் மற்றும் பாதிக்கப்பட்டவர்களை மீட்பதில் தீவிரமாகப் பங்களிப்பதில் அவர்கள் செய்யும் முயற்சிகள் சமூக மாற்றத்திற்கான சங்கத்தின் அர்ப்பணிப்பை எடுத்துக் காட்டுகின்றன.

(முடிவு)



Mumbai Rotaractors put spotlight on women's trafficking - Tamil - October 2023.indd 56 9/27/2023 12:41:35 PM

# 100 பிளவு உதடு அறுவை சிகிச்சைகளை ஆதரிக்கும் அன்னெட்டுகள்

ரோட்டரி செய்திக்குழு




DG *ரவி ராமன் (இடதிலிருந்து* 5*வது) மற்றும்* DGE N S *சரவணன் (வலதிலிருந்து* 4*வது), மாவட்ட அன்னெட்ஸ் கவுன்சில் பிரதிநிதி ஆதிரா நாயர் (வலதிலிருந்து* 2*வது) மற்றும் வினோத் நாயர் (வலதிலிருந்து* 3*வது) ஆகியோர் ஒப்பந்தம் கையெழுத்திட்டப்பின்.*

ஆகஸ்ட் 1 அன்று, ரோட்டரி மாவட்ட அன்னெட்ஸ் கவுன்சில் பிரதிநிதி ஆதிரா நாயர் மற்றும் RC சென்னை ராயல்ஸ், RID 3232 மற்றும் கிங்ஸ் வித்யா அறக் கட்டளையின் திட்டத்தலைவர் டாக்டர் லோகேஷ் இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. அதன் இலக்கு, சென்னையில் உள்ள ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் 100 குழந்தைகளுக்கு பிளவு உதடு திருத்த அறுவை சிகிச்சைகளை மேற்கொள்வதாகும். RCCR திட்டத்தை கண்காணித்து ஒருங்கிணைக்கும் மற்றும் கிங்ஸ் வித்யா அறக்கட்டளை அறுவை சிகிச்சைகளுக்கு நிதியுதவி செய்யும் என்று அதன் நிர்வாக அறங்காவலர் மற்றும் RCCR இன் உறுப்பினரான வினோத் நாயர் கூறினார்.

ஆகஸ்ட்-இறுதி வரை 10 திருத்த அறுவை சிகிச்சைகள் முடிவடைந்த நிலையில், இந்த ரோட்டரி ஆண்டின் இறுதிக்குள் திட்டம் அதன் இலக்கு எண்ணைத் தொடும்.■

# RI தெற்கு ஆசிய அலுவலகத்தின் செய்தி

**ஒவ்வொரு ரோட்டரியனும், ஒவ்வோர் ஆண்டும்**
ரோட்டரி அறக்கட்டளையின் ஆண்டு நிதிக்கு நீங்கள் வழங்கும் பரிசு, ரோட்டரி உறுப்பினர்களுக்குச் செயல்படவும் உலகெங்கும் உள்ள சமூகங்களில் நேர்விதமான மாற்றத்தை உருவாக்கவும் ஆற்றல் அளிக்கிறது.

இன்றே வழங்குங்கள்: *rotary.org/donate*
மேலும் தெரிந்துகொள்ளுங்கள்: *my.rotary.org/annual-fund*

**சங்கங்களின் 'ரோட்டராக்ட் வழங்குதல் சான்றிதழ்' சாதனை**
2022–23ல் 640க்கும் மேற்பட்ட ரோட்டராட் சங்கங்கள் ரோட்டராக்ட் வழங்குதல் சான்றிதழைப் பெற்றுச் சாதனை படைத்தன. முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும்போது இது இருமடங்கைவிடக் கூடுதலாகும். ஓர் ஆண்டில் TRFக்கு மொத்தம் $100 அல்லது அதற்குமேல் பங்களித்துள்ள சங்கங்களை இந்தச் சான்றிதழ் அங்கீகரிக்கிறது. 2019–20லிருந்து, ரோட்டராக்டர்கள் இந்தச் சான்றிதழ் திட்டத்தின் வழியாக நம் அறக்கட்டளைக்கு $438,500க்கு மேல் பங்களித்துள்ளார்கள்.

**மிகப் பெரிய கொடையாளர் அங்கீகார வழிகாட்டுதல்கள்**

- தனிப்பட்ட பங்களிப்புக்குமட்டும்தான் கிடைக்கிறது. மிகப்பெரிய கொடையாளர் அங்கீகாரத்துடன் துணை வருடைய பங்களிப்பைமட்டும்தான் சேர்க்க இயலும்.
- குடும்ப அறக்கட்டளை ஒரு பங்களிப்பை வழங்கினால், அதற்கான அங்கீகாரம் உரிமையாளர்/அறங்காவலருக்கு வழங்கப்படலாம் என்று அவர்கள் அலுவல் பூர்வமாக எழுத்தில் தெரிவிக்கலாம்.

மிகப் பெரிய கொடையாளர் அங்கீகாரம்பற்றிய கூடுதல் தகவல்களுக்கு, *Madhu.Mamgain@rotary.org*ஐத் தொடர்புகொள்ளுங்கள்.■



From RI South Asia + Annettes support 100 cleft lip surgeries - Tamil - October 2023.indd 57 9/27/2023 1:02:11 PM

# RID 3090-ல் விரிவடையும் இன்டராக்ட் சங்கங்கள்

**கிரண் ஜெஹரா**

RID 3090-ல், மாணவர்கள் இன்டராக்ட் சங்கத்தில் சேருவதற்கு ஏராளமான காரணங்கள் உள்ளன. ‘‘சங்கங்கள், தங்கள் பள்ளிகளில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதைத் தவிர, பதிவுக் கட்டணச் சுமையின்றி தங்கள் திறமைகளை வெளிப்படுத்த வாய்ப்பளிப்பதால் மாணவர்கள் மகிழ்ச்சியடைகிறார்கள். கவனமான திட்டமிடல் மற்றும் மாணவர்களின் தேவைகளைப் புரிந்து கொள்வதில் மாவட்டத்தின் அர்ப்பணிப்பே இதற்கு காரணம்’’ என்று மாவட்ட இன்டராக்ட் தலைவர் மாணிக் ராஜ் சிங்லா கூறுகிறார்.



*இன்டராக்ட் மாணவர்களின் கலை நிகழ்ச்சி.*

நான்கே ஆண்டுகளில், இந்த மாவட்டத்தில் உள்ள இன்டராக்ட் சங்கங்கள் நம்பமுடியாத வளர்ச்சி யைக் கண்டுள்ளன, 2019-ல் வெறும் ஐந்து சங்கங்களில் இருந்து 2023-ல் இருநூறாக உயர்ந்துள்ளது. பள்ளி அளவிலான நிகழ்வுகளை ஏற்பாடு செய்தது அதன் சிறப்பான உத்திகளில் ஒன்று என்று சிங்லா கூறுகிறார். இந்த நிகழ்வுகள் ஆர்வத்தைத் தூண்டியது மட்டுமல்லாமல் சமூக இணைப்புகளை உருவாக்கியது, ‘‘இன்டராக்ட் சங்கங்கள் எங்கள் மாவட்டத் தில் மாணவர்கள் செழிக்க ஒரு தளமாக மாறியுள்ளது’’ என்று அவர் கூறுகிறார்.

மாவட்ட இன்டராக்ட் கமிட்டி யானது ‘‘இன்வால்வ் அண்ட் எவால்வ் இன்டராக்டர்ஸ்’’ என்ற திட்டத்தைத் தொடங்கியது, இது பல்வேறு ரோட்டரி நிகழ்வுகளில் இன்டராக்டர்களை ஈடுபடுத்தி, அவர்களை ரோட்டரியின் தூதுவர்களாக மாற்றியது. சமீபத்தில் 300 இன்டராக்டர்கள் உறுப்புதான முகாமில் பங்கேற்றனர்.

‘‘நிகழ்ச்சியை ஒருங்கிணைத்த ரோட்டேரியர்களை விட அவர்கள் எண்ணிக்கையில் அதிகம்’’ என்று சிங்லா புன்னகைக்கிறார். முயற்சியை பிரபலப்படுத்தவும், மாணவர்களை ஈர்க்கவும், மாவட்டம் மின்னணு மற்றும் அச்சு ஊடகங்களில் இன்டராக்ட் பிராண்டிங்கில் குறிப்பிடத்தக்க முதலீடு செய்தது. இது இன்டராக்ட் சங்கம் பற்றிய விழிப்புணர்வை அதிகரித்து மற்றும் அதிக மாணவர்களை இதில் ஈடுபட ஊக்குவித்தது என்று அவர் கூறுகிறார்.

இன்டராக்ட் சங்கங்களை விரிவு படுத்தும் போது, மாவட்டம் ஒரு சவாலை எதிர்கொண்டது. ‘‘புதிய சங்கத்தலைவர்கள் பெரும்பாலும் ஏற்கனவே உள்ள சங்கத்தை ஆதரிப்பதை விட புதிய இன்டராக்ட் சங்கங்களை உருவாக்குவதற்கு முன்னுரிமை அளித்தனர்.’’ இதை நிவர்த்தி செய்ய, சிங்லா ஒரு நோக்குநிலை சந்திப்பை ஏற்பாடு செய்தார். அதில் ‘‘அவர்களின் பகுதிகளில் உள்ள சங்கங்களை துடிப்பானதாக மாற்றுவதற்கு வழிகாட்டுதல், அவர்களின் வளர்ச்சிக்கான இலக்குகளை நிர்ணயம் செய்ய வழிகாட்டுதல், ஆகியவற்றிக்கு வழிகாட்டினார். ரோட்டரி சங்க மட்டத்தில் உள்ள இன்டராக்ட் சங்க கமிட்டிகளுடன் நெருக்கமாக பணியாற்றுவது மற்றொரு குறிப்பிடத்தக்க திட்டமாகும்.

புதிய உறுப்பினர்கள் மற்றும் சங்கங்களை ஈர்க்க, மாவட்டம் சமூக ஊடக தளங்களைப் பயன்படுத்தியது, மாவட்டக் கல்வி அதிகாரிகளை ஈடுபடுத்தியது மற்றும் பிரத்யேக ரோட்டரி-இன்டராக்ட் நிகழ்வுகளை நடத்தியது.

Interact Clubs expand in RID 3090 + DGNs meet@ Lonavala - Tamil - October 2023.indd 58 9/27/2023 12:21:14 PM




*இன்டராக்டர்களுடன் மாவட்ட இன்டராக்ட் தலைவர் மனிக் ராஜ் சிங்லா மற்றும் PDG குல்பஹர் சிங் ரெடோல்.*

இந்த நிகழ்வுகளில் தொழில் ஆலோசனைக் கருத்தரங்குகள் முதல் பொதுப் பேச்சுப் போட்டிகள், ஓவியம் மற்றும் விளையாட்டுப் போட்டிகள், RYLAகள் மற்றும் 1,000 மாணவர்களின் பங்கேற்பைக் கண்ட இன்டராக்ட் ஸ்பெல்லிங் பீ போட்டிகள் ஆகியவை நடைபெற்றன. "நாங்கள் அரசு பள்ளிகளில் கவனம் செலுத்தி மாணவர்களை பங்கேற்க ஊக்குவித்தோம். விஷயங்களை எளிதாக்க பதிவுக் கட்டணம் எதுவும் வாங்கப்படவில்லை. 50க்கும் மேற்பட்ட அரசுப் பள்ளிகளில் இப்போது இன்டராக்ட் சங்கங்கள் உள்ளன," என்று சிங்லா கூறுகிறார்.

மாவட்ட இன்டராக்ட் குழு, பள்ளி முதல்வர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு வழிகாட்டியது.■

# லோனாவாலாவில் DGNகள் சந்திப்பு

ரோட்டரி செய்திக்குழு



*லோனாவாலாவில் DGNகள் அவர்கள் மனைவியுடன்.*

பகுதிகள் 4, 5, 6 மற்றும் 7ல் மாவட்ட ஆளுநர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர்கள் மகாராஷ்டிரத்தின் அழகிய மலைப் பகுதியான லோனாவாலா-வில் மூன்று நாட்கள் நட்பாகச் சந்தித்து மகிழ்ந்தார்கள். இந்த நிகழ்ச்சியை RID 3141 DGN மனீஷ் மோத்வானி, RID 3142 DGN ஹர்ஷ் மகோல் வழிநடத்தினார்கள். RI இயக்குநர் ராஜூ சுப்ரமணியன், RID 3141 PDG சுனில் மெஹ்ரா, RID 3142 PDG கைலாஷ் ஜெத்தானி ஆகியோரும் இதில் பங்கேற்றனர்.

இந்த நிகழ்ச்சியின்மூலம், மாவட்டத் தலைவர்களுக்கிடையில் தோழமை வலுவானது, அறிவைப் பகிர்தல், பொருளுள்ள உரையாடல்களுக்கான தளமும் அமைந்தது.■



Interact Clubs expand in RID 3090 + DGNs meet@ Lonavala - Tamil - October 2023.indd 59 9/27/2023 12:21:18 PM

Rotary PEOPLE OF ACTION

# “ஃபிட் இந்தியா”வுக்காக குட்டநாட்டிலிருந்து லடாக் வரை


V முத்துகுமரன்

புனேவைச் சேர்ந்த அல்ட்ரா ரன்னர் ஆஷிஷ் கசோடேகர் (51), சமூக ஊடகங்களில் ஆரோக்கியத்தை பற்றி நல்ல கருத்துகளை பரப்பும் பிரபலம். அவர் மக்களை ஆரோக்கியமாகவும் சுறுசுறுப்பாகவும் இருக்க ஊக்குவிக்க விரும்பினார்; கடந்த ஆண்டு 61 நாட்கள் தொடர்ந்து முழு மாரத்தான் (42 கிமீ) ஓடிய அவரது சாதனை அவருக்குள் ஒரு “யுரேகா தருணத்தை” உருவாக்கியது.

58 நாட்கள் தொடர்ந்து ஓடிய ஐரோப்பியரின் சாதனையை முறியடித்து கின்னஸ் புத்தகத்தில் நுழைவதற்கு இரண்டு மாதங்கள் 2,560 கிமீ தூரம் முழு மராத்தான் ஓடினார். அந்த தூரம் புனேவிலிருந்து லடாக் அளவிலான தூரம் என்பதை அவர் உணர்ந்தார்.

76வது சுதந்திர தினத்தை குறிக்கும் வகையில், கசோடேகர், கடல் மட்டத்திலிருந்து 4–10 அடி கீழே உள்ள இந்தியாவின் மிகத் தாழ்வான பகுதியான குட்டநாட்டிலிருந்து ஜூன் 1-ம் தேதி தொடங்கி, தொடர்ந்து 76 நாட்கள் மற்றும் 4,000 கிமீ ஓடி,19,300 அடி உயரத்தில் உள்ள லடாக்கின் உம்லிங் லாவை ஆகஸ்ட் 15 அன்று அடைந்தார். ஆஷிஷ் 10 மாநிலங்களில் பயணம் செய்து, தான் சந்தித்த மக்களிடையே உடற்பயிற்சி பற்றிய விழிப்புணர்வை பரப்பினார். குட்டநாட்டின் உள்ளூர் மக்கள் அவரை அன்புடன் வழியனுப்பி வைத்தனர், அவர் ஓட்டத்தின் போது புனேவை அடைந்ததும், நாங்கள் அனைவரும் கூடி அவருக்கு ஒரு பெரிய வரவேற்பை அளித்தோம் என்கிறார் ஷைலேஷ் சிர்சிகர், Public Image கமிட்டியின் இணைச் செயலாளர் மற்றும் இயக்குனர் RC புனே பிரைட், RID 3131.

கசோடேகரின் Low2High பிரச்சாரம் அவரது நாடு தழுவிய ஓட்டத்தின் போது இராணுவ வீரர்கள், இராணுவத் தளபதிகள், ரோட்டேரியர்கள், NGOக்கள் மற்றும் உடற்பயிற்சி ஆர்வலர்களிடமிருந்து அங்கீகாரத்தை பெற்றது. ஃபிட்னஸ் செயலியான “பேசர்”மூலம் சங்க உறுப்பினர்கள், கசோடேகரின் 76-நாள் பயணத்தின் ஒவ்வொரு நாளும் தங்களின் அடிகளை (நடை பயிற்சி, ஓட்டம், மலையேற்றம்) பதிவு செய்தனர். “நாடு முழுவதும் ரோட்டேரியர்கள், குழந்தைகள் மற்றும் அனைத்து வயதினர் உட்பட







*லடாக்கில் உள்ள உம்லிங் லாவில் ஆஷிஷ் கசோடேகர்.*

From Kuttand to Ladakh for a Fit India - Tamil - October 2023.indd 60 9/27/2023 1:01:05 PM




*இந்திய சுதந்திர தினத்தன்று சங்கத்தினருடன் உம்லிங் லாவில்.*

50,000க்கும் அதிகமானோர் அந்த நேரத்தில் அச்செயலியை பயன் படுத்தினர், இதனால் அவர்கள் எடுத்த ஒட்டுமொத்த அடிகளை கசோடேகரால் பார்க்க முடிந்தது'' என்று அவர் விளக்குகிறார். இந்த தனி மராத்தான் பிரச்சாரம் புனே மற்றும் அதற்கு அப்பால் உள்ள ரோட்டரி சங்கங்களிடையே உடற்பயிற்சி பற்றிய புதிய உணர்வை உருவாக்கியுள்ளது என அவர் புன்னகைக்கிறார்.

ஃபிட் இந்தியா இயக்கத்தின் பிராண்ட் தூதுரான கசோடேகர், ஹம் ஃபிட், தோ பாரத் ஃபிட் (நாம் ஃபிட்டாக இருந்தால், இந்தியா ஃபிட்டாக இருக்கும்) என்ற எளிய கோஷம் மூலம் மக்களை உற்சாகப்படுத்தி, உடற்பயிற்சி பற்றிய விழிப்புணர்வை பரப்பி, ''அவர்களின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வுக்கான பாதைகளில் பயணத்தை தொடங்குவதற்கு'' அவர்களை ஊக்குவிக்கிறார். அவர் உம்லிங் லாவை அடைந்தபோது, RC புனே பிரைடின் ஐந்து உறுப்பினர்கள் அவரை அங்கே வரவேற்றனர். அவர்கள் சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதற்காக தேசியக் கொடியை உயர்த்தினர்.

### கடுமையான பயணத்திட்டம்

அவரது சாதனையை நினைவுகூர்ந்த கசோடேகர், நான் காலை 6 மணி முதல் மாலை 4.30 மணி வரை ஓடுவேன், அதன் பிறகு எனது மூன்று பேர் கொண்ட பிசியோதெரபி குழு என்னை கவனித்துக் கொள்ளும். வழியில் மாணவர்களிடையே உடற் தகுதியை வளர்ப்பதற்காக 76 ஜில்லா பரிஷத் பள்ளிகளுக்கு விளையாட்டு கருவிகளை வழங்கினார்.

சமீபத்தில், அவரது அமைப்பான சிம்பிள் ஸ்டெப்ஸ் ஃபிட்னஸ், அவர் கௌரவ உறுப்பினராக உள்ள RC புனே பிரைடுடன் கைகோர்த்து, 600க்கும் மேற்பட்ட மூத்த குடிமக்களுக்கு மினி மாரத்தான் (3/5 கிமீ) நடத்தினர்.■



From Kuttand to Ladakh for a Fit India - Tamil - October 2023.indd 61 9/27/2023 1:01:06 PM

# கொஞ்சம் துணிகரம், கொஞ்சம் தூய்மை

ப்ரீதி மேஹரா

*இது டிரெக்கிங் (நெடுநடை) பருவம். இதை நீங்கள் ஒரு பசுமைப் பழக்கமாகவும் ஆக்கலாம்.*

சில நாட்களாக நான் மிகவும் பொறாமைப்படுகிறேன். என் பக்கத்து வீடுகளில் உள்ள இருவர் இந்த மாதம் காஷ்மீர் சென்று டிரெக்கிங் செய்யவுள்ளார்கள். அதனால், ஒவ்வொரு நாள் காலையிலும் மாலையிலும் அவர்கள் விறுவிறுவென்று நடக்கிறார்கள், உடலை உறுதியாக்குகிறார்கள், தங்களுடைய மலை நடைக்கு விரிவாகத் திட்டமிடுகிறார்கள். இதுபற்றி அவர்கள் நிறையப் பேசுகிறார்கள், என்ன செய்யலாம், எதைச் செய்யக்கூடாது என்று வாதிடுகிறார்கள். அவர்கள் தங்களுடைய பயணத்தை வளங்குன்றாத பசுமைப் பயணமாக ஆக்குவதற்கு ஏதேனும் வழி உண்டா? அவர்கள் தங்களுடன் கொண்டுசெல்லக்கூடிய, இயற்கைக்கு இதமான பொருட்கள் என்னென்ன? அவர்கள் மலைப் பாதையில் குப்பை போடாமல் தங்களுக்கு வேண்டிய உணவைப் பெறுவது எப்படி? தாங்கள் நடக்கும் வழியை மதித்தபடி தங்களுடைய நலன், வசதி, பாதுகாப்பையும் அவர்கள் நன்கு உறுதிப்படுத்திக் கொள்வது எப்படி?

அவர்களுக்கு உதவுவதற்கென நான் இதுபற்றிக் கொஞ்சம் ஆராய்ந்தேன். டிரெக்கிங் செல்கிற எல்லாரும் பயன்படுத்தக்கூடிய மிகச் சிறந்த தகவல்கள், உதவிக் குறிப்புகளைக் கண்டறிந்தேன். இந்தியாவிலிருந்தும் வெளிநாடு களிலிருந்தும் பல இணையத் தளங்கள் 'பசுமை' டிரெக்கர்களுக்கு ஏற்ற உதவிக் குறிப்புகளை வழங்குகின்றன. இவற்றுள் *indiahikes.com* மிகவும் பயனுள்ளதாக எனக்குத் தோன்றியது. இந்த இணையத் தளமும் அதை நடத்தும் *Indiahikes* என்ற நிறுவனமும் நாடு



Go Green - Litter-free adventures - Tamil - October 2023.indd 62 9/26/2023 2:59:16 PM

முழுவதிலுமிருந்து பல டிரெக்கு களைப் பட்டியலிடுகிறார்கள், அத்துடன், ஆர்வமுள்ளவர் களுக்கெனப் பயணங்களையும் ஏற்பாடு செய்கிறார்கள். இதில் சிறப்பான செய்தி, பசுமை ஆர்வம் கொண்டவர்களுக்கென இவர்கள் ‘பசுமை நெடுநடை முன்னெடுப்பு’ ஒன்றையும் தொடங்கியுள்ளார்கள்.

இவர்களுடைய குறிக்கோள் எனக்கு மிகவும் பிடித்திருந்தது “நீங்கள் பார்க்கும் மலைகளை இன்னும் சிறப்பாக்கி விட்டு வாருங்கள்.” அத்துடன், பசுமை நெடுநடை முன்னெடுப்பின் தலைவர் லட்சுமி செல்வகுமரன் உண்மையான வளங்குன்றாத நெடுநடையின் போது எதைச் செய்யவேண்டும், எதைத் தவிர்க்கவேண்டும் என்பது பற்றிச் சிறந்த வலைப்பதிவுகளை எழுதியுள்ளார்.

ஆனால், அவர் பரிந்துரைக்கும் விஷயங்களை நான் விவரிப்பதற்கு முன்னால், பசுமை நெடுநடை முன்னெடுப்பு என்பது வெறும் செய்திமட்டும் இல்லை என்பதை நான் சுட்டிக்காண்பிக்கவேண்டும். இந்தக் குழுவும் டிரெக்கர்களும் சேர்ந்து, தாங்கள் நடக்கும் பாதை களில் இதற்குமுன் நடந்தவர்கள் விட்டுச்சென்ற குப்பைகளை நீக்கித் தூய்மைப்படுத்துகிறார்கள். இவர்கள் இதற்கெனச் சுற்றுச்சூழலுக்கு இதமான பைகளைக் கொண்டு செல்கிறார்கள், அவற்றில் குப்பையைச் சேமிக்கிறார்கள், இணையத் தளம் நாடு முழுவதுமுள்ள டிரெக்கிங் வழிகளில் 100 டன்னுக்கு மேற்பட்ட குப்பையை நீக்கி யிருப்பதாகச் சொல்கிறது. இது பாராட்டவேண்டிய பணி. இந்தக் குழுவினர் தூய்மைப் பணிகளில் ஈடுபடுவதுடன், தாங்கள் செய்கிற அனைத்திலும் வளங்குன்றா நிலையை மனத்தில் வைத்துச் செயல்படுகிறார்கள். எடுத்துக்காட்டாக, கருவிகளைப் பெறுவது, மளிகைப் பொருட்களை வாங்குவது, மலைப்பகுதிகளில் மனிதக் கழிவைக் கையாள்வது போன்றவை.

லட்சுமி தன்னுடைய வலைப்பதிவுகளில் பரிந்துரைக்கிற “தங்க வழிமுறைகள்” என்னென்ன? முதலில், நீங்கள் செய்யவேண்டியவை: உங்கள் பையை மற்ற மனிதர்கள் அல்லது விலங்குகளைச் சுமக்கச் சொல்லா தீர்கள். இதன் மூலம் பாதையில் கூட்டம் பெரிதாகிறது. திரும்பப் பயன்படுத்தக் கூடிய புட்டிகள், கோப்பைகள் மற்றும் தட்டுகளை மட்டும் பயன்படுத்துங்கள்.

வேதிப்பொருட்கள் இல்லாத தூய்மைப் பொருட்களை மட்டும் கொண்டுசெல்லுங்கள். “பல நேரங்களில், தூய்மைப் பொருட்கள், அழகுப் பொருட்களில் தீங்கு விளைவிக்கும் வேதிப் பொருட்கள் நிறைந்துள்ளன. சூரிய ஒளியிலிருந்து காத்துக்கொள்வதற்குப் பூசப்படும் சன்ஸ்க்ரீனில் உள்ள ஆக்சி பென்ஜோன் பவளப்பாறைகள் குறைவதற்குப் பங்களித் துள்ளது என்று பல ஆய்வுகள் சொல்கின்றன. பற்பசையில் உள்ள சோடியம் லௌரெத் சல்ஃபேட் தீங்கு விளைவிப்பதாகும். இவை தங்களைப் பயன்படுத்துவோருடைய உடலுக்கும் சுற்றுச்சூழலுக்கும் தீங்கு செய்கின்றன.”

குப்பைகளைத் திரட்டுவதிலும் வகை பிரிப்பதிலும் பங்கேற்றுக் கொள்ளுங்கள், சுற்றுச்சூழலை அழகாக மாற்றிவிட்டு அங்கிருந்து கிளம்புங்கள். உங்களுடைய குப்பைகளை உங்களுடன் கொண்டுவந்து சரியாக அகற்றுங்கள்.

**இப்போது, செய்யக்கூடாதவை:**
நடக்கச் செல்லும்போது, பொட்டல மாக்கப்பட்ட உணவைக் கொண்டு செல்லாதீர்கள். அவற்றைக் கொண்டு செல்லத்தான் வேண்டும் என்றால், திரும்பப் பயன்படுத்தக்கூடிய ஒரு பெட்டி அல்லது தாளால் ஆன பை அல்லது ஜிப்-லாக் பையில் அவற்றைப் போட்டுக் கொள்ளுங்கள்.

நெடுநடையின் போது உங்களுக்குப் போதுமான ஊட்டச் சத்து தேவை. அதை முழுமையான, நெடுங்காலமாகப் பின்பற்றப்பட்டு உறுதி செய்யப்பட்ட உள்ளூர் உணவுகள்தான் வழங்கும். அதனால், உள்ளூர் உணவைச் சாப்பிடுங்கள்.

நீங்கள் ஓடைகள், ஆறுகளைக் கடக்கும் போது, நீரை மாசுபடுத் தாதீர்கள். ஏனெனில், உள்ளூர் மக்களுக்கு அதுதான் நேரடிக் குடிநீர் வளம். மலைப் பாதைகளில் வாழும் மற்ற உயிரினங்களுடைய அமைதியைக் கெடுக்கவேண்டாம். அதற்கு, மெதுவாகப் பேசுங்கள், அவற்றின் வாழ்க்கையில் குறுக்கிடாதீர்கள்.

இயற்கையைப் பாதுகாப்பது மற்றும் மதிப்பதன் முக்கியத் துவத்தை நன்கு புரிந்து கொள்ளவேண்டுமென்றால், மலையேறுவோரும் ஆர்வலர்களும் எவரெஸ்ட் சிகரத்துக்கு உண்டாக்கி யிருக்கிற சேதத்தைப் பார்த்தால் போதும். ஒருபக்கம், காலநிலை மாற்றத்தால் பனி உருகுகிறது என்றால், இன்னொருபக்கம், பல ஆண்டுகளாகச் சேர்ந்த குப்பை திடீரென்று வெளிப்படுகிறது. இன்று, எவரெஸ்ட் “உலகின் மிக உயரமான குப்பை மலை” என்றுகூட அழைக்கப்படுகிறது.



எழுத்தாளர் மூத்த இதழாளர் சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப்பற்றி எழுதிவருகிறார்.



Go Green - Litter-free adventures - Tamil - October 2023.indd 63 9/26/2023 2:59:16 PM

# மைசூரில் தலைமைப்பண்பு பயிற்சி நிகழ்வு

ரோட்டரி செய்திக்குழு




*RI இயக்குனர்கள் அனிருதா ராய்சௌத்ரி மற்றும் ராஜு சுப்ரமணியன் RLI நிகழ்ச்சியை துவக்கி வைக்கின்றனர். உடன் PDG ராஜேந்திர ராய், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் H M ஹரிஷ், PDG நாகேந்தர ப்ரசாத், DGs H R கேசவ், நசிர் போர்சத்வாலா, சங்கத்தலைவர் M S ஹரிஷ், S மகேஷ் மற்றும் சங்க செயலாளர் M R ராகவேந்திரா ஆகியோரும் உள்ளனர்.*

RC விஜயநகரா மைசூர், RID 3181, பல மாவட்டங்களுக்கான ரோட்டரி தலைமைப்பண்புப் பயிற்சி (RLI) ஒன்றை நடத்தியது. RI இயக்குநர்கள் ராஜூ சுப்ரமணியன், அனிருதா ராய்சௌத்ரி இந்த நிகழ்வைத் தொடங்கிவைத்தார்கள், நாடு முழுவதிலிருந்தும் வந்திருந்த 50 பங்கேற்பாளர்களுடன் பேசினார்கள்.

RID சுப்ரமணியன் ரோட்டரியன் களில் பலருக்கு ரோட்டரி, அதன் பன்னாட்டுச் செயல்பாடுகளைப்பற்றி நன்கு தெரிந்திருப்பதில்லை என்பதைச் சுட்டிக்காண்பித்து, இவர்கள் தலைமைப்பண்புப் பயிற்சிகளில் பங்கேற்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

RID ராய்சௌத்ரி RLI-ன் தொடக்கத்தைப்பற்றிப் பேசி னார, சங்கத்துக்குள் தலைவர்களை உருவாக்கும் தனித்துவமான திட்டம் என்று அதை விவரித்தார். 1992ல் தொடங்கப்பட்ட RLI எல்லாக் கண்டங்களிலும் செயல்படுகிற உலகளாவிய திட்டமாக வளர்ந்துள்ளது. ''RLI ஒரு குறிப்பிட்ட பதவிக்கான பயிற்சியை வழங்காமல், ரோட்டரியைப் பற்றிய பொதுக் கல்வி, தலைமைப்பண்புத் திறன்களை வழங்குவதால், மற்ற RI பயிற்சித் திட்டங்களிலிருந்து தனித்து நிற்கிறது'' என்றார் அவர்.

மாவட்டப் பயிற்சிச் செயலாளர், இந்த நிகழ்வின் ஏற்பாட்டாளரான H M ஹரிஷ், "இந்த மூன்று நாள் முழுமையான பயிற்சி வகுப்பு வெறும் அடிப்படைப் பயிற்சி இல்லை'' என்றார். "இது ரோட்டரியின் முதன்மையான தலைப்புகளில் ஆழமான கருத்தரங்குகளை வழங்குகிறது. எந்த ரோட்டரியனும் இந்தப் பயிற்சியில் பங்குபெறலாம். அல்லது, ஒரு சங்கம் தன்னுடைய வருங்காலத் தலைவர்களாகக் கருதும் உறுப்பினர்களை இந்தப் பயிற்சிக்கு அனுப்பி ஆதரிக்கலாம்.''

RID 3181 DG H R கேசவ், DGN P K ராமகிருஷ்ணா; RID 3170 DG நசீர் போர்சட்வாலா, RID 3191 DG உதய்குமார் பாஸ்கரா, RID 3192 DG ஸ்ரீனிவாஸ் மூர்த்தி, PDG ராஜேந்திர ராய் மற்றும் PDG நாகேந்திரப் பிரசாத் மற்றும் RID 3203 DG சுந்தர்ராஜன் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டார்கள். இந்தப் பயிற்சியை ரோட்டரியன்கள் மோகன் குமார், குரு நாகேஷ், பிரசாத், RLI ஒருங்கிணைப்பாளர் பிரகாஷ் பெலவாடி ஆகியோர் வழிநடத்தினார்கள்.■



A multidistrict leadership training programme in Mysuru - Tamil - October 2023.indd 64 9/27/2023 11:13:25 AM

Rotary PEOPLE OF ACTION

# ரோட்டரியின் மக்கள் நல திட்டங்கள்

ரோட்டரி செய்திக்குழு

## ரோட்டரி தலைவர்கள் – ராஜஸ்ரீ பிர்லா சந்திப்பு



TRF *அறங்காவலர் பரத் பாண்ட்யா,* PRID *அஷோக் மகாஜன், ஆதித்யா பிர்லா அறக்கட்டளை தலைவர் ராஜஸ்ரீ பிர்லா மற்றும்* TRF *அறங்காவலர் தலைவர் பேரி ரஸ்ஸின்.*

TRF அறங்காவலர் தலைவர் பேரி ரஸ்ஸின், அறங்காவலர் பரத் பாண்ட்யா மற்றும் PRID அஷோக் மகாஜன் ஆகியோர் மும்பையில் ஆதித்யா பிர்லா அறக்கட்டளை தலைவர் ராஜஸ்ரீ பிர்லா அவர்களை அவர் அலுவலகத்தில் சந்தித்து ரோட்டரியிற்கு அவர் அளிக்கும் ஆதரவிற்கு நன்றி தெரிவித்தனர்.■

## தில்லி ரொட்டேரியன் – ஆசிரியையிற்கு தேசிய விருது



RC *தில்லி சிட்டி செயலாளர் ரித்திகா ஆனந்த் குடியரசு தலைவரிடமிருந்து விருது பெறுகிறார்.*

RID 3012, RC தில்லி சிட்டியின் துணை செயலாளர் ரித்திகா ஆனந்த் அவர்களுக்கு தேசிய ஆசிரியை விருது குடியரசு தலைவர் திரௌபதி முர்மூ அவர்கள் ஆசிரியர் தினத்தன்று வழங்கி கௌரவித்துள்ளார். ரித்திகா கடந்த இரண்டு ஆண்டுகளில் CBSE Award for Excellence in Teaching மற்றும் மாநில ஆசிரியர் விருது ஆகியவற்றையும் பெற்றுள்ளார்.■

## உறுப்பு தானம் பற்றிய பரப்புரை



DG *அஷோக் குப்தா பேரணியை துவக்கி வைக்கிறார்.*

முஜாஃபர்நகர், கடௌலியைச் சேர்ந்த (RID 3100) பதினைந்து ரோட்டரி சங்கங்கள் RC தில்லி மந்தான், RID 3011, வழிநடத்திய உறுப்பு தானம் பற்றிய பேரணியில் பங்கேற்றன. பல நகரங்களைச் சேர்ந்தவர்கள் பங்கேற்ற இந்தப் பேரணி முஜாஃபர்நகர் பெக்ராஜ்பூர் மருத்துவக் கல்லூரியில் தொடங்கி தில்லியில் நிறைவடைந்தது.■

## குழந்தைகளுக்குப் பள்ளிப் பொதிகள்



*மாணவர்கள் தங்கள் புதிய பையுடன்.*

ராஜ்கோட்டில் 93 நகராட்சிப் பள்ளிகளைச் சேர்ந்த ஏழை மாணவர்களுக்கு பள்ளிப் பொதிகளை வழங்குகிறது RC ராஜ்கோட், RID 3060. இந்தத் திட்டம் ரூ.20 லட்சம் மதிப்பீட்டில் 4,000 மாணவர்களுக்கு உதவும் இலக்கைக் கொண்டுள்ளது.■



Project Vignettes - Tamil - October 2023.indd 65 9/27/2023 12:49:54 PM

# ரோட்டரி ஆளுநர்



**நிகிர் தாவெ**
கட்டடப் பொறியாளர்,
RC ஆனந்த் ரவுண்ட்-டவுன், RID 3060

## கருப்பை வாய்ப் புற்றுநோய்ப் பரிசோதனைக்கு முக்கியத்துவம்

“என்னுடைய மாமா ரமேஷ் தாவெ அவர்களால் ஊக்கம் பெற்று, அவரைப்போல் சமூகத்துக்குச் சேவை செய்ய விரும்பி 1996ல் ரோட்டரியில் சேர்ந்தேன்” என்கிறார் நிகிர் தாவெ, “ரோட்டரியன்களுடைய மைய மதிப்பீடுகளைப் பொருத்தமாக வரையறுக்கும் மூன்று சொல் மந்திரம்: சேவை, சேவை, சேவை.” அடுத்த ஜூலைக்குள் 10 புதிய சங்கங்கள், 500 புதிய உறுப்பினர்களைச் சேர்த்து இந்த எண்ணிக்கையை முறையே 115க்கும் 5,500க்குமேலும் கொண்டுசெல்ல இயலும் என்று இவர் நம்புகிறார்.

இவர் மார்பக, கருப்பை வாய்ப் புற்றுநோயை அகற்றுவதற்கு முக்கியத்துவம் தரவுள்ளார், இதற்கென, 10 லட்சத்துக்கும் மேற்பட்ட பெண்களைச் சென்றடையக்கூடிய விழிப்புணர்வு, பரிசோதனை மற்றும் தடுப்பு மருந்துப் பரப்புரையை நடத்தவுள்ளார்.

இவருக்குப் பிடித்த இன்னொரு திட்டம், தொழில் சார்ந்த மையங்களில் பயிற்சி பெறும் பெண்களுக்கு 700 தையல் இயந்திரங்களை (மாவட்ட நல்கை: ரூ.70 லட்சம்) வழங்குவது. சௌராஷ்டிரா-வில் நவீனச் சுடுகாடு, வடோதரா அரசு மருத்துவமனையில் புதிதாகப் பிறக்கும் குழந்தைகளுக்கான ICU, வடோதரா முனி சேவா ஆசிரமத்தில் தொழில் சார்ந்த மையம் உள்ளிட்ட சுமார் ஐந்து GG திட்டங்களை இவர் நடத்தவுள்ளார். இவருடைய TRF வழங்கும் இலக்கு, $1.5 மில்லியன்.

அரசுச் சான்றிதழ் பெற்ற மதிப்பாளராகிய இவர், சக ரோட்டரியனாகிய தன் மனைவி வைஷாலி-யை “எனக்கு வலிமையாகத் துணை நிற்பவர்” என்று விவரித்துச் சிரிக்கிறார்.■



**சுனில் பன்சால்**
பங்குத் தரகர்/பகுப்பாய்வாளர்,
RC வாரணாசி கிரேட்டர், RID 3120

## UPல் ரோட்டரி அடையாளம் வலிமையாக இல்லை

கிழக்கு உத்திரப் பிரதேசத்தில் இளம் தொழில் வல்லுனர்கள், 40 வயதுக்குக் கீழுள்ள மற்றவர்களை ரோட்டரி ஈர்க்கவேண்டுமென்றால், அதன் பொதுத் தோற்றத்தை மேம்படுத்தும் திட்டங்களின் மூலம் நல்ல அமைப்பு அடையாளத்தை உண்டாக்கவேண்டும் என்கிறார் சுனில் பன்சால். “இப்போது இங்கு ரோட்டரியனாக இருப்பது செலவு பிடிக்கிற வேலை. ஆண்டு உறுப்பினர் கட்டணம் ரூ.15,000. அதில் ரூ.8,000 RIக்குச் செல்கிறது. அதனால், திட்டங்களை நடத்துவதற்குக் குறைந்த பணம் தான் மீதமுள்ளது. இளைஞர்களுக்கு ரோட்டரியில் சேர்வது ஈர்ப்பாக இல்லாததால், அவர்கள் அதை விரும்புவதில்லை. அதனால், UPல் ரோட்டரி நல்ல நிலையில் இல்லை” என்று விளக்குகிறார் இவர்.

இவர் 6 புதிய சங்கங்களைத் தொடங்கி அந்த எண்ணிக்கையை 92க்குக் கொண்டுசெல்ல எண்ணியுள்ளார், அதில் ஒன்று ஏற்கெனவே தொடங்கப்பட்டுவிட்டது. இவர் 10%க்கு மேல் உறுப்பினர் எண்ணிக்கையை உயர்த்தி 4,000ஐக் கடக்க இலக்கு அமைத்துள்ளார். இவர் நடத்தவுள்ள சில GG திட்டங்கள்: வாரணாசியில் ஒரு புதிய ரத்த வங்கி, லக்னோ அரசு மருத்துவமனையில் ரோட்டரி டயாலிசிஸ் மையம், 20 பிணக்கிடங்கு உறைவிப்பான் பெட்டிகள்.

இவர் TRFக்கு 200,000 திரட்ட இலக்கு அமைத்துள்ளார். 1978ல் பன்சாலுக்கு 18 வயதான போது, கல்லூரியில் ரோட்டராக்டில் சேர்ந்தார், தன்னுடைய ரோட்டராக்ட் வழிகாட்டி நிஷிகாந்த் பட்நாகரிடம் வழிகாட்டுதலைப் பெற்றார்.■



Meet your Governors - Tamil - October 2023.indd 66 9/26/2023 5:29:01 PM

# களுடன் சந்திப்பு

V முத்துகுமார்



**மணிக் S பவார்**
கட்டடப் பொறியாளர்,
RC குல்பர்கா நார்த், RID 3160

## 10 மிகப் பெரிய GG திட்டங்கள் நடைபெறவுள்ளன

மனிதத்தன்மைத் திட்டங்களின் வழியாகச் சமூகத்துக்குத் திரும்பக் கொடுத்தல், தொழில் முறைத் தொடர்புகளை விரிவாக்குவதற்கு வலைப் பின்னல்களை உருவாக்குதல் மற்றும் தனக்கு மேல் சேவை என்கிற குறிக்கோள் ஆகிய ரோட்டரி அம்சங்கள்தான் இவரைத் தன் மாவட்டத்தின் தலைமைப் பொறுப்பை நோக்கி நகர்த்தின. இவர் அடுத்த ஜூலைக்குள் 10 புதிய சங்கங்களைத் தொடங்கி அந்த எண்ணிக்கையை 93 ஆக்க விரும்புகிறார், 10% நிகர உறுப்பினர் எண்ணிக்கையை உயர்த்த இலக்கு அமைத்துள்ளார். இப்போது இந்த மாவட்டத்தில் 2,700க்கும் மேற்பட்ட ரோட்டரியன்கள் உள்ளார்கள்.

இவர் 10 GG திட்டங்களை நடத்தவுள்ளார்; அவற்றுள் சில: மாமோகிராஃபி பேருந்து, நடமாடும் பல் மருந்தகம், இதயப் பராமரிப்பு வேன், நீர் வழியாகப் பரவும் நோய்களாலும் பாதிக்கப்பட்டுள்ள கிராமங்களில் 10 மிகப் பெரிய RO அமைப்புகள். இவர் TRFக்கு $300,000 திரட்ட இலக்கு அமைத்துள்ளார்.

இவர் பசவராஜ் கண்டெராவ் என்ற கட்டுமான வல்லுனரால் ஊக்கம் பெற்று 2004ல் ரோட்டரியில் சேர்ந்தார்.■



**ஹீரா லால் யாதவ்**
பிளைவுட் தயாரிப்பாளர், RC ஹூக்ளி, RID 3291

## ரோட்டரி ஒரு தனித்துவமான, பன்னாட்டுக் குடும்பம்

ரோட்டரி கண் மருத்துவமனைகளை அமைப்பதில் சிறப்பு வல்லுனரான ஹீரா லால் யாதவ் இந்தியாவில் 18 மருத்துவ மனைகள், பங்களாதேஷில் 2 மருத்துவமனைகளின் கட்டுமானத்தை வழிநடத்தியுள்ளார். “விரைவில், RID 3291ன் 12வது ரோட்டரி கண் மருத்துவமனை வடக்கு 24 பர்கனாஸ் மாவட்டத்தில் தொடங்கப்படும்” என்று சிரித்தபடி சொல்கிறார் இவர்.

சென்ற ஆண்டு, 11 ரோட்டரி மருத்துவமனைகளில் 32,000 கண் புரை அறுவைச் சிகிச்சைகள் செய்யப் பட்டன. “இந்த ஆண்டு நாங்கள் 55,000 அறுவைச் சிகிச்சைகளையும் ஏழு லட்சம் நோயாளிகளுக்குக் கண் பரிசோதனையும் செய்வோம்.” இவர் 12 புதிய சங்கங்களை அமைத்து, செயலில் உள்ள சங்கங்களின் எண்ணிக்கையை 156 ஆக்க விரும்புகிறார், 500 புதிய உறுப்பினர்களைச் சேர்த்து மொத்த எண்ணிக்கையை 4,000க்கு மேல் கொண்டுசெல்ல விரும்புகிறார். இவர் ஹௌரா-வில் ஒரு ரத்த வங்கிக்கான GGக்கு விண்ணப்பிக்கிறார், ஐந்து டயாலிசிஸ் மையங்களுக்கான GG ஒன்று செயல்முறையின் கீழ் உள்ளது. இவர் 2000ம் ஆண்டிலிருந்து ரோட்டரி ஹூக்ளி கண் மருத்துவமனையை நடத்துகிறார்.

இவருடைய TRF வழங்கும் இலக்கு. $500,000. 1982லிருந்து 1993 வரை இவர் ரோட்டராக்டராகச் சேவையாற்றியதால், 1995ல் ரோட்டரியில் சேரும் ஊக்கத்தைப் பெற்றார்.■



Meet your Governors - Tamil - October 2023.indd 67 9/26/2023 5:29:02 PM

இசை & மெல்லிசை

# லக்ஷ்மிகாந்த்–பியாரேலால்: வசூல் ராஜாக்கள்

SR மது

“அவர்களின் இசை ஒரு சூப்பர் மார்க்கெட், ஒரு குதுகலமான இராட்டினம். அவர்கள் நாட்டுப்புற மற்றும் பாரம்பரிய இசையின் சிறந்த கலவை” என லக்ஷ்மிகாந்த்-பியாரேலால் பற்றி பாலிவுட்டின் முன்னணி பாடகியான ஸ்ரேயா கோஷல் கூறுகிறார்.

நான் LP பாடல்களைப் பாடும் போது, என்னைக் கட்டுப் படுத்திக் கொள்ள முடியாமல் அழத் தொடங்குவேன். ஒருமுறை, இந்தியன் ஐடல் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் இது நடந்தபோது, எல்லோரும் என்னிடம் ஏன் அழுகிறீர்கள் என்று கேட்டார்கள். ஏன் என்று சொல்லமுடியாது என்று சொன்னேன் என அவர் கூறுகிறார்.

“சதி சாவித்திரியின் ஜீவன் டோர் தும்ஹி சங்க் பந்தி என்ற LP பாடல் என் வாழ்க்கையில் ஒரு சிறப்பு இடத்தைப் பெற்றுள்ளது” என்று ஸ்ரேயா கூறுகிறார். என்னுடைய முதல் படமான தேவதாஸிற்கு, சஞ்சய் லீலா பன்சாலி என்னை ஆடிஷன் செய்தபோது, அவர் லதா அவர்களின் பாடலைப் பாடச் சொன்னார், நான் ஜீவன் டோர்-ஐ பாடினேன். அன்று அவரும் அதே பாடலை தனக்குள் முனுமுனுத்துக் கொண்டிருந்திருக்கிறார். இந்த தற்செயல்தான் எனக்கு அந்த வாய்ப்பு கிடைக்க காரணம் என்று நான் நினைக்கிறேன்.

LP ஒரு பாடகரின் கனவு இசையமைப்பாளர்கள். பல பாடகர்கள் அவர்களின் சிறப்பான பணியை அவர் களுக்காக செய்துள்ளனர். ஏனென்றால், ஒரு பாடகர் சிக்கலற்ற உச்சரிப்பைச் செய்வதற்கு அவர்கள் எப்போதும் சரியான வார்த்தைகளைக் கண்டுபிடித்தனர். அதுவே அவர்களின் பாடல்களில் ஒரு முக்கிய மந்திரமாக இருந்தது என ஸ்ரேயா குறிப்பிடுகிறார்.

சஞ்சய் லீலா பன்சாலி தன்னை ஃக இன் மிகப்பெரிய ரசிகன் என்று வர்ணித்துக் கொள்கிறார். அவர் தனது ஹம் தில் தே சுக்கே சனம் படத்திற்கு அவர்களை இசையமைப்பாளர்களாக ஈடுபடுத்த விரும்பினார், ஆனால் துரதிஸ்டவசமாக லக்ஷ்மிகாந்த் காலமானார், இது பன்சாலிக்கு அதிர்ச்சியையும் துயரத்தையும் ஏற்படுத்தியது.

A R ரஹ்மான், கல்நாயக்கின் சோலி கே பீச்சே க்யா ஹை பாடலை “1990களின் மிக முக்கியமான கீதம்” என்று விவரிக்கிறார். அது அவரது ஆஸ்கார் விருது பெற்ற படமான ஸ்லம்டாக் மில்லியனருக்கான ஒரு பாடலைத் தேர்ந்தெடுத்தது. எனது பாடலுக்கு அதே பாடகர்களான அல்கா யாக்னிக் மற்றும் இலா அருண் ஆகியோரை



*லஷ்மிகாந்த் (வலது) மற்றும் ப்யாரேலால்.*



Music and Melody - Laxmikant-Pyarelal - Tamil - October 2023.indd 68 9/27/2023 12:51:14 PM

தேர்ந்தெடுத்தேன். இந்தப் பாடல் லக்ஷ்மிகாந்த்-பியாரேலாலுக்கு எனது சமர்ப்பணம்.

திரையரங்க பார்வையாளர்கள் திரையில் நாணயங்களை எறிந்து பாடல்களைப் பாராட்டிய காலம் ஒன்று இருந்தது. 1979-ஆம் ஆண்டு LP திரைப்படம் சர்கம் பாடல்கள்(குறிப்பாக டஃப்லிவாலே டஃப்லி பாஜா) மிகவும் பிரபலமாக இருந்தன, சர்கம் திரையிடப்பட்ட திரைப்பட அரங்குகளில் இருந்து ஒரு கோடி ரூபாய் நாணயங்கள் சேகரிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

திரைப்பட நட்சத்திரம் ஜீதேந்திரா ஒருமுறை தான் ஜுஹுவில் நான்கு மாடி வீடு வைத்திருப்பதாகவும், LP அவருடைய தொழில் வாழ்க்கைக்கு செய்த நன்மைகளுக்கு அதில் இரண்டு தளங்களுக்காவது அவர்களுக்கு கடன்பட்டிருப்பதாக கூறுகிறார்.

LP இது போன்ற பல பாராட்டு களை பெற்றனர். 500 படங்களில் 2900-க்கும் மேற்பட்ட பாடல்களை இயற்றிய அவர்கள் பாலிவுட்டில் மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக (1963–1993) உச்சத்தில் இருந்தனர்.

லதா LP-இன் விருப்பமான பாடகியாக இருந்த போதும், அவர்கள் முகமது ரஃபி, கிஷோர் குமார் மற்றும் ஆஷா போஸ்லே ஆகியோருக்கும் மிகச்சிறந்த இசையமைப்பாளர்களாக இருந்தனர். அவர்கள் இசைத் துறைக்கு அதிகளவிலான புதிய பாடகர்களை வழங்கினர்: சுமார் 105 ஆண் மற்றும் 72 பெண் பாடகர்கள் LP மூலம் அறிமுகமானார்கள்.

### பிலிம்பேர் மற்றும் பினாகா கீத்மாலா

தோஸ்தி,1964; மிலன்,1967; ஜீனே கி ராஹ்,1969; அமர் அக்பர் அந்தோணி, 1977; சத்தியம் சிவம் சுந்தரம்,1978; சர்கம்,1979; கார்ஸ்,1980 ஆகிய படங்களுக்காக LP ஃபிலிம்பேரின் சிறந்த இசையமைப்பாளர் விருதை ஏழு முறை வென்றனர்.

அமீன் சயானி தொகுத்து வழங்கிய ரேடியோ சிலோனின் புகழ்பெற்ற வெற்றி அணிவகுப்பு நிகழ்ச்சியான பினாகா கீத்மாலாவில் (1953–1994) இருவரும் ஆதிக்கம்



*ஆஷா போஸ்லேவுடன் லஷ்மிகாந்த்.*

செலுத்தினர், இது இசை பதிவுகளின் விற்பனை மற்றும் கேட்போரின் கோரிக்கைகளின் அடிப்படையில் ஒவ்வொரு வாரமும் இந்தி திரைப்படப் பாடல் களை தரவரிசைப்படுத்தியது.

LP முதன்முதலில் 1963 பரஸ்மானியில் இருந்து ஹன்ஸ்தா ஹுவா நுரானி செஹ்ராவுடன் நிகழ்ச்சியில் நுழைந்தனர். LP தொழில் வாழ்க்கையின் உச்சத்தில், 60களின் நடுப்பகுதி யிலிருந்து 80களின் நடுப்பகுதி வரை, ஒவ்வொரு வாராந்திர நிகழ்ச்சியிலும் பாதிக்கும் மேற்பட்ட பாடல்கள் LPஇன் பாடல்களே. அவர்களின் பாடல்கள் பதினொரு முறை தரவரிசையில் முதலாவது இடத்தை பெற்றுள்ளது. பினாகா கீத்மாலா ஒவ்வொரு ஆண்டும் சிறந்த 32 பாடல்களை ஒரு சிறப்பு நிகழ்ச்சியில் அறிவிப்பார்கள். LP பாடல்கள் இந்தத் தேர்வில் 245 முறை இடம்பெற்றுள்ளது, இது மற்ற இசையமைப்பாளர்களைக் காட்டிலும் அதிகமானது.

### LP கலைப்பயணத்தின் பரிணாமம்

LP இன் கதை குப்பையில் இருந்து கோபுரத்திற்கு சென்றதற்கான சிறந்த உதாரணம். லக்ஷ்மிகாந்த் நவம்பர் 3,1937 அன்று பம்பாயின் விலே பார்லே சேரியில் ஒரு மில் தொழிலாளி மற்றும் செவிலியருக்கு மகனாகப் பிறந்தார். சிறுவயதிலிருந்தே இசையில் மிகுந்த ஆர்வம் கொண்ட அவர், ஹுசைன் அலியிடம் இருந்து மாண்டலின் வாசிக்கக் கற்றுக்கொண்டார். பின்னர், ஹுஸ்ன்லாலிடமிருந்து (ஹுஸ்ன்லால்-பகத்ரம் கூட்டணி) வயலின் வாசிக்கக் கற்றுக்கொண்டார்.

பியாரேலால் செப்டம்பர் 3,1940-இல் பிறந்தார். அவரது தந்தை பண்டிட் ராம்பிரசாத் சர்மா, ஒரு ட்ரம்பெட் கலைஞர், அவருக்கு இசையின் அடிப்படைகளை கற்றுக்கொடுத்தார். 8 வயதில் வயலின் கற்கத் தொடங்கி, தினமும் 8 முதல் 10 மணி நேரம் பயிற்சி செய்தார். அவர் கோவா இசைக்கலைஞர் ஆண்டனி கோன்சால்வ்ஸிடம் இருந்து வயலின் வாசிக்கக் கற்றுக்கொண்டார் – அமர் அக்பர் ஆண்டனி திரைப் படத்தில் மை நேம் இஸ் ஆண்டனி கோன்சால்வ்ஸ் என்ற பாடலின் மூலம் பியாரேலால் அவருக்கு வரலாற்றில் அழியா இடத்தை பெற்றுத்தந்தார்.





Music and Melody - Laxmikant-Pyarelal - Tamil - October 2023.indd 69 9/27/2023 12:51:14 PM

லக்ஷ்மிகாந்த் மற்றும் பியாரேலால் முறையே 15 மற்றும் 12 வயதில் ஒரு கிரிக்கெட் ஆடுகளத்தில் சந்தித்தனர். அவர்கள் சிறந்த நண்பர்களாகி, ஒன்றாகப் போராடி, 35 வருடங்கள் அற்புதமான இசையை வழங்கினர்.

### லதாவின் பங்கு

LP- இன் வெற்றிக் கதைக்குப் பின்னால் மெல்லிசை ராணி லதா மங்கேஷ்கர் ஒரு பெரிய காரணியாக இருந்தார். திரைப்பட நாயகிகள், அவர்களது சகோதரிகள், தாய்மார்கள், அத்தைகள், மாமியார்கள், குழந்தைகள் என பல குரல்களில் இருவருக்காகவும் 712 பாடல்களைப் பாடியுள்ளார். 1967-ஆம் ஆண்டில், தனது சினிமா பயணத்தின் முதல் 25 வருடங்கள் பாடியதில் தனக்குப் பிடித்த பாடல்களின் பட்டியலில் LP இசையமைத்த சதி சாவித்ரி திரைப்படத்தின் ஜீவன் டோர் தும்ஹி சான் பாந்தி பாடலையும் பெயரிட்டார் .

LP-க்காக லதா காபரே பாடல்களைப் பாடினார், வேறு எந்த இசையமைப்பாளரும் முயற்சி செய்யத் துணியாத சாதனை. 1969 இன்டகாமில் ஹெலன் மேல் படமாக்கப்பட்ட அவரது புகழ்பெற்ற பாடல்-ஆ ஜானே ஜா - சூப்பர் ஹிட்டானது. ராஜ் கபூரின் பாபியில் லதா பாடியதற்கு LP தான் காரணம். (1964 சங்கத்திற்கான ராயல்டி கொடுப்பனவுகளில் ஏற்பட்ட விரிசல் காரணமாக லதாவும் ராஜ் கபூரும் பேசாமல் இருந்தனர்).

பம்பாயில் நடந்த ஒரு கச்சேரியில் 12 வயது லக்ஷ்மிகாந்த் மாண்டலின் வாசிப்பதை லதா முதல்முறையாக கேட்டுள்ளார். அதில் மயங்கி, அவரைத் தேடியுள்ளார். பின்னர், அவரும் பியாரேலாலும் மங்கேஷ்கர் குடும்பத்தால் குழந்தைகளுக்காக நடத்தப்படும் சுரேல் பால் கலா கேந்திரா என்ற அகாடமியில் சேர்ந்தனர். சுரேல் சிறுவர்கள் லதாவின் வீட்டில் இரவும் பகலுமாக இருந்து தாளத்தையும், மெல்லிசை யையும் உள்வாங்கினார்கள். ஷங்கர்-ஜெய்கிஷன் மற்றும் இ ராம்சந்திரா போன்ற சிறந்த இசையமைப்பாளர்களிடம் இந்த இரண்டு குழந்தைகளையும் தங்கள் இசைக்குழுவில் ஈடுபடுத்துமாறு லதா வலியுறுத்தினார், அவர்களும் அதை செய்தார்கள். ஆனால் LP குறைந்த ஊதியத்தில் திருப்தி அடையவில்லை. மேற்குலகில் பிரபலமாகிவிட்ட தனது நண்பரான ஜூபின் மேத்தாவைப் பின்பற்றி பியாரேலால் வியன்னாவிற்கு குடிபெயர நினைத்தார். ஆனால் இருவராலும் பாலிவுட்டில் சாதிக்க முடியும் என்று கூறி லக்ஷ்மிகாந்த் அவரின் மனதை மாற்றினார்.

சுதந்திர இசையமைப்பாளராக LP இன் முதல் வெற்றி 1963-ம் ஆண்டு ஆடை நாடகமான பரஸ்மானியில் வந்தது. அத்திரைப்படம் ஒரு இசை வெற்றி. அதன் பல பாடல்கள் இன்றளவும் முனுமுனுக்கப்படுகின்றன - துடிப்பாக, கவர்ச்சியாக, வேகமாக நகரும் ஹன்ஸ்தா ஹுவா நூரானி செஹ்ரா (லதா கமல் பரோட்) மற்றும் வசீகரிக்கும் வோ ஜப் யாத் ஆயே (ரஃபி லதா). லதாவும் ரஃபியும் இலவசமாகப் பாடினர், ஆனால் லதா ரூ.1,001-க்கான காசோலையை குருதக்ஷிணையாக ஏற்றுக்கொண்டார். அடுத்தடுத்த சில சிறு-பட்ஜெட் திரைப் படங்களில், LP லதாவின் கட்டணத்தில் ஒரு பகுதி யையாவது அவர்களது சொந்தப் பாக்கெட்டிலிருந்து செலுத்தினார்கள்.

பரஸ்மானி வெளியான அடுத்த வருடமே இன்னும் வெற்றிகரமான தோஸ்தி வெளியானது. அதே ஆண்டில் ஷங்கர்-ஜெய்கிஷெனின் சங்கம் மற்றும் மதன் மோகனின் வோ கவுன் தி போன்ற சிறந்த பாடங்கள் இருந்தும் சிறந்த இசையமைப்பாளர்களுக்கான பிலிம்பேர் விருதை தோஸ்திக்காக LP வென்றனர்.

பாலிவுட்டில் LP சகாப்தம் தொடங்கியது, அவர்களின் நற்பெயரும் வெற்றியும் உயந்துக் கொண்டே இருந்தது. ஆயே தின் பாஹர் கே (1966) பெரிய நட்சத்திர நடிகர்களுடனான LPயின் முதல் இசை வெற்றியாகும். 1967-ஆம் ஆண்டு LPக்கு சொந்தமானது, அந்த வருடம் பொன்விழாவைக் கொண்டாடிய ஃபார்ஸ், அனிதா, ஷாகிர்த், பத்தர் கே சனம், நைட் இன் லண்டன், ஜால் மற்றும் LP அவர்களின் இரண்டாவது ஃபிலிம்பேர் விருதை வென்ற மிலன் போன்ற தொடர் வெற்றி களை கொண்டிருந்தது.

1969 முதல், LP பாலிவுட்டின் நம்பர் 1 இசையமைப்பாளர்களாக பரவலாக அங்கீகரிக்கப்பட்டு, ஷங்கர்-ஜெய்கிஷனின் இடத்தை பிடித்தனர். திட்டமிடப்பட்ட இசையமைப்பாளர்களை நீக்கி LPக்கு மாறுவதில் முக்கிய திரைப்பட நிறுவனங்கள்



*வயலின் வாசிக்கிறார் ப்யாரேலால்.*



Music and Melody - Laxmikant-Pyarelal - Tamil - October 2023.indd 70 9/27/2023 12:51:15 PM



*லஷ்மிகாந்த்*

ஒன்றுடன் ஒன்று போட்டியிட்டன.

LP விலை குறைப்பு செய்கிறார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டது, அவர்கள் அதை மறுக்கவில்லை. ஒருவர் 10 ரூபாய்க்கு செய்வதை நாங்கள் இரண்டு ரூபாயில் வழங்கினால் என்ன தவறு? நாங்கள் விலையை மட்டுமே குறைக்கிறோம், தரத்தை அல்ல என லக்ஷ்மிகாந்த் கூறியுள்ளார். ஒவ்வொரு வெற்றிப் படத்திலும் தங்கள் கட்டணங்களை உயர்த்தும் எஸ்.ஜே.யின் பழக்கத்தால் பல திரைப்படத் தயாரிப்பாளர்கள் விரக்தியில் இருந்தனர், மேலும் LP ஒரு கவர்ச்சிகரமான மாற்றாக இருப்பதை உணர்ந்தனர்.

LP புயல் 1970-கள் மற்றும் 80களில் அதன் இடைவிடாத தாக்கத்தைத் தொடர்ந்தது, ஆனால் 1990-களில் அது தளர்ந்தது. LP இசையமைத்த பல பெரிய படங்களில் சில: தோ ராஸ்தே, ஜீவன் மிருத்யு, ஹாதி மேரே சாத்தி, ஹம்ஜோலி, மேரா காவ்ன் மேரா தேஷ், ஜிக்ரி தோஸ்த், ஷோர், ரொட்டி கப்டா அவுர் மகான், ஆன் மிலோ சஜ்னா, டாக், பாபி, லோஃபர், கிலோனா, ரொட்டி, சத்யம் சிவம் சுந்தரம், அமர் அக்பர் அந்தோணி, சுஹாக், கர்ஸ், கிராந்தி, பிரேம் ரோக், ஏக் துஜே கே லியே, உத்சவ், ஆக்ரி ராஸ்தா, நாகினா, தேசாப், ராம் லகான், சல்பாஸ், மிஸ்டர் இந்தியா, சவுதாகர், கல்நாயக்.

### LP வெற்றியின் ஆராய்ச்சி

LPக்கு சாமானியர்களுக்கு எது பிடிக்கும் என்பது பற்றிய உள்ளுணர்வு புரிதல் இருந்தது. வயலின், கிட்டார், பாங்கோ, பியானோ, சந்தூர், சித்தார், மாண்டலின், தோலக் மற்றும் தபேலா என பல்வேறு இந்திய மற்றும் மேற்கத்திய இசைக்கருவிகளில் அவர்கள் திறமையானவர்கள். அவர்கள் நாட்டுப்புறம் மற்றும் ஹிந்துஸ்தானி இசை இரண்டிலும் தேர்ச்சி பெற்றவர்கள். பல சிறந்த இசையமைப்பாளர்களுக்கு வாசிப்பாளர்களாகவும், ஏற்பாட்டாளர்களாகவும், உதவியாளர்களாகவும் 10 ஆண்டுகள் இருந்த அவர்களது அனுபவம் சமமற்றது. பின்னர், அவர்கள் நிகரற்ற லதாவால் வலுவாக ஆதரிக்கப்பட்டனர். கிளாசிக்கல், ஃபோக், கவ்வாலி, முஜ்ரா, லோரி, பஜன், கஜல், மேற்கத்திய இசை என ஒவ்வொரு வகையிலும் நூற்றுக்கணக்கான மெல்லிசைப் பாடல்களை அவர்கள் இயற்றியதில் ஆச்சரியமில்லை.

**நினைவுக்கு வரும் சில பிரபலமான LP பாடல்கள் இங்கே:**

சாஹுங்கா மெயின் துஜே சஞ்ச் சவேரே - ரஃபி, தோஸ்தி, 1964. மேரே மெஹ்பூப் கயாமத் ஹோகி - கிஷோர், மிஸ்டர் எக்ஸ் இன் பாம்பே,1964.

தில் வில் பியார் வியார் - லதா, ஷாகிர்த், 1967. LP அடிக்கடி லதாவுக்கு குறும்புத்தனமான காதல் பாடல்களை வழங்கினர், அதை அவர் ஆர்வத்துடன் பாடினார்! அச்சா தோ ஹம் சால்தே ஹைன் - லதா கிஷோர், ஆன் மிலோ சஜ்னா,1970. ஹம் தும் ஏக் கம்ரே மேன் பந்த் ஹோ - லதா ஷைலேந்திர சிங், பாபி, 1973. மை நேம் இஸ் ஆண்டனி கோன்சால்வ்ஸ் - அமர் அக்பர் ஆண்டனி, 1977.

காத்தே நஹி காத் தே -



*ராஜ்கபூருடன் லஷ்மிகாந்த் ப்யாரேலால்.*



Music and Melody - Laxmikant-Pyarelal - Tamil - October 2023.indd 71 9/27/2023 12:51:15 PM



*மஜ்ரூ சுல்தான்பூரியுடன்.*

கிஷோர் அலிஷா செனாய், மிஸ்டர் இந்தியா, 1987. மேன் கியோன் பெஹ்கா - லதா ஆஷா, உத்சவ்,1984. மெயின் தெரி துஷ்மன் - லதா, நாகினா, 1986. சோலி கே பீச்சே க்யா ஹை -அல்கா யாக்னிக் இலா அருண், கல்நாயக்,1993. மாதுரி தீட்சித் மற்றும் நீனா குப்தா மீது படமாக்கப்பட்ட இந்த மின்சார LP பாடல் தேசிய அளவில் சர்ச்சையைத் தூண்டியது. காரணம்: அதன் முதல் வரியில் இருந்த மறைமுக காமம்! ஆனால் அது அல்கா யாக்னிக் மற்றும் இலா அருண் ஆகியோரை பிரபலமாக்கியது. அப்பாடலின் கேசட்டுகள் லட்சக்கணக்கில் விற்பனையானது.

**LP மேற்கோள்கள் மற்றும் நிகழ்வுகள்**

பாலிவுட் மற்றும் இசைத் துறையில் LP பற்றிய கதைகள் ஏராளம்- லக்ஷ்மிகாந்தின் உள்ளார்ந்த நற்குணம் மற்றும் இசையமைப்பாளராக அவரது திறமைகள்; மற்றும் இசைக் கருவிகள் மற்றும் மேற்கத்திய இசையுடனான பியாரேலாலின் அற்புதம்.

தனது தந்தை இறந்தபோது லட்சுமிகாந்த் அவரை சந்தித்து ரூ.20,000 கொடுத்ததாக நிதின் முகேஷ் கூறியுள்ளார். “எனக்கு பணம் வேண்டாம், உங்கள் பாடல்கள் வேண்டும் என்று கூறினேன். ஆனால் லக்ஷ்மிகாந்த், “என் மகன் டிக்கு மீது சத்தியமாக, நான் உங்களுக்குக் கொடுக்கும் பணம் உங்கள் தந்தையிடம் நான் கடன் வாங்கியது’’ என உறுதியுடன் கூறினார்.’’அவர் ஒரு கனினியை போன்றவர், ஒரு உயிர் வாழும் பீத்தோவன்’’ என நிதின் பியாரேலாலைப் பற்றி கூறினார்.

பின்னணிப் பாடகரும் இசையமைப்பாளருமான ஹிமேஷ் ரேஷமய்யா, LP பல்துறை திறனை மற்றொரு நிலைக்கு கொண்டு சென்றனர். அவர்கள் இசையமைக்காத திரைப்பட வகைகள் இல்லை, அவர்களின் தனித்துவமான மெல்லிசையுடன் அவர்கள் தொடாத பாடல் வகைகளும் இல்லை. காலத்திற்கேற்ப மாறியதால் தான் இத்தனை காலம் அவர்களின் தொழில்துறையை ஆண்டார்கள் என கூறினார்.

பின்னணிப் பாடகி கவிதா சுப்ரமணியம் தனது கணவரும் வயலின் கலைஞருமான டாக்டர் L சுப்ரமணியம், மேற்கத்திய பாரம்பரிய இசையின் நுணுக்கங்களை ஒருமுறை பியாரேலாலுடன் மணிக்கணக்கில் விவாதித்ததாக கூறுகிறார். டாக்டர் சுப்ரமணியம் கவிதாவிடம்,இந்த மேதை இங்கே என்ன செய்கிறார்? அவர் மேற்கில் இருக்க வேண்டியவர். இத்தகைய சிம்பொனிகளை அங்கு கூட யாராலும் இசையமைக்க முடியாது’’ என கூறியுள்ளார்.

லக்ஷ்மிகாந்த் ஒரு பாடலை 10–15 முறை பாடி, அதே வழியில் பாடச்சொல்வர் என LPயின் இசையமைக்கும் பாணியைப் பற்றி கவிதா கூறுகிறார். “அவர் எல்லா பாடகர்கள் மீதும் மிகுந்த பாசம் வைத்திருந்தார், மேலும் “நீங்கள் தான் என் இராணுவம்’’ என்று கூறுவார்.’’

லக்ஷ்மி-பியாரேலால் பிணைப்பு அற்புதமானது என்று அவர் கூறுகிறார்- சில சமயங்களில் அவர்களின் எண்ணங்கள் ஒரே



*ப்யாரேலால், லஷ்மிகாந்த், லதா மங்கேஷ்கர், முகமது ரஃபி மற்றும் J ஓம்ப்ரகாஷ்.*



Music and Melody - Laxmikant-Pyarelal - Tamil - October 2023.indd 72 9/27/2023 12:51:16 PM

மாதிரியாக இருந்தன. குதா கவா படத்திற்காக அவர் ஒரு பாடலைப் பதிவுசெய்து கொண்டிருந்தபோது, லக்ஷ்மிகாந்த் அவரிடம் 'இந்த அந்தராவுக்குப் பிறகு, நீங்கள் ஒரு ஆலாப் பாட வேண்டும், நான் பியாரேவிடம் சொல்கிறேன்' என்று கூறினார். "அந்த நிமிடமே, பியாரேலால் உள்ளே நுழைந்து, 'கவிதா பாடுவதற்கு ஒரு ஆலாப் யோசித்திருக்கிறேன்' என்று கூறினார். இது விசித்திரமாக இருந்தது."

100 பேர் கொண்ட ஆர்கெஸ்ட்ராவில், ஒரு கருவி அல்லது வாசிப்பாளர் ராகம் தவறி வாசித்தால், பியாரேலால் உடனடியாக சுட்டிக்காட்ட முடியும் என்று லதா கூறியிருக்கிறார்.



*லஷ்மிகாந்த்,* R D *பர்மன், ஆனந்த்ஜீ மற்றும் ப்யாரேலால்.*

இசையமைப்பாளர் அனு மாலிக் கூறுகையில், தரம் மற்றும் அளவு, இரண்டும் மிகுந்த LPயின் ஒட்டுமொத்த இசையை பற்றி விவாதிக்க இயலாது. நான் ஷங்கர்-ஜெய்கிஷன் மற்றும் RD பர்மன் இசையில் வளர்ந்தேன், ஆனால் என்னை நிமிர்ந்து பார்க்க வைத்தது பாபியின் இசை. சில பாடல்களால் மட்டுமே முஜே குச் கெஹ்னா ஹை அல்லது ஹம் தும் ஏக் கம்ரே மே பந்த் ஹோவை மிஞ்சமுடியும் என்று நினைக்கிறேன்.

ஆயே தின் பஹர் கேயில் இருந்து சுனோ சஜ்னாவை லதாஜி பதிவு செய்யும் போது ஆனந்த் பக்ஷி என்ன நினைத்துக் கொண்டிருந்தார் என்று கேட்டது எனக்கு நினைவிருக்கிறது. அதற்கு அவர் "ஒன்றுமில்லை. என் கன்னங்களில் கண்ணீர் மட்டும் உருண்டோடியது" என பதிலளித்தார். அவர்களின் பாடல்கள் அவ்விதமே உங்களைப் பாதிக்கும்.



பியரேலால் என் மகனாக இருக்கும் அளவுக்கு இளமையானவர், ஆனால் அவரிடமிருந்து நான் கற்றுக்கொள்ள நிறைய இருக்கிறது. அவருக்கு ஒவ்வொரு வாத்தியமும் அத்துப்படியாக தெரியும். இசை பற்றியும் அதிகம் தெரியும். இன்றைய இசையமைப்பாளர்களுக்கு அவரால் ஒரு இசைப் பள்ளியைத் திறக்க முடியும் என்று நான் நினைக்கிறேன் என்று மன்னா டே குறிப்பிடுகிறார்.

லக்ஷ்மிகாந்த் 1998-இல் சிறுநீரகக் கோளாறு காரணமாக காலமானார். இப்போது 82 வயதாகும் பியாரேலால், பாலிவுட்டின் மிகச் சிறந்த மற்றும் வெற்றிகரமான இசைக் கூட்டணியை பார்வையாளர்களுக்கு நினைவூட்டும் வகையில், தொலைக்காட்சி நிகழ்ச்சியில் அவ்வப்போது தோன்றுகிறார்.

**குறிப்பு:** லக்ஷ்மிகாந்த்–பியாரேலாலின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய ராஜீவ் விஜயகருக்கு ஆசிரியர் நன்றி தெரிவிக்க விரும்புகிறார்.

எழுத்தாளர் மூத்த பத்திரிகையாளர் மற்றும் RC மெட்ராஸ் சவுத் உறுப்பினர்



Music and Melody - Laxmikant-Pyarelal - Tamil - October 2023.indd 73 9/27/2023 12:51:16 PM



சந்தியா ராவ்

# அன்பு இல்லாத ஆசிரியர்

*எல்லா ஆசிரியர்களும் சிட்னி போய்ட்டியர் நடித்த கதாபாத்திரம் போல வெளிச்சம் கொடுத்து, வழிக் காட்டினால்...*

சிட்னி போய்ட்டியர் 1967ஆம் ஆண்டு டு சர் வித் லவ் என்ற திரைப்படத்தில் நடித்திருந்தார், அதில் அவர் லண்டனின் ஈஸ்ட் எண்ட் பகுதியின் பள்ளி ஒன்றில் அட்டகாசம் செய்யும் மாணவர்களைக் கையாளும் ஆசிரியராக நடித்தார். இது 1959-ல் அதே பெயரில் வெளியிடப்பட்ட E R பிரைத்வெய்ட்டின் சுயசரிதை நாவலை அடிப்படையாகக் கொண்டது. அந்த ஆசிரியர் ஒரு சிறந்த முன்னோடியாக திகழ்ந்து, சவால்களை எதிர்கொண்டவர். எந்த நேரத்திலும், எந்த வயதிலும், மாணவர்கள் யாராக இருந்தாலும், ஒரு சிறந்த ஆசிரியர் அவர்களுக்கு உலகத்தை காண்பிக்கும் ஜன்னலாக இருப்பார்கள். மக்கள் பொதுவாக ஆசிரியர்களை இனிமையாக நினைவுகூருவார்கள், இருப்பினும் பலருக்கு இதுபோன்ற இனிமையான நினைவுகள் கிடைக்காமல் போகும். இருப்பினும், முன்னாள் குடியரசுத் தலைவரும், சிறந்த அறிஞருமான சர்வபள்ளி ராதாகிருஷ்ணனின் பிறந்த நாளான செப்டம்பர் 5-ம் தேதி இந்தியாவில் ஆசிரியர் தினமாகக் கொண்டாடப்படுவது வழக்கம்.

ஆசிரியர் தினத்திற்கு பத்து நாட்களுக்கு முன்பு, உ.பி., முசாஃபர்நகரில் உள்ள பள்ளி ஒன்றில், பெருக்கல் அட்டவணையைக் கற்றுக்கொள்ளாத ஏழு வயது முஸ்லீம் சிறுவனுக்கு, அவனது ஆசிரியரான திரிப்தா தியாகி வினோதமான தண்டனையை வழங்கினார். அவனுடைய வகுப்பில் உள்ள எல்லாப் பிள்ளைகளையும் (6 முதல் 8 வயதுடையவர்கள்) வரிசையாக நிறுத்தி, ஒவ்வொருவராக, அவனைக் கடுமையாக அறைய வைத்தார். ஆசிரியர்களின் தவறான நடத்தைக்கு இது முதலாவதோ அல்லது கடைசி நிகழ்வோ அல்ல, இது போன்ற சில சம்பவங்கள் மட்டுமே ஊடகங்களில் தெரிவிக்கப்படுகின்றன. உடல் ரீதியான தண்டனை சட்ட விரோதமானது மற்றும் பாகுபாடு ஏற்றுக்கொள்ள முடியாதது என்பதை நாம் அறிவோம். ஆனாலும், இவையெல்லாம் நாம் தலைகுனியும் வகையில் இன்னும் நடக்கின்றன. அதைவிட வெட்கக்கேடானது அந்த ஆசிரியரின் நடத்தை. தன் சக மாணவனுக்கு எதிராக வன்முறையில் ஈடுபடும்படி அந்த குழந்தைகளை உத்தரவிட்டிருக்கிறார். ஆசிரியர்கள் முன்னுதாரணமாக வழிநடத்த வேண்டும். ஆனால், இந்த ஆசிரியர் வெறுப்பை மட்டுமே கற்பித்திருக்கிறார். அவர் அதிகம் புத்தகங்களை படிக்காதவர் என்று நினைக்கிறேன். கல்வி என்பது புத்தகங்கள் மற்றும் வாசிப்பு பற்றியது, அதை தான் வேர்ட்ஸ் வொர்ல்ட் தனது வாசகர் களுக்கு கற்பிக்க முயற்சிக்கிறது. மேலும், குறைந்த சலுகை பெற்றவர்களுக்குக் கல்வி கிடைக்கச் செய்வதில் ரோட்டேரியர்கள் அர்ப்பணிப்புடன் பணிபுரிய இது ஆர்வத்தை தூண்டும்.




இதற்கும் புத்தகங்களுக்கும் என்ன சம்பந்தம்? நிறைய இருக்கிறது. வெவ்வேறு நபர்களைப் பற்றி படிப்பது, உலகம் மற்றும் அதன் குடிமக்கள் பற்றிய உண்மையான புரிதலை நமக்கு வழங்கும். தயா பவாரால் மராத்தியில் முதலில் எழுதப்பட்டு, ஜெர்ரி பின்டோவால் ஆங்கிலத்தில் மொழிமாற்றம் செய்யப்பட்ட 'பலுடா' அப்படிப்பட்ட ஒரு புத்தகம். 'சாதி அமைப்பின் பரவலான கொடுமையை சித்தரிப்ப தோடு மட்டுமல்லாமல், தயா பவார் தன்னைப் பற்றியும், தனது குடும்பம், தனது சமூகம் மற்றும் அவரது காலத்தின் தலித் அரசியல் பற்றி வெளிப்படையாக எழுதிய அந்த புத்தகம் 1978-ல் முதன்முதலில் வெளியிடப்பட்ட போது ஒரு பரபரப்பை ஏற்படுத்தியது.

எழுத்தாளர் சாந்தா கோகலே, புத்தகத்தின் முன்னுரையில், தான் "முற்போக்கு பிராமணராக" சாதியை மறுத்து வளர்க்கப்பட்டவர் என்று எழுது கிறார். தயா பவார் மஹர் குலத்தில் பிறந்தவர். "மஹராக இருப்பது என்றால் என்ன என்பது பற்றிய அவமானகரமான விவரங்கள் அனைத்தையும் நான் அறியாமல் இருந்தேன். மஹர்கள் இறந்த கால்நடைகளின் தோலை உரித்து அதன் சதையை உண்பார்கள் என்பது எனக்குத் தெரியாது. கிராமப் பள்ளிகளில் மஹர் குழந்தைகளையும் மேல் சாதி குழந்தைகளையும் பிரித்து உட்கார வைபார்கள் என்பதும் எனக்குத் தெரியாது. அவர்களின் தொடுதல் தண்ணீரை மாசுபடுத்தும் என்பதையும், உயர் சாதியினருக்கு அதை குடிக்க முடியாததாக மாற்றும் என்பதையும் நான் அறிந்திருக்கவில்லை.

"பலுடா" இந்த உலகத்தை, எளிமையான மொழியில், வெளிப்படையாக, எனக்கு காண்பித்தது. தயா பவாரின் உலகத்தை இந்திய சமுதாய யதார்த்தத்தின் ஒரு பகுதியாக நான் பார்க்க வேண்டியிருந்தது. அது என்னை அவமானத்தால் தலைகுனியச் செய்தது என்று கோகலே கூறுகிறார்.

"...இந்தியராக இருப்பதன் யதார்த்தம்': இது நம் மனசாட்சி யையும் உணர்வையும் தட்டி எழுப்ப வேண்டிய சொற்றொடர். உயர்ந்து பிரகாசிக்கும் இந்தியா மற்றும் G20 கூட்டத்தின் போது மட்டுமே தலைநகர் சுத்தம் செய்யப்படுவது போன்ற அனைத்து கூற்றுகள் வேறு கதைகளை




The reality of being Indian - Tamil - October 2023.indd 74 9/26/2023 1:13:03 PM

சொன்னாலும் நாம் 'இந்தியனாக இருப்பதன் யதார்த்தத்தை' எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். பலுடா என்ற சொல், மஹர்களை கிராமத்திலிருந்து பிரித்து வைத்த ஒரு நடைமுறையிலிருந்து பெறப்பட்டது. கிராமங்களில் இறுதிச் சடங்கு அறிவிப்புகளை வெளியிடுவது, விலங்குகளின் சடலங்களை எடுத்துச் செல்வது, விலங்குகளைப் பராமரிப்பது, திருவிழாக்கள் மற்றும் திருமணங்களில் இரவு பகலாக இசை வாசிப்பது போன்ற கிராமத்திற்குச் செய்யும் சேவைகளுக்கு ஈடாக அவர்கள் விளைச்சலில் ஒரு பங்கைப் பெற்றனர்.

பள்ளி தொடர்பான பலுடாவின் ஒரு சிறு பகுதி இதோ: ''கிராமத்தைச் சேர்ந்த மராட்டிய குழந்தைகளுடன் நாங்கள் உட்கார அனுமதிக்கப்படவில்லை. அவர்கள் ஆசிரியரை எதிர்கொண்டு அமர்ந்திருக்க, நாங்கள் அவர்களுக்கு நேர்கோணத்தில், வேறு திசையில் பார்த்தவாறு அமர்ந்திருந்தோம். எங்களுக்கு தாகம் எடுத்தால் பள்ளியில் தண்ணீர் கொடுக்கப்படாது; நாங்கள் மீண்டும் மஹர்வாடாவுக்குச் சென்றே குடிக்க வேண்டியிருந்தது.'' மேலும் அங்கிருந்த ஆசிரியரைப் பற்றி: ''அவர் பள்ளியில் இருக்கும் போது, அவர் சாதியின் அடிப்படையில் பாகுபாடு காட்டினார் என்ற உணர்வு எங்களுக்கு வரவில்லை. ஆனால் நாங்கள் அவருடைய வீட்டிற்குச் சென்றபோது, அவரிடம் ஒரு தீவிரமான மாற்றத்தை கண்டோம். அவர் ஆச்சாரத்தின் படி ''தூய்மையானவர்'' ஆனார். நாங்கள் அவர் வாசலைக் கடக்ககூடாது; படிகளில் தான் நிற்க வேண்டும். ஒரு விரல் கூட நம்மை தொடாத வகையில் பொருட்கள் வழங்கப்படும். பள்ளியில் எங்களுக்குத் தெரிந்த ஆசிரியர், அவரது வீட்டில் வேறொருவராக தெரிந்தார். ஜாதி உணர்வை கதவின் அருகில் உள்ள ஒரு ஆணியில் தொங்கவிட்டு, அவர் விருப்பப்படி அதை எடுத்து மாட்டிக்கொண்டு வெளியே வருவார் என்பது போல் இருந்தது.' எழுத்து தெளிவாகவும், அணுகக்கூடியதாகவும் இருக்கிறது, சில சமயங்களில் வேடிக்கையான முரண்பாடாகவும் இருக்கிறது. ஆனால், காலம் கடந்தாலும், இன்னும் எவ்வளவு மாறாமல் இருக்கிறது என்பதை நீங்கள் படிக்கும்போது புரிந்துகொள்வீர்கள்.

எப்போதும் நடப்பது போல், பல புத்தகங்கள் என் வழியில் வரும், அதில் ஒன்று தற்செயலாகவும் மற்றொன்று எனது புத்தகக் கழகத்தின் மாதத் தேர்வாகவும் வந்தது. முதலாவது, ஹரிணி நாகேந்திரா எழுதிய பெங்களூரை கதைக்களமாக கொண்ட தி பெங்களூர் டிடெக்டிவ் கிளப் என்று அழைக்கப்படும் ஒரு இலகுவான, ஈர்க்கக்கூடிய துப்பறியும் நாவல். சுதந்திரத்திற்கு முந்திய காலகட்டங்களில் அமைக்கப்பட்டு, வித்தியாசமான யோசனைகளை கொண்ட ஒரு பாரம்பரிய இளம் பெண்ணை காதாநாயகியாக கொண்ட இந்த இலகுவான புத்தகத்தை பயணம் செய்யும்போது அல்லது அலுவலகத்தில் இருந்த ஓய்வு பெற செல்லும்போது எடுத்துச்செல்லலாம். அத்தியாயங்களுக்கு தலைப்பு வைக்கப்பட்டுள்ள விதம் கூடுதல் ஈர்ப்பு: புடவையில் நீச்சல், ஆண்கள் காபி போடலாம், காணாமல் போன லத்திகள், நிச்சல் குளத்தைச் சுற்றி உரையாடல்கள்!




மற்றொன்று பிரெஞ்சு மயமாக்கப் பட்ட பாண்டிச்சேரியை பற்றியது. தி திண்ணை என்று அழைக்கப்படும் அது அரி கௌடியரால் எழுதப்பட்டது மற்றும் பிளேக் ஸ்மித்தால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் பட்டது. தமிழில் திண்ணை அல்லது வராண்டா என்பது, பொதுவாக, வீட்டில் வசிப்பவர்கள் தங்களுடைய ஓய்வு நேரத்தில் அமர்ந்து, நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் அரட்டை அடித்து காலத்தைக் கழிக்கும் இடம். நாவலில், ஒரு வயதான பிரெஞ்சுக்காரர் நாவலின் கதை சொல்லியின் திண்ணைக்கு வந்து, ஆர்வமுள்ள கதாபாத்திரங்கள் மற்றும் இந்தியாவுடனான பிரான்சின் காலனித்துவ தொடர்புகளின் வரலாற்றை உள்ளடக்கிய ஒரு கதையைப் பகிர்ந்து கொள்கிறார். அதில் பல்வேறு கதாபாத்திரங்களுக்கு வழங்கப்படும் புனைப்பெயர்கள் - ஜோசப் ஒன் அண்ட் ஆஃப் ஐஸ், எமிலி கொழுக்கட்டை-ஹெட், ஜீன்-கிளாட் கவ் ஷிட்-1938-ல் வெளியிடப்பட்ட ராஜா ராவின் முக்கிய படைப்பான கந்தபுரத்தை உங்களுக்கு நினைவூட்டும் (போக்மார்க்குட் சித்தம்மா, போஸ்ட்-ஆபீஸ்-ஹவுஸ் சூர்யநாராயணா, ஃபோர் பீம் ஹவுஸ் சந்திரசேகரய்யா). ஒரு சிறிய தென்னிந்திய கிராமத்தில் காந்திஜியின் தாக்கத்தையும், நிலவும் சாதி அமைப்பை மையமாக வைத்து காந்தபுரா எழுதப்பட்டிருந்தது. கதை சொல்லியின் குரலில் ஒரு சிறு பகுதி, திண்ணையின் உணர்வை உங்களுக்கு அளிக்கும்: 'குருசுக்குப்பத்தில் வாழ்க்கை எங்கள் வீட்டைச் சுற்றியே இருந்தது. பட்டக்கா தன் இட்லி கடையை எங்கள் வீட்டின் எதிரே வைத்திருந்தாள், அது நீரூற்றிலிருந்து சில மீட்டர் தொலைவில் இருந்தது, அக்கம் பக்கத்தில் உள்ள ஒரே கடை பிரதான தெருவில் விளையாட்டு மைதானத்தில் அருகில் இருந்தது. கடையை நடத்தி வந்த காரிகா பாய் என்பவர் மட்டுமே அங்கு இருந்த வெளியூர்காரர். அவரது உண்மையான பெயர் அமானுல்லா மற்றும் அவர் ஒரு மலேசிய-இந்தியர். ஆனால் அக்கம்பக்கத்தில் உள்ளவர்களை போல அவராலும் செல்லப்பெயர் பெறுவதைத் தவிர்க்க முடியவில்லை.' முசாபர்நகர் சம்பவம் மற்றும் இந்த பல்வேறு புத்தகங்கள் அனைத்தும் சமூக அந்தஸ்து, சாதி, கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் வரலாற்றில் நமது இடம் போன்ற பிரச்சினைகளுடன் ஏதோ ஒரு வகையில் இணைக்கப் படுவது தற்செயல் நிகழ்வு அல்ல என்றே எனக்கு தோன்றுகிறது. பெங்களூர் டிடெக்டிவ் கிளப் புத்தகத்திலும் கூட இதை நீங்கள் கண்டுபிடிப்பீர்கள்.

*கட்டுரையாளர் குழந்தைகள் எழுத்தாளர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.*



The reality of being Indian - Tamil - October 2023.indd 75 9/26/2023 1:13:03 PM



# உடற்தகுதியைக் கண்டறிதல்

பரத் — ஷலன் சவூர்

கடந்த மாதம், நல்ல ஆரோக்கியம் நமது அடிப்படை உரிமை என்று பேசினோம். அது உங்கள் உடலின் அமைப்பில் இயல்பாக இருக்கும் ஒன்று. நமது தேசிய அரசியலமைப்பு நமக்குத் தேர்ந்தெடுக்கும் உரிமையை அளித்துள்ளது. துரதிர்ஷ்டவசமாக, இயற்கையும், நம் உடலும் நமக்கு முழுமையான சுதந்திரத்தை வழங்குவதில்லை. எனவே, நமது உடலின் அமைப்பை ஒரு கட்டத்திற்கு அப்பால் சோதிப்பது நல்லதல்ல. எனவே, இந்த உரிமை ஒரு இணைக்கப்பட்ட சுய-பொறுப்புடன் வருகிறது. அது, ஒருபுறம் கட்டுப்பாட்டுடன் இருப்பது - உங்களுக்காக, உங்கள் குடும்பத்திற்காக, உங்கள் பணிக்காக. மறுபுறம் உங்கள் கால்களால் உரிமையை செயல்படுத்துவது. உங்கள் உடற்தகுதி (நோய் எதிர்ப்பு சக்தி, சகிப்புத்தன்மை, வலிமை, ஒவ்வொரு உடல் செயல்பாடு) உங்கள் வாழ்க்கையின் அடித்தளம். அதுவே உங்கள் வாழ்க்கையின் போக்கு மற்றும் சூழ்நிலைகளின் மையமாகும்.

**சரியாக சாப்பிடுங்கள், ஆனால் லேசாக சாப்பிடுங்கள்:** சீரான உணவுடன் தொடங்குங்கள். உங்கள் வயிறு உங்கள் முஷ்டியின் அளவுதான் இருக்கும். அதன் வைப்பை விட அதிகமாகவே அது ஜீரணிக்கும். மீதமுள்ள அதிகப் படியை உங்கள் உடலின் மற்ற பகுதிகளுக்கு அனுப்பும். இன்னொரு கைப்பிடி சாப்பிட விரையாதீர்கள். “வயிறு நிரம்பிவிட்டது” என்று மூளைக்கு சமிக்ஞை செய்ய வயிற்றுக்கு சுமார் 20 நிமிடங்கள் ஆகும். இந்த சூழலில், பசி மற்றும் சுவைக்காக உண்பதை வேறுபடுத்துவோம். பசி தேவை, சுவை ஆசை.

ஒவ்வொரு நாளும் குறைந்தது இரண்டு லிட்டர் தண்ணீர்/திரவம் குடிக்கவும். அவை உங்கள் உடலில் 70–80 சதவீதத்தைக் கொண்டிருக்கின்றன, எனவே பரஸ்பர மாற்றீடு அதற்கு தேவைப்படுகிறது. உடற்பயிற்சி தவிர, ஒவ்வொரு உடல் முயற்சியும் திரவத்தை உட்கொள்கிறது, கொழுப்பை அல்ல. இயற்கை, மனிதன் தான் வேட்டையாடிய இரையை உண்டு வாழ்வதற்கு ஏற்றார்போல் உடலை பயிற்றுவித்துள்ளது. நமது உணவுமுறைகள் மாறிவிட்டன ஆனால் நமது உடலின் இயற்கை செயல்முறை மாறவில்லை. இதில் உணவுக் கட்டுப்பாடும் அடங்கும். கடந்த 30 ஆண்டுகளாக, நாம் அருந்தி வந்த அதே பாரம்பரிய உணவை நாம் இன்றும் தொடர்கிறோம். ஆனால் ஒரு பெரிய வித்தியாசத்துடன் - இப்போது நம் உணவு எண்ணெய் இல்லாமல் செய்யப்படுகிறது. நாம் உணவில் கவனம் செலுத்துகிறோம், ஏனென்றால் அது நம் வாழ்வின் ஒவ்வொரு படியிலும் முக்கிய பங்காற்றுகிறது.

**உடற்தகுதி நெகிழ்வுத்தன்மை:** 30 வயதிற்குப் பிறகு, ஒவ்வொரு 10 வருடங்களுக்கும் தசையில் மூன்று முதல் எட்டு சதவீதத்தை ஒருவர் இழக்கிறார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். 60 வயதிற்குப் பிறகு தசை சிதைவு மேலும் துரிதப் படுகிறது. இது எலும்பு முறிவுகள் மற்றும் ஆஸ்டியோபோரோசிஸ் ஆகியவற்றிற்கு அடித்தளமாகிறது. மேலும், ஆக்ஸிஜனை எடுத்து ஆற்றலாக மாற்றும் நுரையீரல் மற்றும்



Figuring Fitness - Tamil - October 2023.indd 76 9/27/2023 1:21:40 PM

## இந்திய ஆண்களுக்கான எடை விளக்கப்படம்

| மணிக்கட்டு சுற்றளவு | | Below 13.5 cm (6.5 inches) | 16.6–17.7 cm (6.5 – 7 inches) | 17.8+ cm (7+ inches) |
|---|---|---|---|---|
| உயரம் | | Small frame | Medium frame | Large frame |
| Ft | in | Kg | Kg | Kg |
| 5 | 5 | 51 | 57 | 63 |
| 5 | 6 | 52 | 59 | 65 |
| 5 | 7 | 54 | 61 | 67 |
| 5 | 8 | 56 | 62 | 69 |
| 5 | 9 | 57 | 64 | 71 |
| 5 | 10 | 59 | 66 | 73 |
| 5 | 11 | 61 | 68 | 75 |
| 6 | 0 | 63 | 70 | 77 |

மூளையின் திறனும் குறைகிறது. எனவே, நீங்கள் சில ஏரோபிக் செயல்பாடுகள் (நடைபயிற்சி, ஜாகிங், சைக்கிள் ஓட்டுதல், நீச்சல்) மற்றும் அறிவியலால் பரிந்துரைக்கப் பட்ட எடை பயிற்சியை மேற்கொள்ள நேரம் நெருங்கிவிட்டது.

தசைகள் மற்றும் இருதய அமைப்பு சம்பந்தப்பட்ட அறிவியல் பயிற்சி கள் இந்தப் பகுதிகளில் எதிர்கால அபாயங்களிலிருந்து பாதுகாக்கும் சில காப்பீடுகளாகும். அதேபோல உங்கள் நிலைத்தன்மையில் நடுக்கம் இருந்தால், ஒற்றைக் காலில் நிற்பது போன்ற சமநிலையை அதிகரிக்கும் பயிற்சிகளை செய்யுங்கள் (நீங்கள் சிறுவயதில் விளையாடிய நொண்டி யாட்டம் நினைவில் இருக்கிறதா?) நீங்கள் நெகிழ்வுத் தன்மையை விரும்பினால், யோகா அல்லது டாய் சி (தகுதி சான்றிதழ் பெற்ற நிபுணருடன்) முயற்சிக்கவும். இந்தச் சூழலுக்குத்தான் அறிவியல் என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறோம். சரியான வழிகாட்டுதல் இல்லாமல் ஒரு உடற்பயிற்சியைப் பின்பற்றுவது நல்லதை விட தீங்கினை தான் விளைவிக்கும். அறிவுறுத்தப்படாமல் யோகாவில் இறங்கிய பல சீனர்கள் ஒரே நேரத்தில் முதுகுவலிக்கு ஆளானதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

**நல்ல ஆரோக்கியம்:** வெளிப்படை யாகச் சொன்னால், எடை என்பது ஆரோக்கியத்தின் ஒரே அறிகுறி அல்ல. இந்த விஷயத்தில் ஆழ்ந்து மூழ்கியது, நம்மை பாட்டியாலாவில் உள்ள இந்தியன் இன்ஸ்டிட்டியூட் ஆப் ஸ்போர்ட்ஸுக்கு அழைத்துச் சென்றது. இது உடல் ஆரோக்கியம் மற்றும் உடற் தகுதிக்கான 'தங்கத் தரமாக' இருக்கிறது. இதுவே எங்கள் புத்தகம் மற்றும் திட்டமான ஃபிட்னஸ் பார் லைப் இன் குறிக்கோள். முக்கிய புள்ளி விவரங்கள் சேர்த்து வெளியிடப்பட்டுள்ளன.

நம்மில் பெரும்பாலானவர்கள் தொழில்முறை விளையாட்டு வீரர்கள் அல்ல. எனவே, உங்கள் ஒப்புதலுடன், முதலில் அதிக அளவிலான உடற்தகுதியை இலக்காகக் கொள்வோம், பின்னர் அதில் விவேகமான சலுகைகள் மற்றும் சமரசங்களை செய்வோம். விளையாட்டு வீரர்கள் அல்லாத மற்றும் 30 வயதுக்கு மேற்பட்டவர் களுக்காக கூடுதலாக ஐந்து கிலோ எடையை அனுமதிக்கலாம். அதற்கு மேல் அனுமதித்தால் அவை ஆரோக்கியமற்றதாகவே இருக்கும்.

42 சதவீத அமெரிக்கர்கள் பருமனாகவும், அவர்களில் 30.7 சதவீதம் பேர் அதிக எடை கொண்டவர்களாகவும் இருப்பதாக ஒரு கணக்கெடுப்பு தெரிவிக்கிறது. நமது இந்தியாவில் 13.5 கோடி பேர் அதிக எடையுடன் இருப்பதாக ஒரு ஆய்வு கூறுகிறது. உலகளாவிய முதல் ஐந்து பொருளாதாரங்களில் உள்ள ஒரு தேசத்திற்கு இது ஒரு கவலைக்கிடமான சிந்தனை.

எனவே, அபிலாஷைகள் ஆரோக்கியமான வியர்வையுடன் சேர்ந்து இருக்க வேண்டும். நீங்கள் மேலே பார்க்கும்போது, சற்று கீழேயும் பாருங்கள் - உங்கள் எடை இயந்திரத்தை. அது முடிவு செய்யட்டும்.உங்கள் வாழ்க்கை சமநிலையில் உள்ளது, அதை கட்டிக் காப்பது உங்கள் கடமை.

கட்டுரை ஆசிரியர்கள் இருவரும் Fitness for Life மற்றும் Simply Spritiual — You Are Naturally Divine என்ற ஆங்கில நூல்களின் எழுத்தாளர்கள்.

## இந்திய பெண்களுக்கான எடை விளக்கப்படம்

| மணிக்கட்டு சுற்றளவு | | Below 13.9 cm (5.5 inches) | 14 –16.4 cm (5.5 – 6.5 inches) | 16.5+ cm (6.5+ inches) |
|---|---|---|---|---|
| உயரம் | | Small frame | Medium frame | Large frame |
| Ft | in | Kg | Kg | Kg |
| 5 | | 43 | 48 | 53 |
| 5 | 1 | 44 | 49 | 54 |
| 5 | 2 | 45 | 50 | 56 |
| 5 | 3 | 47 | 52 | 58 |
| 5 | 4 | 48 | 54 | 60 |
| 5 | 5 | 50 | 56 | 62 |
| 5 | 6 | 51 | 58 | 63 |
| 5 | 7 | 53 | 60 | 65 |
| 5 | 8 | 55 | 62 | 67 |



Figuring Fitness - Tamil - October 2023.indd 77 9/27/2023 1:21:40 PM

## RC மனோரா பட்டுக்கோட்டை — RID 2981



பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனையில் 40 TB நோயாளிகளுக்கு ஊட்டச் சத்து அளிக்கும் மளிகைப் பொருட்கள் வழங்கப் பட்டன. இந்தத் திட்டத்துக்கென, சங்க உறுப்பினர் சங்கர் ரூ.25,000 நன்கொடையளித்தார்.

## RC நாக்பூர் விஷன் — RID 3030



RC பிளாஸ்டோ வழங்கிய CSR நிதி உதவியுடன், புடிபொரி அருகிலுள்ள வாடெகாட் கிராமத்தில் பத்து கழிப்பறைகள் நிறுவப்பட்டன.

## RC தலைவாசல் — RID 2982



தலைவாசல் முதன்மை நல மையத்தில் ரூ.96,000 செலவில் RO நீர் தூய்மைப் படுத்தி அமைப்பு நிறுவப்பட்டது.

## RC பர்வானி சிட்டி — RID 3040



சங்கத் தலைவர் அர்பித் லாட் வழிநடத்திய ரத்த தான முகாமில் 30க்கும் மேற்பட்ட பெண்கள் ரத்த தானம் செய்தனர்.

## RC பில்குவா சிட்டி — RID 3012




இரத்த சோகையிலிருந்து கர்ப்பிணிப் பெண்களைப் பாதுகாக்கும் இரும்பு சத்து நிறைந்த உணவு பொருட்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டன.

## RC காஸ்மோபாலிட்டன் அகமதாபாத் — RID 3055



அங்கன்வாடிகளுக்கு 75 நவீன தொலைக் காட்சிகள் கொடையளிக்கப் பட்டன. இந்த நிகழ்ச்சிகளில் ஒன்றில், 150 குழந்தைகளுக்குப் பள்ளிப்பைகள், வாட்டர் பாட்டில்கள் வழங்கப்பட்டன.



Club HOP - Tamil - October 2023.indd 78 9/26/2023 5:24:05 PM

# செய்திகள்

## RC சூரத் ஹஜிரா பே — RID 3060



அப்பா பிராத்மிக் ஷாலா-வில் 100க்கும் மேற்பட்ட குழந்தை களுடைய கல்வித் தேவைகளுக் கெனக் குறிப் பேடுகள், எழுது பொருட்கள் வழங்கப்பட்டன.

## RC பாகபுரானா — RID 3090

காயம் பட்ட, நோய்வாய்ப்பட்ட கால்நடைகளைச் சிகிச்சைக்கு அழைத்துச் செல்வதற்கென கௌ சேவா மருத்துவ மனைக்கு ரூ.4.05 லட்சம் மதிப்புள்ள மருத்துவ உதவி வண்டி கொடையளிக்கப்பட்டது.



## RC ஹோஷியார்பூர் மிட் டவுன் — RID 3070



சௌன்னி கலான் அரசு நடுநிலைப் பள்ளியில் 100க்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடப்பட்டன, மாணவர் களுக்குக் குறிப்பேடுகள், பேனாக்கள் வழங்கப்பட்டன.

## RC மொராடாபாத் — RID 3100

பெண்களுக்கான மருத்துவ முகாம் ஒன்றில் 200க்கும் மேற்பட்ட சிறுமியர், பெண்களுக்குப் புற்றுநோய், தொடர்புள்ள பிற நோய்களுக்கான பரிசோதனைகள் நடைபெற்றன.



## RC சகரன்பூர் — RID 3080



அரசுத் தொடக்கப் பள்ளி ஒன்றுக்கு 25 மேசை - இருக்கைகள் நன்கொடை அளிக்கப் பட்டன.

## RC பிசௌலி — RID 3110

ரோட்டரி சங்கம் தினேஷ் மது மருத்துவ மனையில், பிசௌலி நகராட்சி தலைவர் அவ்ரார் அகமது முன்னிலையில் மரம் நடும் விழா நடைபெற்றது.





Club HOP - Tamil - October 2023.indd 79 9/26/2023 5:24:08 PM

## RC ஜௌன்பூர் — RID 3120




இப்ராகிமாபாத் அரசுக் கூட்டுப் பள்ளியில் மரக் கன்றுகள் நடப்பட்டன. மாணவர் களுக்குச் சுற்றுச்சூழல் பராமரிப்பு உரை ஒன்றும் நிகழ்த்தப்பட்டது.

## RC குல்பர்கா சன்சிட்டி — RID 3160

சாந்திநிகேதன் பள்ளி மாணவர்கள் சர்க்கஸ் பார்க்க அழைத்துச் செல்லப் பட்டார்கள். அவர்களுக்கு எழுதுபொருட்கள், நொறுக்குத் தீனிகள் வழங்கப்பட்டன.



## RC அகமத்நகர் பிரியதர்சினி — RID 3132



சிநேக ஸ்பர்ஷ் என்னும் ஆதரவற்றோர் இல்லத்தில் உள்ள குழந்தைகளுக்கு ரதன் டாடா, நாராயண மூர்த்தி, மகாத்மா காந்தி போன்ற சாதனையாளர் களைப் பற்றிய நூல்கள் நன்கொடை வழங்கப்பட்டன.

## RC கார்வார் — RID 3170

இன்ஃபோசிஸுடன் இணைந்து நடைபெற்ற திட்டம் ஒன்றின்கீழ், 20 அரசுத் தொடக்கப் பள்ளிகளுக்கு மின் கற்றலுக்கான கணினிகளை PRID அஷோக் மஹாஜன் வழங்கினார்.



## RC கல்யாண் — RID 3142




கல்யாண் நியூ உயர்நிலைப் பள்ளியில் 90 மாணவர் களுக்கு எழுது பொருட்கள், பள்ளிப் பைகள், வழங்கப்பட்டன.

## RC மைசூர் சவுத் ஈஸ்ட் — RID 3181

சங்கத்தினர் பங்கேற்ற சாலை பாதுகாப்பு விழிப் புணர்ச்சிக்கான மைசூர் முதல் கண்ணூர் வரையிலான மோட்டார் சைக்கிள் பேரணியை DG H R கேசவ் தொடங்கிவைத்தார்.





Club HOP - Tamil - October 2023.indd 80 9/26/2023 5:24:22 PM

# செய்திகள்

## RC ஷோரனூர் — RID 3201



புனித தெரசா பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் சங்கம் நிறுவிய மகாத்மா காந்தி சிலையைத் பாலக்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் S சித்ரா திறந்து வைத்தார்.

## RC மூன்சிட்டி திருவண்ணாமலை — RID 3231



ரூ.1 கோடி மதிப்புள்ள GG திட்டமாகிய, 11 இயந்திரங்களைக் கொண்ட டயாலிசிஸ் மையத்தில் நாள்தோறும் முதலமைச்சர் மருத்துவக் காப்பீட்டுத் திட்ட உதவியுடன் 20 நோயாளிகளுக்கு இலவச சிகிச்சை வழங்கப்படுகிறது.

## RC திரிகர்பூர் — RID 3204



மூத்த குடிமக்களுக்கான மருந்தகம், தொழில் சார்ந்த பயிற்சி மையத்துக்கான இடத்தைக் கொண்ட இரண்டு மாடி ரோட்டரி சமூக மையத்தை IPDG பிரமோத் நாயனார் தொடங்கி வைத்தார்.

## RC பர்ட்வான் சவுத் — RID 3240



தலைவர் சபொர்னா குமார் டே தலைமையில், சங்க உறுப்பினர்கள் ஒரு பள்ளியில் மாணவர்கள் உதவியுடன் மரக் கன்றுகளை நட்டார்கள்.

## RC கொல்லம் ராயல் சிட்டி — RID 3211



PDG ஜான் டேனியல் முன்னிலையில் இரண்டு ஏழைப் பெண்களுக்குத் தையல் இயந்திரங்கள் சங்கம் சார்பாக நன்கொடை அளிக்கப்பட்டன.

## RC பாட்னா சிட்டி சாம்ராட் — RID 3250



டெங்கு-வுக்கு எதிரான மூன்று மாதப் பரப்புரையின் கீழ், பாட்னா முழுவதும் 12 பூச்சிக்கொல்லி தெளிப்பான்கள் செயல்படுத்தப் பட்டன.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்



Club HOP - Tamil - October 2023.indd 81 9/26/2023 5:24:28 PM



**TCA ஸ்ரீனிவாச ராகவன்**

# முடிக்கப் படாத கதைகள்

தீபாவளி நெருங்கி வருவதால், “என் பொருட்களை” சுத்தம் செய்யத் தொடங்குமாறு எனக்கு உத்தரவிடப்பட்டது. என்னிடம் உடைகள், காலணிகள் அல்லது அதுபோன்ற பிற பொருட்கள் மிகவும் குறைவாகவே உள்ளது. ஆனால் என்னிடம் நிறைய புத்தகங்கள் உள்ளன, அவை என் வீட்டில் அதிக இடத்தை ஆக்கிரமித்துள்ளது. அதனால் எனக்கு தேவைப்படாது என்று நினைத்த புத்தகங்களை எடுத்துக் கொள்ளுமாறு என் அண்டை வீட்டாரை அழைத்தேன். இருவர் மட்டுமே வந்தனர். ஒருவர் புத்தக சேகரிப்பாளர் மற்றவர் 12 வயது குழந்தை. எங்கள் குடியிருப்பில் 500-க்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கின்றனர். இது உங்களுக்கு ஒன்றை சொல்கிறது அல்லவா?

உண்மையில், ஐந்து அல்லது ஆறு ஆண்டுகளுக்கு முன்பே இந்த சுத்தம் செய்யும் பணி தொடங்கப்பட்டது. புத்தகங்களுக்கான இடம் அலமாரியில் இல்லாமல் போனதை நான் உணர்ந்தேன். அதனால் நான் அவற்றை கொடுக்க ஆரம்பித்தேன். அதற்கு நான் ஒரு எளிய அளவுகோலைப் பயன்படுத்தினேன்: நான் இந்தப் புத்தகங்களை மீண்டும் படிப்பேனா? நான் படிக்க நினைத்தவற்றைத் தக்கவைத்துக் கொண்டு மற்றவற்றை நண்பர்களுக்கு விநியோகித்தேன்.இந்த வழியில், பெரும்பாலும் புனைகதைகளை கொண்ட சுமார் 150 புத்தகங்களை அப்புறப்படுத்தினேன். ஆனால் அதுவும் போதுமானதாக இல்லை. மேலும் 300 புனைகதை அல்லாத மற்றும் குறிப்புப் புத்தகங்களை எனது கல்லூரிக்கு நன்கொடையாக அளித்தேன்.

எனது மனைவியும், மகன்களும் என்னை மின்னணு புத்தகத்திற்கு மாறுமாறு உக்குவித்தனர். ஆனால் மிகவும் தீவிரமாக முயன்றும் என்னால் அதற்கு மாற முடியவில்லை.

நான் புத்தகங்களை அப்புறப்படுத்தும் போது, நான் பாதி படித்த புத்தகங்கள் பலவற்றைக் கண்டேன். பின்னர், இதைப் பற்றி நான் யோசித்தபோது, இதில் ஒரு சுவாரஸ்யமான பொருளாதார சிக்கல் இருப்பதைக் கண்டேன், அதாவது பாதி புத்தகம் மட்டுமே படித்தால், நான் என் வாழ்நாள் முழுவதும் இரட்டிப்பு விலை செலுத்தியிருக்கிறேன் அல்லவா? இதைப் பற்றி என் பொருளாதார வல்லுனர் நண்பரிடம் கேட்டபோது, இது பிரிவின்மை பிரச்சனை என்று அறியப்படுகிறது என்று அவர் கூறினார். எடுத்துக்காட்டாக, நீங்கள் பாதி கண்டய்னருக்கு பணம் செலுத்த முடியாது. முழுவதற்கும் தான் பணம் செலுத்துகிறீர்கள். அதனால் தான் இறக்குமதியாளர்கள் கண்டய்னர்களைப் பகிர்ந்து கொள்கிறார்கள். உணவு விஷயத்திலும் இதுவே உண்மை. நீங்கள் ஒரு முழு தட்டுக்கு பணம் செலுத்துகிறீர்கள், அதிலிருந்து நீங்கள் எவ்வளவு சாப்பிடுகிறீர்கள் என்பது உங்களுடைய பிரச்சினை. அது உங்களுக்கு அதிகமாக இருப்பதால், விற்பனையாளர் தள்ளுபடி எதுவும் வழங்க மாட்டார். புத்தகங்களுக்கும் அதே கதி தான். அவற்றில் ஒரு பகுதியை நீங்கள் வாங்க முடியாது.

பின்னர் கழிவு பிரச்சனையும் உள்ளது. மக்கள் கழிவுகளைப் பற்றி நிறைய புகார் கூறுகிறார்கள், ஆனால் படிக்காத புத்தகங்களைப் பற்றி அவர்கள் புகார் செய்யமாட்டார்கள். பாதி பீட்சாவை மட்டும் சாப்பிட்டு பாருங்கள், உடனே யாராவது உங்களை திட்டுவார்கள். ஆனால் பாதி படித்த புத்தகங்கள்? திட்டுவதற்கு வாய்ப்பே இல்லை. ஏனென்றால், அதைப்பற்றி யாருக்கும் தெரியாது. இதில தொடர்புடைய முரண்பாடு என்னவென்றால், மக்கள் தங்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்த புத்தகங்களை மகிழ்ச்சியுடன் விட்டுக் கொடுப்பார்கள், ஆனால் தங்களுக்கு மகிழ்ச்சியே அளிக்காத, பாதி படித்த அல்லது முழுமையாகப் படிக்காத புத்தகங்களை தரவே மாட்டார்கள்.

இதைப் பற்றி நான் என் மனைவியிடம் கேட்ட போது, கணவன்மார்களைப் போன்ற சில முட்டாள்தனங்களை சிலருக்கு பிடிக்கும், நீங்கள் விரும்பினாலும் உங்களால் அவற்றை எடுத்துக் கொடுக்கமுடியாது என்று பதிலளித்தார். அது ஒரு புத்திசாலித்தனமான பதில், ஆனால் பழைய புத்தகங்கள், பழைய மனைவிகளைப் போல, எந்நேரமும் நச்சரிப்பதில்லை என்பதை அவருக்கு நினைவூட்டிய பின், என் புதிய புத்தகத்தை நான் படிக்க ஆரம்பித்தேன்.■



LBW - Unfinished stories - Tamil - October 2023.indd 82 9/26/2023 5:44:46 PM

ADVT.

Rotary




CREATE HOPE
in the WORLD






# Family First

## " Family comes first – everything else is secondary"

Family First is a bimonthly event that focuses on all the aspects of a healthy life. Rtn. Sivakumar and Rtn. Savithri, the exemplary couple who are the facilitators of these sessions to educate Rotarians on how to sustain a healthy life style, the nuances of parenting, effective time management and maintaining fulfilling interpersonal relationships.

The Family First initiative, with its two fold approach, has not only helped 2000 plus Rotarians to lead a healthy life but also helped bring about familial harmony.

**IDHAYAM**
PROMISE OF HEALTH AND HAPPINESS

As on
August, 2023
No. of Occurrences
35
No. of Beneficiaries
4500

Lead Speakers



Rotarian Couple
Rtn. Sivakumar
Rtn. Savithri

A Project by
Rotary Club of Virudhunagar
RI Dist-3212

Do you wish to Organize
FAMILY FIRST
for your club members?
We are waiting to
partner with you.

WHATSAPP: 99447 66667

LEKHA ads/Oct 2023/Rotary/2



Wrapper Back and Back Inside - Tamil - October 2023.indd 83 9/27/2023 12:05:07 PM

Registered No. TN/CCN/677/2022-2024
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP-611/2022-24
Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹40
Regd with RNI TNTAM/2018/76372. Rotary News Tamil Published 1st week of every month. Posted at Egmore RMS Patrika Channel. Date of posting: 9–15 every month.

ADVT.

